REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஓகஸ்ட் 12 வெள்ளிக்கிழமை


# தினகரன்
THINAKARAN
තිනකරන්
1932 - 2022

வரு. 90 இல. 189 | Friday 12, August, 2022 | 16பக்கங்கள் | 40/-

## பேராயர் ரஞ்சித்துக்கு கொரோனா தொற்று

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்

லோரன்ஸ் செல்வநாயகம்




பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கொரோனா வைரஸ் நோயில் 06

மனோ, C.V, ஹக்கீம், ரிஷாத் தரப்பினருடன் கலந்துரையாடல்

## சகல கட்சிகளுக்கும் நியாயமான பிரதிநிதித்துவம் வழங்கி புதிய ஆட்சி

சர்வகட்சி அரசே தனது இலக்கு என ஜனாதிபதி தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

ஒவ்வொரு கட்சிக்கும் நியாயமான பிரதிநிதித்துவத்துடன் கூடிய ஒரு ஆட்சிக் கட்டமைப்பை உருவாக்குவதே தமது நோக்கமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் பல்வேறு கட்சிகளுடன் (10) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு 06



உல்லாசப் பயணிகளை கவரும் வகையில்

## கொழும்பு - பதுளை சொகுசு ரயில் சேவை நாளை ஆரம்பம்

போக்குவரத்து அமைச்சு புதிய ஏற்பாடு



லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பு பதுளைக்கிடையிலான அதி சொகுசு ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்து வசதிகளை கவனத்திற்கொண்டு அமைச்சர் பந்துல குணவர்தனவின் ஆலோசனைக்கமைய இந்த அதிசொகுசு ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. 06

சீனாவிலிருந்து தருவிக்கப்பட்ட பலகோடி ரூபா பெறுமதியான



## பத்து ரயில் பெட்டிகள் கவனிப்பாரற்ற நிலையில்!



உடனடி விசாரணைகளை நடத்த அமைச்சர் பந்துல பணிப்பு

2009 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் தருவிக்கப்பட்டதாக தகவல்; புத்தளம் ரயில் நிலையத்துக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டது

சீனாவிலிருந்து தருவிக்கப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான 10 ரயில் பெட்டிகள் புத்தளம் புகையிரத நிலையத்துக்கருகில் கவனிப்பாரற்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் உடனடி விசாரணைகளை ஆரம்பிக்குமாறு போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். 06

## இலங்கையின் பங்காளியாக இணைந்து செயற்பட ஐரோப்பிய ஒன்றியம் தயார்

ஜனாதிபதி ரணிலை சந்தித்து உரையாடியபின் டுவிட்டரில் பதிவு



இலங்கையின் தற்போதைய சூழ்நிலையில் இலங்கையின் பங்காளியாக தமது ஒன்றியம் தன்னை முன்னிறுத்துமென ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்கள் குழுவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. அதனையடுத்து ஐரோப்பிய ஒன்றியம் தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள 06



## ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்து படமெடுத்த இரு பெண்கள் கைது

சமூக வலைத்தள படங்களை வைத்து CID அதிரடி 03



கண்டி எசல பெரஹரவின் இறுதி ரந்தொலி பெரஹர நேற்று மிக சிறப்பாக நடைபெற்றது.
(படம்: சுலோச்சன கமகே)

## நாட்டில் 20 வீத குழந்தைகள் எடை குறைவான நிலையில்!

எதிர்கால சந்ததி பேரழிவை சந்திக்கும் ஆபத்து



சிறுவர் மருத்துவமனைக்கு வரும் குழந்தைகளில் 20 வீதமானவர்கள் கடந்த சில மாதங்களில் இருந்ததை விட அதிக எடை குறைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாக குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்தார்.

இந்நிலையை உடனடியாகத் தடுக்க, குழந்தைகளுக்கு 06

## மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் விவாதம்

29 ஆம் திகதி பாராளுமன்றத்தில்

லோரன்ஸ் செல்வநாயகம்



மின் கட்டணத்தை 75 வீதத்தால் அதிகரிக்கவுள்ளமை தொடர்பில் பாராளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை எதிர்வரும் 29 ஆம் திகதி நடத்துவதற்கு பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான தெரிவுக் குழு தீர்மானித்துள்ளது.

அதற்கான ஒருநாள் விவாதம் எதிர்வரும் 06



## குறுக்கே கொத்தி குழாய் பொருத்தியபோது வீதியை சேதப்படுத்தியவரிடம் தண்டம் அறவிட்ட மாநகரசபை

02

## நான்காவது பூஸ்டர் தடுப்பூசி பெறுவதில் மக்கள் அசமந்தம்

இதுவரை 71, 388 பேரே 4 வது ஊசியை பெற்றுள்ளனர்

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையடுத்து கொரோனா ஒழிப்புக்கான நான்காவது பூஸ்டர் தடுப்பூசியை இதுவரை 71,388 பேர் மட்டுமே பெற்றுக் கொண்டுள்ளதாக சுகாதார மற்றும் தொற்றுநோய் பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் 06

நிர்வாகம், அபிவிருத்தி, செலவின முகாமைத்துவம்

## மாகாண நிர்வாக பொறுப்புக்களை ஆளுநர்களிடம் ஜனாதிபதி கையளிப்பு

ஜனாதிபதி செயலாளர் எழுத்து மூலமாக அறிவித்தார்



மாகாண சபைகளின் செலவுகள், மாகாண நிர்வாகம், அபிவிருத்தி ஆகிய செயன்முறைகளை உரிய முறையில் பேண வேண்டிய பொறுப்பு ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, இது குறித்து அனைத்து மாகாண ஆளுநர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இன்றைய சவாலான காலகட்டத்தில், பொதுச் செலவினங்களை 06

காலிமுகத்திடல் போராட்டம் குறித்து சமூக ஊடகங்களில் விஷம பிரசாரம்

## பிரித்தானிய பெண்ணுக்கு வீசா வழங்கல் நிறுத்தம்

15ஆம் திகதிக்கு முன் நாட்டைவிட்டு வெளியேறுமாறு அறிவிப்பு



குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அதிரடி முடிவு

போராட்டக்காரர்களின் தலையில் கைத்துப்பாக்கிகள் வைக்கப்படுவதாக இணையத்தில் பொய்யான தகவல்களை பரப்பி காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக செயற்பட்டதாக கூறப்படும் பிரிட்டன் யுவதியின் வீசாவை இரத்துச் செய்ய இலங்கை குடிவரவு குடியகல்வு 06

## மாவட்ட அபிவிருத்தி குழு தலைமைப் பதவி வேண்டாம்

TNA ஏற்காது என்கிறார் சிறிதரன் MP



மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் பதவியை கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருபோதும் ஏற்கமாட்டோம் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

சமகால அரசியல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து 06

## டெங்கு நோயாளர் தொகையில் அதிகரிப்பு

25 சிறுவர்களும் நோயினால் பாதிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் மீண்டும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் 06

வெடிமருந்து தயாரிப்பில் நிபுணத்துவமுடைய

## புலிகளின் புலனாய்வு பிரிவு உறுப்பினர் அபுதாபியில் கைது

இலங்கையிடம் விசாரணைக்காக ஒப்படைப்பு



விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினரும் வெடிமருந்துகள் தொடர்பில் நிபுணத்துவம் கொண்டவருமான ஒருவர் அபுதாபியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இவருக்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 06

## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு

நீதியமைச்சினால் பரிந்துரை செய்யப்பட்டது

லோரன்ஸ் செல்வநாயகம்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றம் தொடர்பில் தெரிவித்திருந்த கருத்து சம்பந்தமாக வருத்தம் தெரிவித்து சத்தியக்கடதாசியொன்றை நீதிமன்றத்துக்கு 06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிய 121 பேர் இதுவரை உயிரிழப்பு

ஓமந்தை விஷேட நிருபர்

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி போராட்டம் மேற்கொண்டு வரும் அவர்களது உறவுகள் பல்வேறு போராட்டங்களை நீண்டகாலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி அலைந்து பல துன்பங்களையும், துயரங்களையும் சுமந்து வயோதிப காலங்களில் நோய் வாய்ப்பட்டு வைத்தியசாலைகளிலும் ஏனைய உறவுகளின் பாதுகாப்பிலும் இருந்து வருகின்றனர்.

இவ்வாறு தமது உறவுகளை தேடியலைந்து 121 உறவுகள் நோயினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 16 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக உறவுகள் தெரிவித்துள்ளனர். வடகிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் வீதிகளிலிருந்து தமது போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். சர்வதேசத்தின் தலையீடுகளை கோரியும் ஐக்கிய நாடுகள் தமது விடயங்களில் தலையீடு செலுத்தி தீர்வுகளை பெற்றுத்தருமாறு கோரியும் உறவுகள் தமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இவர்கள் (12.08.2022) இன்றுடன் 2000 நாட்களை கடந்தும் போராடி வருவது குறிப்பிடதக்கது.

# வடக்கின் உதயம்

## சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள் கண்காட்சி



யாழ்.மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு நடாத்தும் சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களுக்கான விற்பனை கண்காட்சி நிகழ்வானது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்.சங்கிலியன் பூங்காவில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் கலந்து சிறப்பித்ததோடு, சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலாளர் திருமதி அன்ரன் யோகநாயகம் எழிலரசி, மாநகரசபை ஆணையாளர் தனபாலசிங்கம் ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வானது விற்பனை மற்றும் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்டு நடைபெறுவதோடு, இதில் மட்பாண்ட உற்பத்திகள் மற்றும் எரிபொருள் அடுப்பு, விவசாய உற்பத்திப் பொருட்கள், உணவு உற்பத்திப் பொருட்கள், ஆடை உற்பத்திகள் மற்றும் பிற உள்ளூர் உற்பத்திப்பொருட்கள் ஆகியன விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## வீதியை சேதப்படுத்தியவருக்கு 3 இலட்சத்து 87 ஆயிரம் அபராதம்

யாழ். விசேட நிருபர்


யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சொந்தமான வீதியை சேதப்படுத்தியவரிடமிருந்து, 3 இலட்சத்து 87ஆயிரம் ரூபாவை மாநகர சபை அறவிட்டுள்ளது.

யாழ். நகர் மத்தியை அண்டிய பகுதியில் வசிக்கும் குடியிருப்பாளர் ஒருவர் , வீதியின் மறுபக்கம் இருந்த வெள்ள வாய்க்காலுக்குள் வீட்டு கழிவு நீரினை விடுவதற்கு ஏதுவாக வீதியை குறுக்கறுத்து கிடங்கு வெட்டி , பைப் மூலமாக கழிவு நீரை வெள்ள வாய்க்காலுக்குள் விட்டுள்ளார். இது தொடர்பில் அறிந்து விசாரணைகளை முன்னெடுத்த மாநகர சபை அதிகாரிகள் , வீதியினை சேதப்படுத்தியமை, வெள்ள நீர் ஓடுவதற்காக கட்டப்பட்ட வாய்க்காலுக்குள் கழிவு நீரினை விட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை குடியிருப்பாளர் மீது சுமத்தினர்.

குடியிருப்பாளர் அனைத்து குற்றச்சாட்டுக்களையும் ஏற்றுக்கொண்டமையை அடுத்து, வீதியை சேதப்படுத்தியமைக்கான நஷ்ட ஈடு மற்றும் தண்டப்பணமாக 3 இலட்சத்து 87ஆயிரம் ரூபாயை மாநகர சபை அறவிட்டுள்ளது.

## போலி நாணயத்தாள்களை கொடுத்து ஏமாற்றியவர் கைது

யாழ். விசேட நிருபர்



இளவாலை மற்றும் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுகளிலுள்ள கடைகளில் 5 ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்களைக் கொடுத்து ஏமாற்றிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பன்னாலையைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை மற்றும் இளவாலை பொலிஸ் பிரிவுகளிலுள்ள கடைகளுக்கு அண்மைய நாட்களில் சென்ற ஒருவர் 5 ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்களை வழங்கி பொருட்களை வாங்கிவிட்டு மிகுதிப் பணத்தை பெற்றுச் சென்றுள்ளார்.

போலி நாணயத்தாள்கள் என அறிந்த கடைக்காரர்கள் இருவர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

முறைப்பாடுகள் தொடர்பில் காங்கேசன்துறை பிராந்திய புலனாய்வு பிரிவின் தகவலின் அடிப்படையில் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் 27 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். போலி நாணயத்தாள்களை அச்சிடப் பயன்படுத்திய உபகரணங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை ஆஜர்படுத்தப்பட்டார். சந்தேக நபரை வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை, நல்லூர் ஆலய சூழலில் ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்களை பயன்படுத்திய ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார். எனவே பலர் இவ்வாறான மோசடியில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.



மன்னார் புனித லோறன்சியாரின் ஆலய வருடாந்த விழா தலைமன்னார் பங்கு தந்தை அருட்பணி மாக்கஸ் அடிகளாரின் தலைமையில் ஒன்பது தினங்கள் நவநாட்களைத் தொடர்ந்து புதன்கிழமை ஆலய பெருவிழா இடம்பெற்றபோது...

படம்; தலைமன்னார் விஷேட நிருபர்

## நுணாவில் ஐ.ஓ.சியில் இன்று கமக்கார அமைப்புக்களுக்கு டீசல் வழங்கல்

சாவகச்சேரி விஷேட நிருபர்

நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை தென்மராட்சிப் பிரதேச உழவியந்திரங்களுக்கு கமக்கார அமைப்புக்கள் ஊடாக டீசல் வழங்கி வைக்கப்படும் என எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் வை.சிவராசா தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பெரும்போக நெற்பயிர்ச் செய்கையை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேச விவசாயிகளின் உழவியந்திரங்களுக்கு டீசல் விநியோகிக்கப்படும். விவசாயிகள் தமது கமக்கார அமைப்பின் ஊடாக விபரங்களை சமர்ப்பித்து கியூ. ஆர் முறைமை அடிப்படையில் உழவியந்திரங்களுக்கான டீசலைப் பெற்றுக்கொள்ள முடியும் என மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

## யாழில் பெட்ரோல் பெற காத்திருந்த இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் புதன்கிழமை பெட்ரோல் பெற காத்திருந்தவர் திடீரென மயங்கி சரிந்து உயிரிழந்துள்ளார். புன்னாலைக்கட்டுவன் பகுதியை சேர்ந்த சிவசோதிலிங்கம் சொரூபன் (வயது 38) என்பவரே உயிரிழந்துள்ளார். குறித்த நபர் தனது மோட்டார் சைக்கிளுக்கான பெட்ரோலை பெற்றுக்கொள்ள தனது QR குறியீட்டை காண்பித்த நிலையில், மோட்டார் சைக்கிளுடன் மயங்கி சரிந்து விழுந்துள்ளார். அதனை அடுத்து அங்கிருந்தவர்கள் அவரை வைத்தியசாலையில் அனுமதித்த போதும், அவர் உயிரிழந்துள்ளார். ஆரம்ப கட்ட வைத்திய பரிசோதனைகளின் அடிப்படையில் உயிரிழப்புக்கு மாரடைப்பே காரணம் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் கைது

யாழ். விசேட நிருபர்

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் திருகோணமலையில் இருந்து வருகை தந்து நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 340 லீற்றர் (2 பரல்)கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.




வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்திர மகோற்சவ 10ஆம் திருவிழா நேற்றைய தினம் வியாழக்கிழமை மிக சிறப்பாக நடைபெற்றது. படம் யாழ்.விசேட நிருபர்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த் யாழ்.விஜயம்

யாழ். விசேட நிருபர்

கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த் தலைமையிலான உயர்மட்டக் குழு அடுத்த வாரம் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த், கல்வி அமைச்சின் செயலாளர் எம். என். ரணசிங்க மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க ஆகியோருடன் கல்வி அமைச்சின் அதிகாரிகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உபதலைவர், உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரே எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சிக்கும், 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

18 ஆம் திகதி வியாழக்கிழமை, முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்ப பீடத்தில் அமைக்கப்பட்டுள்ள மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியின் வைபவ ரீதியான திறப்பு விழாவும் இடம் பெறவுள்ளது. அரசாங்கத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 525 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதியைக் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம் ஜெயந்த் திறந்து வைக்கவுள்ளார்.




# வட்டவளை பாடசாலை பிரதான வீதிக்கு அருகில் மண்சரிவு அனர்த்தம்





(கினிகத்தேனை தினகரன் நிருபர்)

வட்டவளை பாடசாலை பிரதான வீதிக்கு அருகில் மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டமையால் பாடசாலை கட்டடங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அண்மையில் மலையகத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையை தொடர்ந்து இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. பாடசாலையின் பிரதான வீதிக்கு அருகில் ஏற்கனவே ஒருமுறை மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டிருந்தது. அதுபோல் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக பாடசாலை கட்டடத்திற்கு அருகில் வெடிப்புகளும் ஏற்பட்டுள்ளன. இதனால் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தமுடியாத நிலையும் இருப்பதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அண்மையில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட மண்பரிசோதனையில் பாடசாலை அமைந்துள்ள பகுதியில் மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயகரமான நிலை காணப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

மேலும் பாடசாலை அமையப் பெற்றுள்ள நிலஅமைப்புக்கு ஏற்ப பாடசாலையின் பின்பகுதியும் அதை போல் பாடசாலை முன் பகுதியும் ஏதோ ஒரு வகையில் அடிக்கடி மண்சரிவுக்கு உட்படும் பகுதியாக காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் பாடசாலை அமைந்துள்ள நிலப்பகுதி ஒரு வகையில் பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்கு பாதுகாப்பற்ற நிலப்பகுதியாக காணப்படுகின்றது.

பாடசாலை பிரதான வீதிக்கு அருகில் மண்சரியும் பகுதியில் பாதுகாப்பு சுவர் அமைப்பதற்கு இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் அனுமதியும் வழங்கியிருந்தது.அதுவும் தற்போது காலம் கடந்த ஒன்றாக காணப்படுகின்றது. மலையகத்தை பிரதநிதித்துப்படுத்தும் மக்கள் பிரதநிதிகள் அப்பாதையின் வழியேதான் செல்கின்றனர். அவர்களின் கவனத்திற்கு கூடவா இது தெரியவில்லை என மக்கள் கவலைதெரிவிக்கின்றனர். எனவே அப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் பாதுகாப்பு கருதி மண்சரிவு அபாயத்திலிருந்து பாதுகாப்பான ஒரு நிலையை ஏற்படுத்தி தருமாறு பாடசாலை பிள்ளைகளின் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.

# மலைச்சாரல்



மாத்தளை மாவட்டத்தில் பல்லேபொல வர்த்தக சங்கம் மற்றும் மஹவெல பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் வசதி குறைந்த குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருட்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. பல்லேபொல விகார மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட தம்புள்ளை பிரதேச சபை உறுப்பினர் திசாநாயக்க பயனாளி ஒருவருக்கு உலர் உணவுப் பொடியை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

படம் மாத்தலை சுழற்சி நிருபர்

## மறே – நல்லதண்ணி வீதியில் மண்சரிவு அபாயம்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்.



மறே – நல்லதண்ணி பிரதான வீதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டுள்ளமையால் மாற்று வீதியை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதனால் அப்பகுதிக்கும் வரும் மக்கள் பாரிய அபாயத்தின் மத்தியில் பயணிப்பதாக தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். தாழிறங்கும் மண் திட்டுகள் வெட்டி அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி தெரிவித்தார். அவ்வாறு மண் திட்டுகள் அப்புறப்படுத்தப்பட்டால் பாரிய மண்சரிவு அபாயம் நீங்கும்.

அவ்வாறு மண் திட்டுகள் அகற்றப்பட்டால் அந்த இடத்தில் வெட்டப்படும் மண் கொட்டுவதற்கு இடம் ஒதுக்க வேண்டும் என கூறப்படுகின்றது.

## எம்பிலிப்பிட்டியவில் ஆயுதங்களுடன் இருவர் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

எம்பிலிப்பிடிய பிரதேசத்தில் ஆயுதங்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் உடவளவ விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல்களையடுத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களிடமிருந்து ரி 56 துப்பாக்கி ஒரு மெகசின் துப்பாக்கி உட்பட துப்பாக்கி தோட்டாக்கள் பலவும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் மோதரவான மற்றும் பின்னவல பிரதேசங்களில் வசிப்பவர்கள் என தெரியவந்துள்ளது. இவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக மீட்கப்பட்ட பொருட்களுடன் எம்பிலிப்பிடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.



தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 ஓகஸ்ட் 12 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN




**தொழுகை நேரம்**
10 முதல் 14 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.45 |
| லுஹர் | 12.17 |
| அஸர் | 03.35 |
| மஃரிப் | 06.27 |
| இஷா | 07.40 |

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் ஆடி 27

ராகுகாலம் : பகல் : 10.30 - 12.00வரை
சுபநேரம் : காலை : 9.00 - 10.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: பிரதமை

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | சுகம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | மறதி |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | செலவு |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | கோபம் |
| மீனம் | வெற்றி |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# எரிபொருள் விநியோகம் வெளிநாட்டு நிறுவனங்களுக்கா?



## உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு

எரிபொருள் இறக்குமதி, கொள்வனவு, விநியோகம் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை நீண்டகால அடிப்படையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்க அமைச்சரவை எடுத்துள்ள தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யும் உத்தரவொன்றை பிறப்பிக்கக் கோரி உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுதந்திர சேவையாளர் சங்கம், அதன் தலைவர் சேத்திய பண்டார ஏக்கநாயக்க மற்றும் செயலாளர் பண்டார அரம்பேகும்புர ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுவின் பிரதிவாதிகளாக ஜனாதிபதிக்கு பதிலாக சட்ட மாஅதிபர், பிரதமர், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர, அமைச்சரவையின் ஏனைய உறுப்பினர்கள், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், உள்ளிட்ட 28 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்படும் நிறுவனங்களுக்கு நேரடியாக எரிபொருளை கொள்வனவு செய்தல், நாட்டுக்குள் இறக்குமதி செய்தல், நாட்டுக்குள் விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க அனுமதியளித்து அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளதாக கடந்த ஜூன் 29ஆம் திகதி ஊடகங்கள் ஊடாக அறிந்து கொண்டதாக மனுதாரர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த ஜூன் 24ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட இந்த அமைச்சரவை தீர்மானத்தின் படி நீண்டகால அடிப்படையில் எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடுகளில் அமைந்துள்ள நிறுவனங்களுக்கு எமது நாட்டுக்குள் நேரடியாக எரிபொருள் இறக்குமதி செய்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை முன்னெடுத்தல் ஆகியவற்றுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேராதனை, அம்பதலை பகுதிகளில் தோட்டாக்கள் மீட்பு

## STFஇன் சுற்றிவளைப்பில் அகப்பட்டது



பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் அம்பத்தலை ஏரிக்கருகில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் பயன்படுத்தப்படாத இரு தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்தத் துப்பாக்கி திட்டமிட்டு குற்றச் செயல்களில் ஈடுபட்டுவரும் குழுவொன்றினால் பயன்படுத்தப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் (10) கண்டெடுக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் மேலதிக விசாரணைகளுக்காக முல்லேரியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடற்படை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கண்டி, கண்ணொருவ பாலத்தின் மத்திய பகுதியின் கீழ் 23 தோட்டாக்கள் மற்றும் வெற்று தோட்டாக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றில் 15 எம்எம் தோட்டாக்கள் 16, ரி 56 தோட்டாக்கள் 04, 7.62 ரக தோட்டாக்கள் 3, 9 மி.மீ ரக வெற்று ஷெல் மற்றும் அடையாளம் காணப்படாத தோட்டாக்கள் அடங்குவதாக பேராதனை பொலிஸார் தெரிவித்தனர் .

# வெல்லவாய பகுதியில் 05 வயது சிறுமி மாயம்

## வீட்டுக்கு வந்த நபர் மீது சந்தேகம்

வெல்லவா ய பகுதியில் பெற்றோருடன் வசித்து வந்த சிறுமியொருவர் காணா மல் போயுள்ளதா க பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெல்லவாய முஸ்லிம் பள்ளிவாசலுக்கு பின்புறமாக வசித்து வந்த செத்மி அன்சிகா என்ற 05 வயது சிறுமியே இவ்வாறு காணாமல் போயுள்ளாரென வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர். சிறுமியின் வீட்டுக்கு கூலி வேலை செய்வதற்காக நபர் ஒருவர் வந்து செல்வதாகவும் நேற்று முன்தினம்

06

# 'L' போர்டுடன் வந்த கார் மோதி 14 வயது மாணவன் ஸ்தலத்தில் பலி

## பாணந்துறையில் சம்பவம்

லோரன்ஸ் செல்வநாயகம்

பாணந்துறை பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் ஒன்பதாம் வகுப்பில் கல்வி கற்கும் 14 வயது சிறுவன் துரதிஷ்டவசமாக பலியாகியுள்ளார்.

சிறுவன் சைக்கிளை நிறுத்தி வைத்திருந்த போது எதிர்புறத்தில் பயணித்த கார் மோதியதில் அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

பாணந்துறை மாலமுல்ல சந்தியில் இடம்பெற்றுள்ள மேற்படி விபத்தில் பாணந்துறை பின்வல பிரதேசத்தைச் சேர்ந்த விஹக சதேவ் டி சில்வா என்ற 14 வயது பாடசாலை மாணவரே உயிரிழந்துள்ளார்.

மாணவர் மேலதிக வகுப்புக்கு சென்று திரும்பி வரும்போது மாலமுள்ள கிராமிய வங்கிக்கு முன்னால் வீதிக்கு அருகில் சைக்கிளை நிறுத்தி வைத்திருந்த வேளையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

'L' போட்டுடன் பெண்ணொருவர் செலுத்தி வந்துள்ள காரே வீதியை விட்டு விலகி மேற்படி சிறுவனின் சைக்கிள் மீது மோதியுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சைக்கிளில் மோதிய கார் அதன் அருகிலுள்ள கொங்கிரீட் தூண் மீது மோதி நின்றதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் பாணந்துறை அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

**சர்வ கட்சி அரசு அமைப்பு தொடர்பில்**

# JVP யின் முடிவுக்கு ஜனாதிபதி வருத்தம்

## ஆதரவளிப்பர் என நம்புவதாக தெரிவிப்பு



சர்வ கட்சி அரசாங்கம் தொடர்பிலான கலந்துரையாடலில் பங்கேற்கப் போவதில்லையென்ற தேசிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வருத்தத்தை தெரிவித்துள்ளார்.

சர்வ கட்சி பேச்சுவார்த்தையில் பங்கேற்கப் போவதில்லையென தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவினால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்துக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். அக்கடிதத்தில் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையிலிருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதற்கான சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கு அனுரகுமார திஸாநாயக்க ஆதரவளிப்பாரென தான் நம்புவதாகவும் ஜனாதிபதி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**விரிவுரை மற்றும் பக்தி நடனம்**

# சுபாஷினி பத்மநாதனின் இணைய நேரடி ஒளிபரப்பு

## இன்று மாலை 6 மணிக்கு



புகழ் பெற்ற பரத நாட்டியக் கலைஞர், கலாநிதி சுபாஷினி பத்மநாதனின் இணைய நேரடி ஒளிபரப்பு விரிவுரை மற்றும் பக்திநடன நிகழ்ச்சி இன்று மாலை 6 மணிக்கு இணையத்தில் ஒளிபரப்பாகவுள்ளது. கொழும்பு வேல் திருவிழாவின் வரலாறு மற்றும் வளர்ச்சி என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெறும். இன்று மாலை 6 மணிக்கு இந்தநிகழ்ச்சியை SVCC, Colombo FACEBOOK பக்கத்திலும் https://www.facebook.com/ICCRSriLanka என்ற இணைய இணைப்பிலும் பார்வையிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்து படமெடுத்த இரு பெண்கள் கைது

## சமூக வலைத்தள படங்களை வைத்து CID அதிரடி



கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்து ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்து எடுத்த புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்ட இரு பெண்களை கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று (11) கைது செய்தனர்.

அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மொரட்டுவ பிரதேசத்தில் வசிக்கும் இரண்டு பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் பாணந்துறை பிரதேசத்தில் இரண்டு வர்த்தக நிலையங்களை நடத்திவருவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# தென் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கைது

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெத ஆராய்ச்சியின் சகோதரர் நிஹால் வெத ஆராச்சி தங்காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்காலை கார்ல்டன் இல்லத்திற்கு அருகில் மே 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். நிஹால் வெத ஆராச்சி தென் மாகாணசபையின் முன்னாள் உறுப்பினராவார்.

# கோழி இறைச்சி, முட்டை, மீன் விலைகள் சந்தையில் வெகுவாக அதிகரிப்பு

## நுகர்வோர் பெரும் அசௌகரியம்

லோரன்ஸ் செல்வநாயகம்

சந்தையில் கோழி இறைச்சி, முட்டை மற்றும் மீன் வகைகளின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இந்த விலை அதிகரிப்பை நிவர்த்திசெய்யும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சந்தையில் தற்போது கோழி இறைச்சியின் விலை 1,300 மற்றும் 1,400 ரூபாவுக்குமிடைப்பட்டதாகக் காணப்படுவதுடன் முட்டையின் விலை 55 ரூபாவிலிருந்து 60 ரூபாவரை விற்பனை செய்யப்படுகிறது. கோழித்தீன் விலை அதிகரிப்பே கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலை இந்தளவு அதிகரிப்பதற்கான காரணமென்றும் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறெனினும் மீன் வகைளின் விலையும் வெகுவாக அதிகரித்துக் காணப்படுகிறது. 300 ரூபாவுக்கும் 350 ரூபாவுக்குமிடையில் விற்செய்யப்பட்ட சூடை மீன் ஒரு கிலோ தற்போது 1,000 – 1,300 ற்கும் இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுவதுடன் 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த கெலவல்லோ ரக மீன்கள் தற்போது 1,500 – 1,800 வரை விற்பனை செய்யப்படுகின்றன.

ஏனைய அனைத்து மீன் வகைகளின் விலைகளும் வெகுவாக அதிகரித்துள்ளதாக நுகர்வோர் கவலை தெரிவிக்கின்றனர்.


දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

2022/2023 ஆம் வரி மதிப்பீட்டாண்டு
மதிப்பிடப்பட்ட செலுத்தப்பட வேண்டிய வரிக் கூற்று (SET)
வருமான வரியின் 1 ஆம் தவணைக் கொடுப்பனவு




தனிநபர்கள், பங்குடமைகள், கம்பனிகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அனைத்து ஆட்களும்

2022 ஆகஸ்ட் 15 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கூற்றினை கோப்பிடவும்

- இ-சேவை ஊடாக
  (மேலதிக தகவல்களுக்கு www.ird.gov.lk இ-சேவைக்கான அணுகல்)

  அல்லது
- நேரடியாக
  (உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை காரியாலயத்திலுள்ள மத்திய ஆவணப்படுத்துகை அலகில் (CDMU) அல்லது எந்தவொரு பிராந்திய அலுவலகத்திலும்)

2022 ஆகஸ்ட் 15 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ 1 ஆம் தவணைக் கொடுப்பனவை மேற்கொள்ளவும்

- இணையவழி வரி கொடுப்பனவு தளத்தின் ஊடாக (OTPP)
  மேலதிக விபரங்களுக்கு - 2021.02.08 ஆம் திகதிய PN/PMT/2021-01 இலக்க, 04.06.2021 ஆம் திகதிய PN/PMT/2021-04 இலக்க 21.12.2021 ஆம் திகதிய PN/PMT/2021-04 (திருத்தப்பட்ட) ஆம் இலக்க மற்றும் 2022.05.17 ஆம் திகதிய PN/PMT/2022-01 ஆம் இலக்க அறிவித்தல்களைப் பார்க்க www.ird.gov.lk இற்கு செல்லவும்

  அல்லது
- எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும்
  காசோலையின் பின்பகுதியில் உங்கள் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தை எழுதவும்

வருமான வரிக் கொடுப்பனவை செலுத்தாது விடுதல் அல்லது பிந்திய கொடுப்பனவின் மீதான தண்டம், தள்ளுபடி செய்யவோ அல்லது குறைக்கப்படவோ மாட்டாது

இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை அறிந்துகொள்ள கிரமமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வலைத்தளத்தைப் பார்வையிடவும்

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

IRD 1944
வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக
www.ird.gov.lk https:www.facebook.com/irdcolsl


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 246.73 | 258.44 |
| கனடியன் டொலர் | 276.09 | 289.20 |
| யூரோ | 361.55 | 376.29 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 257.32 | 268.29 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 431.68 | 449.77 |
| சுவிஸ் பிராங்க் | 369.23 | 386.78 |
| அமெரிக்க டொலர் | 357.22 | 368.54 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹறின் டினார் | 957.32 | கட்டார் ரியால் | 98.04 |
| குவைத் டினார் | 1,176.03 | சவூதி ரியால் | 95.99 |
| ஓமான் ரியால் | 937.45 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.26 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 27ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 13

### குறள் தரும் சிந்தனை

தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு

துணிவு, துணை, தூய ஒழுக்கம்
ஆகிய இம்மூன்றும் தூதுவர்க்குத்
தேவையானவைகளாகும்.

# கொவிட் அச்சுறுத்தலை மக்கள் அலட்சியம் செய்யலாகாது!

இன்றைய நவீன அறிவியல் யுகத்தில் உலகுக்கே பெரும் சவாலாக விளங்கிக் கொண்டிருக்கும் கொவிட் 19 தொற்று கடந்த வருடத்தின் பிற்பகுதி முதல் இந்நாட்டிலும் பெருவீழச்சி நிலைக்கு கொண்டு வரப்பட்டது. இதற்கு கொவிட் 19 தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார வழிகாட்டல்களும், கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியும் பெரிதும் உதவின.

இந்நிலையில் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகவும் உயிரிழந்தவர்களாகவும் நாளாந்தம் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கை பெருவீழ்ச்சி நிலைக்கு கொண்டு வரப்பட்டது. இதன் ஊடாக உலகின் ஏனைய நாடுகளது மக்களைப் போன்று இந்நாட்டு மக்கள் மத்தியிலும் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் துளிர்விட ஆரம்பித்தன.

அதேநேரம் கொவிட் 19 தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைய ஆரம்பமானதைத் தொடர்ந்து, இத்தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களில் இருந்தும் மக்கள் படிப்படியாக தூரமாகத் தொடங்கினர். குறிப்பாக சமூக இடைவெளியைப் பேணுவதிலும், முகக்கவசம் அணிவதிலும் கைகழுவுவதிலும் மக்கள் அசிரத்தை காட்ட ஆரம்பித்தனர். அத்தோடு அநாவசியமானமான பயணங்களை மேற்கொள்ளவும் தொடங்கினர். இந்நாடு இத்தொற்றின் தாக்கத்திற்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்ததா என்று வினவப்படும் அளவுக்கு இன்று நிலைமை வளர்ச்சி பெற்றுள்ளது.

ஆனால் இதே காலப்பகுதியில் சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளின் சில மாநிலங்களில் இத்தொற்று மீண்டும் தீவிரமாகப் பரவும் நிலையை அடைந்திருந்ததோடு, அந்நாடுகளின் சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தல் முடக்கங்களுக்கும் உட்படுத்தப்பட்டன. இருந்தும் இவை தொடர்பிலும் இலங்கையர் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

இவ்வாறான நிலையில் கடந்த ஜுலை மாதத்தின் நடுப்பகுதியின் பின்னர் இந்நாட்டிலும் இத்தொற்றுக்கு உள்ளானவர்கள் மீண்டும் பதிவாகும் நிலைமை உருவானது. இத்தொற்று 2020 ஆம் ஆண்டு மார்ச் நடுப்பகுதி முதல் எவ்வாறு ஒன்று, இரண்டு என்றபடி பதிவாகத் தொடங்கி சொற்ப காலப்பகுதியில் 10, 20 என்றபடி அதிகரித்து சென்றதோ அதே நிலைமை தான் இப்போதும் ஏற்பட்டிருக்கின்றது. இத்தொற்றின் பரவுதல் தொடர்பில் முன்னனுபவத்தைப் பெற்று இருந்தும் கூட அன்று போன்றுதான் இப்போதும் மக்கள் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் 150, 200 என்றபடி நாளாந்தம் இத்தொற்றுக்கு உள்ளானவர்கள் அடையாளம் காணப்படும் நிலைமை தற்போது உருவாகியுள்ளது. அத்தோடு கொவிட் 19 தொற்று காரணமான மரணங்களும் நாளாந்தம் 5, 6 என்றபடி பதிவாகக் கூடிய நிலைமையும் உருவாகியுள்ளது.

இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு முகக் கவசம் அணிதல் உள்ளிட்ட கொவிட் 19 தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களை சுகாதார அமைச்சு மீண்டும் கட்டாயப்படுத்தியுள்ளது. அத்தோடு இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இருந்த போதிலும், கொவிட் 19 தொற்று மீண்டும் தலைதூக்கியுள்ளமை தொடர்பில் மக்கள் பெரிதாக அலட்டிக் கொள்வதாக இல்லை. இதேவேளை நுரைச்சோலை அனல் மின்நிலையத்தில் பணியாற்றும் 103 சீனப் பிரஜைகள் இத்தொற்றுக்கு உள்ளாகி இருப்பது உறுதியாகி உள்ளது. இவர்கள் அனைவரும் கடந்த பத்து நாட்களுக்குள் இலங்கைக்குள் வருகை தந்தவர்கள் என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளதோடு இவர்கள் இத்தொற்றுக்கு உள்ளாகி இருப்பது தொடர்பில் பிரதேச பொதுசுகாதார பரிசோதகருக்கு அறிவிக்கப்படவில்லை என்று பொதுசுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்திருக்கின்றார்.

இது ஆரோக்கியமான நிலைமை அல்ல. கொவிட் 19 தொற்று நாட்டின் சில பிரதேசங்களில் மீண்டும் தலைதூக்கக் கூடிய அச்சுறுத்தலைத் தோற்றுவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதனால் கொவிட் 19 தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதில் ஒவ்வொருவரும் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். அத்தோடு இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதிலும் கூடுதல் கவனம் செலுத்தவும் தவறக் கூடாது.

இவற்றின் ஊடாக இத்தொற்று மீண்டும் தலைதூக்குவதைத் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இல்லாவிடில் இத்தொற்று மீண்டும் தலைதூக்குவதைத் தவிர்க்க முடியாது போய்விடும். அவ்வாறான நிலைமைக்கு துணைபோகும் வகையில் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ளும் போது கடந்த காலத்தைப் போன்று இத்தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பிரதேசங்களை தனிமைப்படுத்தல் முடக்கங்களுக்கும் உள்ளாக்கக் கூடிய நிலைமை கூட ஏற்பட்டுவிடலாம்.

ஆகவே இத்தொற்றின் பரவுதலுக்கு துணை போகாத வகையில் அதனை கட்டுப்படுத்திக் கொள்வதற்கு ஒவ்வொருவரும் பங்களிக்க வேண்டும். அதுவே இன்றைய அவசரத் தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# இந்து, பௌத்த மக்களின் புனிதத் திருத்தலமான கதிர்காமக் கந்தன் ஆலய தீர்த்தோற்சவம் இன்று

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் மாணிக்க கங்கையோரமாக அமைந்துள்ள புனித ஸ்தலம் கதிர்காமம் ஆகும். கதிர் என்றால் சூரியன் என்றும், காமம் என்றால் அன்பு என்றும் கூறுவர். இதனால் 'சூரியனின் அன்பு' நிறைந்த இடம் என்று கதிர்காமம் கருதப்படுகின்றது.

கதிர்காமக் கந்தனின் ஆடி மகாஉற்சவம் ஆடி மாதம் 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருந்தது. இன்று 12 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவுறுகின்றது.

இந்துக்கள் தங்களின் சிறப்பு நிறைந்த இறைவனாக கதிர்காமக் கந்தப்பெருமானை கருதி வழிபட்டு வருகின்றனர். கந்தபுராணத்தில் உள்ள ஏமகூடப் படலத்தில் கதிர்காமச் சிறப்புச் சொல்லப்பட்டிருக்கின்றது. அத்தனை சிறப்பு வாய்ந்தது கதிர்காமம் திருத்தலம்.

பல்லின மக்கள் சங்கமிக்கும் இடமாக தொன்றுதொட்டு விளங்கிக் கொண்டிருப்பது கதிர்காம முருகன் ஆலயமாகும். சிங்கள மொழி இலக்கியமான 'ஸ்கந்த உபாத' என்னும் நூலில் எல்லாள மன்னனை வெல்வதற்கு துட்டகைமுனு மன்னனுக்கு கதிர்காமக் கடவுள் அருள் செய்ததாக சொல்லப்பட்டிருக்கிறது.

இலங்கை வரலாறு கூறும் மகாவம்சமும் கதிர்காமத்தைச் சிறப்பித்துச் சொல்கின்றது. தொல்காப்பியம் கூறும் கந்தழி வணக்க முறையான வாய்கட்டி பூசை செய்யும் முறைமை இன்று வரை கதிர்காமத்தில் இருப்பதைச் சுட்டிக் காட்டும் தமிழறிஞர்கள், திருமுருகாற்றுப்படை கூறும் ஐந்தாம் படை வீடும் கதிர்காமமே என்று குறிப்பிடுகின்றார்கள்.

கப்புறாளைமார் வாய்கட்டி திரைக்குப் பின்னால் முருகப்பெருமானுக்கு பூஜை செய்து வருகின்றனர். இவ்வகை வழிபாடுகளுக்கு



அப்பால் காவடி எடுத்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், தேங்காய் உடைத்தல், தீமிதித்தல், முள்ளு மிதியடி என்று இந்துமத வணக்கமுறைகள் அங்கே பல்லின மக்களாலும் விருப்போடு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அங்கே ஒரு மலையிலிருந்து கிடைக்கும் வெள்ளைநிற திருநீறு கதிர்காமம் வரும் மக்களால் பூசப்படுகின்றது.

சிங்கள மக்கள் 'கதிரகம தெய்யோ' என்று வழிபட்டு வருகின்றார்கள். அங்கே வாழும் பழங்குடிகளான வேடுவர்களுக்கு முருகன் பேரில் அலாதி பக்தி இருக்கின்றது. தங்கள் மாப்பிள்ளைக் கடவுள் என்று கந்தனைப் போற்றுகிறார்கள். வள்ளி திருமணம் நடந்த இடம் கதிர்காமம் என்று இவர்கள் நம்புகின்றனர். இப்படியே தமிழ்,சிங்கள மக்களின் நம்பிக்கையும் இருப்பதோடு, இலங்கையின் இருமொழி இலக்கியங்களிலும் கதிர்காம வள்ளி கல்யாணம் பற்றிய கதைகளைக் காணலாம்.

முருகனின் நாயகியும் தேவேந்திரனின் திருமகளுமான தெய்வானை இங்கு வள்ளியோடு தங்கி விட்ட கந்தக் கடவுளை மீட்டுச் செல்ல முயன்றதாகவும், ஆனால் அந்த முயற்சி தோற்றுப் போகவே வள்ளியும் இங்கேயே தனிக்கோயில் கொண்டுவிட்டதாகவும் ஐதீகக் கதைகள் உள்ளன.

இறைவன் குமரனின் மலைக்கு அருகில் வள்ளிமலை இருக்கின்றது. அங்கே வள்ளி மலை கோயில் உள்ளது. தனியே தேவசேனா கோயிலும் உள்ளது என்றாலும் வள்ளியம்மைக்கே முதன்மையும் சிறப்பும் தரப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆரம்ப காலத்தில் கதிர்காமத்தில் ஆகமபூர்வமான வழிபாடுகள் சில நடைபெற்றது என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும். எவை எப்படி இருப்பினும் முருகப்பெருமான் அங்கு வீற்றிருக்கின்றார் என்பது இந்து, பௌத்த மக்களின் அசையாத நம்பிக்கையாகும்.

போகர் மாமகரிஷி பழனியில் இறைவனால் பழனி ஆண்டவனை நவ பாசாணத்தில் உருவாக்க பணித்த போது, மகரிஷி ஐவரை கதிர்காமம் அனுப்பி அவர்களை இங்கு நிஷ்டையில் ஆளும்படி பணித்தார். அப்போது அவர் அங்கிருந்து சக்தியை ஈர்த்தும் நவகோள்களில் உள்ள பாசாணத்தை ஈர்த்தும் தான் பழனி முருகனின் திருவுருவை முடித்தார் என்றும் முன்னோர் கூறுகின்றனர். சித்தர்கள் அங்கு வாழ்ந்ததற்கான சான்றாக இருப்பது தெய்வானை அம்மன் ஆலயத்திற்கு முன்னால் உள்ள குரு பீடமும் எட்டு சமாதிகளும் ஆகும்.

இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன் எல்லோராலும் முத்துலிங்க சுவாமி என அழைக்கப்பட்ட கிரியானகிரி சுவாமிகள் வடஇந்தியாவில் இருந்து கதிர்காமம் நோக்கி வந்தார். இவர் முருகப்பெருமானே துணையென இங்கு வந்த தவசிரேஷ்டர். இவர் இங்கு வந்து தவத்தில் ஈடுபட்டார். அவர் உருவாக்கிய யந்திரமே இன்றும் அங்கு இருப்பதுடன் பெரஹராவில் யானை மீது வைத்து வலம் வருகின்றனர்.

கந்தசஷ்டி கவசம் என்பது தேவராய சுவாமிகளால் முருகப்பெருமான் மீது இயற்றப்பட்ட பாடலாகும். கந்தசஷ்டி கவசத்தில் கூட 'கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா' என பாடப்பட்டுள்ளமை விஷேட அம்சமாகும்.

**ஆ.நிதாகரன்...**
(பழுகாமம்)

# தலைமுறைகளுக்கு இடையிலான ஒற்றுமையை பேணி எல்லா வயதினருக்குமான உலகத்தை உருவாக்குவோம்!

இளைஞர்களின் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும், இன்றைய உலகளாவிய சமூகத்தில் இளைஞர்களின் திறனைக் கொண்டாடுவதற்குமென ஆண்டுதோறும் ஓகஸ்ட் 12 ஆம் திகதி சர்வதேச இளைஞர் தினம் கொண்டாடப்படுகின்றது.

இன்றைய நாள் இளைஞர்களின் குரல்கள், செயல்கள், முன்முயற்சிகள், அவர்களின் அர்த்தமுள்ள, உலகளாவிய மற்றும் சமமான ஈடுபாட்டைக் கொண்டாடுவதற்கும் முக்கிய நீரோட்டத்துக்கும் வாய்ப்பளிக்கிறது. 17 டிசம்பர் 1999 அன்று, இளைஞர்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களின் உலக மாநாடு நடைபெற்ற போது ஓகஸ்ட் 12 ஆம் திகதியை சர்வதேச இளைஞர் தினமாக அறிவிப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அது பின்னர் அங்கீகரிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையினால் 2022 ஆம் ஆண்டுக்கான சர்வதேச இளைஞர் தினத்துக்கான (International Youth Day 2022) கருப்பொருளின் நோக்கம் 'தலைமுறைகளுக்கு இடையிலான ஒற்றுமை: எல்லா வயதினருக்கும் ஒரு உலகத்தை உருவாக்குதல்' (Intergenerational Solidarity: Creating a World for All Ages) என்பதாகும்.




நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய எல்லாத் தலைமுறையினருக்கும் நடவடிக்கை தேவை என்ற செய்தியை விரிவுபடுத்துவது அவசியம். 2022 சர்வதேச இளைஞர் தினம், தலைமுறைகளுக்கு இடையேயான ஒற்றுமைக்கான சில தடைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். குறிப்பாக வயது வித்தியாசம் என்பது இளைஞர்கள் மற்றும் வயதானவர்களைப் பாதிக்கிறது, அதேநேரத்தில் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் தீங்கு விளைவிக்கும்.

அதுமட்டுமல்லாது ஒரு நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைய, உலகம் அனைத்து தலைமுறையினரின் முழு திறனையும் பயன்படுத்த வேண்டும். தலைமுறை தலைமுறையாக ஒற்றுமை என்பது நிலையான வளர்ச்சிக்கு முக்கியமாகும். 'யாரும் பின்தங்கியிருக்கவில்லை' என்பதை உறுதிப்படுத்த, வெற்றிகரமான மற்றும் சமமான தலைமுறைகளுக்கு இடையேயான உறவுகள் மற்றும் கூட்டாண்மைகளை வளர்ப்பதற்கு இளைஞர்களாகிய நாம் ஒத்துழைக்க வேண்டும்.

கொவிட்19 தொற்றுநோயின் மூன்றாம் ஆண்டில் நாம் செல்லும் போது, எல்லா தலைமுறையினரின் பலம் மற்றும் அறிவைப் பயன்படுத்தும் விதத்தில் செயற்படுவது மிகவும் முக்கியம்.



கட்டுரையாளர்:
**முஹம்மட் ஸாஜீத் ஸமான்**
(யூத் அலைன்ஸ் ஸ்ரீலங்கா அமைப்பின் ஸ்தாபகர், இளைஞர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்)

சர்வதேச இளைஞர் தினம் வெறுமனே குழந்தைகளை நேரடியாக ஊக்குவிப்பதை விட குழந்தைகளின் வாழ்க்கையில் உறுதியான முன்னேற்றங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்துவதற்கான முன்னுரிமையை வழங்குகிறது. ஐ.நாவினால் உருவாக்கப்பட்ட பதினைந்து முன்னுரிமைகளில் எச்.ஐ.வி நோய்களைக் குறைத்தல், குழந்தைப் பருவத்தின் பசியை எதிர்த்துப் போராடுதல் மற்றும் கல்விக்கான கூடுதல் அணுகலை வழங்குதல் போன்றன முன்னுரிமை பெறுகின்றன.

## சர்வதேச இளைஞர் தினம் இன்று

இளைஞர்களில் அதிகமானோர் வேகமானவர்களாகவும், விவேகமற்றவர்களாகவும், குறுகிய நோக்குடையவர்களாகவும் கருதப்படுகிறார்கள். ஆனாலும் தென்னாபிரிக்காவில் அவர்கள் நிறவெறியை வீழ்த்துவதில் முக்கிய பங்கு வகித்தனர், அதனால்தான் அவர்கள் தேசிய இளைஞர் தினத்தை சோவெர்டோ தினம் (Sowerto Day) என்று அறிவித்தனர். நமது உலகை வடிவமைப்பதில் இளம் தலைமுறை மிகவும் முக்கியமானது. தற்போதைய உலக இளைஞர்களின் எண்ணிக்கை (15 முதல் 24 வயதுக்கு இடைப்பட்டவர்கள் 'இளைஞர்கள்' என வரையறுக்கப்பட்டுள்ளது) 1.2 பில்லியன் ஆகும். அந்த எண்ணிக்கை வறிய நாடுகளில் வேகமாக வளர்ந்து வருகிறது.

பெரியவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இடையில் ஒரு வட்ட மேசை விவாதத்தைத் தொடங்குங்கள். இது பெற்றோர் மற்றும் குழந்தைகள் அல்லது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இடையே இருக்கலாம். ஆண்டின் கருப்பொருளைச் சுற்றியுள்ள தலைப்புகளைக் கொண்டு வாருங்கள், இளைய தலைமுறையினர் சொல்வதைக் கேளுங்கள்.

ஒலுவில் மத்திய விசேட நிருபர்

# அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சக்கரநாற்காலிகள் பற்றாக்குறைக்குத் தீர்வு

அநுராதபுரம் போதனா வைத்தியசாலை இலங்கையிலுள்ள மிகப் பெரிய வைத்தியசாலைகளில் மூன்றாவது இடத்தில் உள்ளது. இவ்வைத்தியசாலையில் 2060 படுக்கை வசதிகள் காணப்படுவதுடன் ஆறு அவசர சிகிச்சை பிரிவுகளும் உள்ளன. அங்கு 88 வார்ட்டுகள் காணப்படுகின்றன. வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் உள்ளிட்ட 3500 இற்கும் அதிகமானவர்கள் பணியாற்றுகின்றனர்.

வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் வடபகுதி மக்களும், வடமேல் மாகாணத்தின் கல்கமுவ, அமன்பொள கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த மக்களும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையூடாக சேவையினை பெற்று வருகின்றனர்.

அவ்வைத்தியசாலையில் பயன்படுத்தப்பட்டு ஏலத்தில் விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த அதிகளவிலான சக்கர நாற்காலிகளை மீண்டும் பயன்படுத்தும் விதத்தில் அவை திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் இராணுவ வார்ட்டின் இராணுவ பணியாளர்கள் தெரிவித்தனர்.

போதனா வைத்தியசாலையின் இராணுவ வார்ட்டின் பணியாளர்களது முயற்சியினால் நீண்ட நாட்களாக நிலவி வந்த சக்கரநாற்காலிகளுக்கான பற்றாக்குறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் இராணுவ வார்ட் அதிகாரிகளது முயற்சி மற்றும் அநுராதபுரம் ஜும்மா பள்ளிவாசல் நிருவாகத்தினரது நிதி உதவியுடன் 40இற்கும் அதிகமான சக்கரநாற்காலிகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. அதேவேளை சர்வதேச மனித உரிமைகள் இயக்கத்தின் இலங்கைக்கான ஊடகப்பணிப்பாளரும் சிரேஷ்ட உடகவியலாளருமான மொஹமட் றிஸ்வி மேற்கொண்ட முயற்சியினாலும் கண்டி டின் டி கல்லூரியின் பழைய மாணவரும் தற்சமயம் ஐக்கிய இராச்சியத்தில் வசிப்பவருமான ஹம்ஜாட் வழங்கிய நிதி உதவியுடனும், மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்தவரும் தற்போது வெளிநாட்டில் வசிக்கும் மனித உரிமைகள் அமைப்பின் மகளிர் அணியின் தலைமைப் பதவியினை வகிப்பவருமான பெண் சட்டத்தரணி ஒருவரது மூலமாக கிடைத்த நிதியுதவிகள் மூலம் 60 இற்கும் மேற்பட்ட சக்கர நாற்காலிகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.







அவை அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் நிருவாகத்தினரிடம் அன்மையில் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன. இதன் மூலம் இவ்வைத்தியசாலையில் நீண்ட நாட்களாக நிலவிய சக்கர நாற்காலி பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். வைத்தியசாலை நிருவாகத்தினரது வேண்டுகோள்களுக்கு இணங்க மேலும் சில உதவிகளை செய்வதற்கு நன்கொடையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

சக்கர நாற்காலியொன்றின் தற்போதைய விலை ரூபா ஐம்பது ஆயிரத்துக்கும் அதிகமாகும். குறைந்த விலைக்கு ஏலத்தில் விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த அவற்றை திருத்தியமைத்து வைத்தியசாலைக்கு வழங்கியமைக்காக பலரும் நன்றி தெரிவித்துள்ளனர்.

**ஆதம்பாவா பிர்தௌஸ்...**
(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

# எமது பாரம்பரிய உணவு பண்பாடு இன்றைய பொருளாதார பிரச்சினைக்கு தீர்வாக அமையலாம்

## வண. கலாநிதி து. சி. யோசுவா அடிகளார்



எப்போதும் அனர்த்தம் ஒன்று உருவானால் அதைத் தொடர்ந்து உடனடியாக நிவாரணப் பணி தொடர்கிறது. ஆனால் அனர்த்தத்திற்கான காரண காரியங்களை ஆய்வு செய்து தீர்வுகளை முன் வைக்காது அப்படியே மறந்து விடுவது வழக்கமாகியுள்ளது. இலங்கையில் காலத்திற்கு காலம் ஏற்படும் அனைத்து அனர்த்தங்களாலும் அதிகம் பாதிக்கப்படும் ஏழை மக்களின் ஊட்டச்சத்து குறைவு வீதம் அதிகரித்தே செல்கிறது என கிளிநொச்சி காவேரி கலாமன்றத்தின் நிறைவேற்று இயக்குநர் வண. கலாநிதி து. சி. யோசுவா அடிகளார் தினரகன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

செவ்வி கண்டவர்
**இக்பால் அலி**

### ? இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியில் உணவுப் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வு எவ்விதமாக சமூக மட்டத்தில் செய்யப்படுகிறது?

எப்போதும் அனர்த்தம் ஒன்று உருவானால் அதைத் தொடர்ந்து உடனடியாக நிவாரணப் பணி தொடர்கிறது. ஆனால் அனர்த்தத்திற்கான காரண காரியங்களை ஆய்வு செய்து தீர்வுகளை முன் வைக்காது அப்படியே மறந்து விடுவது வழக்கமாகியுள்ளது. இலங்கையில் காலத்திற்கு காலம் ஏற்படும் அனைத்து அனர்த்தங்களாலும் அதிகம் பாதிக்கப்படும் ஏழை மக்களின் ஊட்டச்சத்து குறைவு வீதம் அதிகரித்தே செல்கிறது. உணவு மற்றும் ஊட்டச் சத்து குறைவான பிரச்சினைகளுக்கான தீர்வு என்பது நிவாரணங்களோடு நின்று விடாது ஆழமான உணவுப் பாதுகாப்பு பண்பாடு ஒன்றை சமூகத்தில் கட்டி எழுப்ப வேண்டிய அவசியம் அவசரமான ஒரு தேவையாக இருப்பதாகவே நான் கருகிறேன்.

ஏனென்றால் இலங்கையில் 60 விகிதத்திற்கு மேற்பட்டவர்கள் ஏதோ ஒரு வகையில் ஊட்டச் சத்துக் குறைபாடு உடையவர்களாக இருப்பதாக ஐக்கிய நாடுகளின் உணவுப் பாதுப்புக்கான வதிவிடப் பிரதிநிதி அண்மையிலே வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

### ? எனவே இதற்கான தீர்வு என்ன?

அநேகமாக மக்களுக்கு உடனடியாக ஊட்டச்சத்து வழங்கப்பட வேண்டும். அதற்கான நிதியைச் சேகரிக்க வேண்டும். உணவு பண்பாடு என்பது இந்த மண்ணுக்குரியது. ஓவ்வொரு மனிதர்களும் அவரவர் சூழலுக்கு ஏற்பவும் தேக ஆரோக்கியத்திற்கும் ஏற்ற வகையான ஒரு உணவுப் பண்பாடு இருக்கிறது. அதை தொடர்ச்சியாக தக்க வைப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஒருவரும் இது வரைக்கும் முறைப்படி செய்ய முன் வருவதில்லை. ஒவ்வொரு அனர்த்தம் வருகிற பொழுதும் ஊட்டச் சத்து குறித்துப் பேசப்படுவதும் உணவு பற்றாக்குறை பற்றிப் பேசப்படுவதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அது இன்றைய பொருளாதார பிரச்சினையில் அதிகமாக பேசப்படுகிறது, உணரப்படுகிறது. ஏனென்றால் பல



கிராமங்களில் மக்கள் நாளாந்த சாப்பிடும் உணவின் அளவைக் குறைத்திருக்கிறார்கள். ஊட்டச் சத்துக்குரிய உணவுகளையும் குறைத்திருக்கிறார்கள். இதனால் நீண்ட கால அடிப்படையில் இளம் சமூகம் மிக மோசமான ஊட்டசத்துக் குறைபாடுடைய சமூகமாக மாறுவதற்கான வாய்ப்பு இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### ? உணவுப் பாதுகாப்பு, பண்பாடு என்று கூறினீர்கள்.அது தொடர்பில் சிறு விளக்கம்?

உணவு என்பது ஒவ்வொரு சமூகத்திற்கும் வேறுபட்டது. நாம் அனைவரும் இலங்கையர் என்ற பொது அடையாளத்திற்குள் இருந்தாலும் கூட இலங்கையில் அனைத்து மக்கள் மத்தியிலும் பொதுவான பல உணவு முறைமைகள் இருந்தாலும் குறிப்பிட்ட சில உணவு முறைமைகள் குறிப்பிட்ட சமூகத்திற்கே உரித்தானதாக இன்று வரை உணரப்படுகிறது. அது ஏதோ ஒரு வகையில் அவர்களுடைய சூழலியல் சார்ந்த மரபு சார்ந்த, உற்பத்தி சார்ந்த விடயங்களோடு தொடர்புபட்டதாக இருக்கும். ஆனால் உணவுப் பண்பாடு கேள்விக்கு மறைமுகமாக ஒரு விடையைக் கொடுக்க வேண்டு



மானால் ஒருவர் வாழும் பிரதேசத்தில் அவருக்கு எதுவாக கிடைக்க கூடியதை எடுத்து அடுத்தவர்களுடைய உணவுக்காகப் பயன்படுத்துவதாகும். வடமாகாணத்தில் நிறைய பனை மரங்கள் இருக்கின்றன. பனை மரங்கள் அதிக இருப்பதால் வட மாகாண சமூகத்தின் மத்தியிலே அதிகமான உணவாக ஒடியல் அல்லது புளுக்கொடியலாகும். இது நீண்ட கால உணவு மரபு. ஆனால் இப்பொழுது சந்தையில் இருக்கக் கூடிய கோதுமை மாவினுடைய வரவிற்குப் பின்பு மிக இலகுவாகவும் மலிவாகவும் நல்ல ஊட்டச் சத்து நிறைந்த அந்த பனை விதைகள் ஏராளமாக குவிந்து கிடக்கின்றன.

ஆனால் அவைகளை எடுத்து உணவாக்கிக் கொள்வதற்கு இந்த சமூகம் மறந்து விடுகிறது. உணவுப் பண்பாடு என்பது அப்படித்தான்.

சூழலில் இருக்கக் கூடிய அந்த வளத்தை எடுத்து அதைத் தனக்கேற்ற உணவாக மாற்றிக் கொள்வதுதான் உணவுப் பண்பாடு. ஏன் இந்தப் பண்பாட்டில் இருந்து மக்கள் மாறுகின்றார்கள் என்று சொல்வோமாயின், சமகால வியாபார மூலோபாயம் என்று கூறுவார்கள். அதாவது சர்வதேச வியாபார மூலோபாயம் என்பது உணவுப் பண்பாட்டின் தனித்துவங்களைச் சிதைப்பதுதான் அதனுடைய பிரதான நோக்கம். தனித்துவமான உணவுப் பண்பாட்டை சிதைத்தால் தான் உலகளாவிய வியாபார உத்திகளை அவர்கள் கையாள முடியும். தங்களுடைய வியாபாரப் பொருட்களைக் கொண்டு வந்து இவ்விதமான ஏழை நாடுகளிலுள்ள மக்களுக்குக் கொடுத்து அவர்கள் தங்களுடைய வியாபாரத்தைச் செய்து கொள்ள முடியும் என்பதைத் சர்வதேச மூலோபாயம் எடுத்தியம்புகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் நாங்கள் தோல்வியடைந்துள்ளோம். அவர்கள் வெற்றியடைந்துள்ளார்கள். ஏனென்றால் பொதுவான அனைத்து இன சமூக மக்களுமே நாம் நமது சூழலில் கிடைக்கக்



கூடிய உற்பத்திப் பொருட்களை படிப்படியாக விட்டது மட்டுமல்ல. நாம் ஏதோ ஒரு வகையில் இறக்குமதி சார்ந்த உணவுப் பொருட்களுக்கு மாறிச் செல்லுகின்ற பழக்கத்திற்கு நம்மை நாம் அடிமைப்படுத்திக் கொண்டதினால் இன்று முற்றுமுழுதாக அவைகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் நாங்கள் மரபான உணவு முறைகளை விட்டு விட்டோம். இன்றை இளம் சமூகத்திற்கு புளுக்கொடியலில் பிட்டு அவிக்கலாம். ஒடியல் மாவில் நாங்கள களி செய்யலாம் என்று தெரியாது நாங்கள் கண தூரம் வெளியே வந்திருக்கிறோம். அதே நேரத்தில் கோதுமை இறக்குமதி செய்வதற்கு டொலருமில்லை. எங்களுடைய மண்ணிலே பனங் கொட்டைகளை எடுத்து அவைகளை பதியும் போட்டு கிழங்காக்கி அதை மாவாக்



குவதற்கான அந்த அறிவும் ஆற்றலுமில்லை. இது மிகக் கவனமாக திட்டம் வகுக்கப்பட்டு நம்முடைய உணவுப் பண்பாட்டில் இருந்து நாங்கள் அந்நியப்பட்டு ஏதோ ஒரு வகையில் அவர்களிடம் தங்கியிருக்கக் கூடிய நிலைக்கு உட்பட்டிருக்கிறோம். இன்று அவர்கள் கோதுமை மா தந்தால் நாங்கள் சாப்பிடலாம். அதன் விலை உயர்ந்து விட்டது. அதற்கு நாங்கள் பணம் கொடுத்து வாங்கிச் சாப்பிட வேண்டிய நிலை வந்து விட்டது. இது தான் உணவுப் பண்பாடு.

இரவிலே சோற்று பானையில் தண்ணீரை ஊற்றி வைத்து விடுவார்கள். அது காலையில் எழும்புகிற பொழுது அது பழஞ் சோற்றுக் கஞ்சி என்று சொல்வார்கள். ஆனால் பழஞ் சோற்றுக் கஞ்சியை குடிப்பவர்கள் வறுமைக்குட்பட்ட குடும்பங்களாகவும் பாவப்பட்ட மனிதர்களாகவும் பார்க்கின்ற பார்வை இருக்கிறது. கஞ்சி குடிக்கிறவரை ஐயோ! பாவம் கஞ்சி குடிக்கிறாரே என்று அவருக்கு கடையில் அரை இறாத்தல் பாணை வாங்கி வந்து கொடுக்கின்றோம். கஞ்சி ஒரு மோசமான உணவாகவும் பாண் ஒரு ஊட்டச் சத்திமிக்க உணவாகவும் நாங்கள் பார்க்கிறோம். ஆனால் உண்மை என்ன? சோற்றுக் கஞ்சியில் இருக்கும் ஊட்டச் சத்து ஒரு ஐந்து விகிதம் கூட நீங்கள் சாப்பிடும்

பாணில் இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் பலருக்குத் தெரிந்தும் கூட ஏதோ ஒரு வகையில் அவ்விதமான உணவுக்கு நாங்கள் பழக்கப்பட்டு விட்டோம். பாண் சாப்பிடுவது அநியாயம் அல்லது ஒரு குற்றம் என்று சொல்லவரவில்லை. அது ஒரு உற்பத்திப் பொருள் வாங்கிச் சாப்பிடுங்கள். ஆனால் கஞ்சியை ஒரு பாவப்பட்டப் பொருளாக அதனை வாங்கிச் சாப்பிடுவது ஒரு பரிதாபம் என நினைக்குமளவுக்கு நாம் உணவுப் பண்பாட்டு விடயங்களிலிருந்து வெளியே வருகிறோம்.

அதில் இருந்து நம்மை ஒதுக்கி கொள்ளுவதுதான் சர்வதேசத்தின் மூலோபாயம். இவையெல்லாம் எங்களுடைய சூழலில் இலவசமாகக் கிடைக்கிறது. மலிவாகக் கிடைக்கிறது.

### ? இவ்வாறான உணவுப் பண்பாட்டை கட்டி எழுப்புவதற்கு சமூகத்திற்கு மத்தியிலேயே செய்யப்படுகின்ற விழிப்புணர்வு சார்ந்த பணிகள் யாவை?



இது குறித்து பலரும் பல்வேறு நிலைகளில் கதைத்து விட்டுப் போனாலும் செயற்பாட்டுச் சார்ந்த விடயத்திலே எங்களுடைய அமைப்பு இரண்டு முக்கியமான பணிகளைச் செய்கின்றன. ஒன்று உணவுப் பண்பாட்டு முறைமைகளை மீள் நிறுத்துதல், அதாவது 'ஒரு அனுபவம் சார்ந்த பகிர்தலுக்கான அழைப்பு'. 'சுவை அவை' என்ற ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்தையும் முன் வைத்திருக்கின்றோம். 'சுவை அவை' என்பதன் நோக்கம் என்னவென்றால் இப்பொழுது 63 ஆவது 'சுவை அவை' நிகழ்ச்சித் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாதத்தில் இரண்டு தடவைகள் அல்லது மூன்று தடவைகள் நாங்கள் கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து அவர்களுடைய காணியில் என்ன வகையிலான உணவு உற்பத்திகள் இருக்கின்றன. என்ன வகையான நாட்டுக் கீரைகள் நாட்டு மரக்கறி வகைகள் இருக்கின்றன. உபபொருட்கள் இருக்கின்றன என்று பார்ப்போம். இந்தக் கீரையை வைத்து என்ன உணவு செய்யலாம் என்று வீட்டிலுள்ள முதியவர்களிடம் கேட்போம். இதையும் விதையும் இணைத்தால் என்ன உணவு செய்யலாம் என்று கேட்கின்ற சமயம் வீட்டிலுள்ளவர்கள் அதை எவ்வாறு செய்யலாம் என்று விளக்கமளிப்பார்கள். ஏன் இதைச் செய்யவில்லை என்றால் ஐயோ இதைச் செய்ய நேரமில்லை. இதனால் அதற்கு நாங்கள் பழக்கப்பட்டு விட்டோம் என்று கூறுவார்கள். பிள்ளைகள், அயலவர்கள் மத்தியில் பண்பாடாக, மரபாக பின்பற்றி வந்த உணவின் செய் முறைகளைக் காட்டி அதனைச் செய்து அவர்களோடு சேர்ந்து உட்கொண்டு வருகின்றோம். உணவு சார்ந்த பழங்கதைகள் அவர்கள் மத்தியில் இருக்கின்றன. பாரம்பரியமாக சொல்லப்பட்ட உணவு சார்ந்த கதைகள் நிறைய உள்ளன. அவ்வாறான கதைகளை அவர்களின் மூலம் சொல்ல வைத்து கிட்டத் தட்ட ஒரு கொண்டாட்ட நிகழ்வாக நாம் அதை நிறைவு செய்வோம்.

பின்பு அவர்களோடு இருந்து கதைத்து அவர்களின் அபிப்பிராயங்க



ளைக் கேட்கின்ற போது சிறுவர் முதல் பெரியோர்கள் வரை சொல்லும் அபிப்பிராயங்கள் கேட்பதற்கு ஆச்சரியமானதாக இருக்கும். நாங்கள் தேவையற்ற உணவு வகைகளுக்கு அடிமைப்பட்டுப் போகிறோம். பாரதூரமான பதில்களை நாங்கள் எதிர்பார்க்கக் கூடியதாக இருக்கிறது. ஆகவே இது உணவு விழிப்புணர்வு சார்ந்த முதலாவது பணி. இது இப்பொழுது 63 ஆவது 'சுவை அவை' நடைபெற்று இருக்கிறது. இது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, அநுராதபுரம், மட்டக்களப்பு, மலையகம் உள்ளிட்ட பகுதிகளில் 'சுவை அவை' நிகழ்ச்சித் திட்டம் நடைபெற்றுள்ளது. இப்பொழுதும் இந்த உன்னதமான பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொடர்ச்சியாக நாங்கள் செய்து கொண்டு இருக்கின்றோம்.

உணவுப் பண்பாட்டை மீள் நிறுத்தம் விடயத்தில் இரண்டாவது அம்சம்,மரபு சார்ந்த உணவுத் தாவரங்களைப் பாதுகாத்தல் ஆகும். ஒவ்வொரு பிரதேசங்களிலும் ஒவ்வொரு மரங்கள் இருக்கின்றன. எமது நாட்டுக் கத்தரிக்காயில் பல்வேறு வகையான கத்தரிக்காய்கள் இருக்கின்றன. சுண்டங் கத்தரி, கண்டங் கத்தரி, குண்டு கத்தரிக்காய் என்று சொல்லுவார்கள். இதை வீட்டில் வளர்ப்பதற்கு ஒவ்வொரு நாளும் அதற்கு தண்ணீர் ஊற்றி, பசளை போட்டு மருந்து அடிக்க வேண்டிய



தேவை இல்லை. அது ஒரு இடத்தில் தன்னுடைய பாட்டில் வளர்ந்து காய்க்கும். அவற்றைப் பறித்துச் சமைக்கலாம். மரபு சார்ந்த மரக்கறி வகைகளை கீரை வகைகளை அடையாளப்படுத்தினால் இலங்கையில் 42 வகையிலான கீரைகள் மற்றும் நாட்டு மரக்கறி வகைகள் உள்ளன. ஆனால் துரதிருஷ்டவசமாக அவைகளைப் பயன்படுத்துவதுமில்லை. அவைகளைக் கவனிக்காமையினால் அவைகள் படிப்படியாக அழிந்தும் வருகின்றது. இவைகளை மீண்டும் நாட்டுவதற்கு அவசியமான விழிப்புணர்வை ஏற்படுத்துகிறோம். இதன் முதல் கட்டமாக நாட்டு விதைககைளப் பாதுக்கும் நாட்டு விதை வங்கிகளை ஆரம்பித்து சமூக மட்டத்தில் ஊக்குவித்து மக்களை வழி நடத்துகிறோம்.

கிராமங்களில் முதியோர், இளம் விவசாயிகளுக்கு கொத்தவரை தொடர்பில் எடுத்து கூறுவோம். போஞ்சியினுடைய தாய் தான் இந்த கொத்தவரை. கொத்தவரை, இது மூதாதையர் இனம். இது மிகவும் உடலுக்கு உகந்த ஆரோக்கியமான உணவு ஊட்டச் சக்தி மிக்கது. இது தன்னுடைய பாட்டுக்கு காய்கும், வளரும். அந்த கொத்தவரையை நாங்கள் இழந்து விட்டோம். இப்பொழுது அதன் விதையை எடுத்து மக்களுக்கு கொடுத்து செய்கை பண்ணச் சொல்லி வருகின்றோம். ஏன் நாங்கள் நாட்டு விதைகளை இன்னும் வலியுறுத்தி வருகிறோம் என்றால் இப்பொழுது விவசாயம் செய்பவர்கள் விவசாயத்தை கை விட்டுவிட்டு செல்வதற்கான பல ஏராளமான காரணங்கள் இருக்கின்றன.

நமது நாட்டில் இப்பொழுது பசளை இல்லை மண்ணெண்ணெய் இல்லை எனக் கூறுகின்றனர் உண்மையிலேயே விசாயம் செய்ய முடியாது. இந்த இரண்டு காரணங்களும் உண்மைதான்.

ஆனால் இந்த நாட்டு விதைகளை எடுத்துச் செய்கை பண்ணும் போது பெரியளவில் மற்றப் பயிர்களுக்குப் பயன்படுத்தும் அளவுக்கு தண்ணீர் தேவை இல்லை. பசளையும் பெரியளவில் தேவையில்லை. ஆகவே நாட்டு விதைகளை பாதுகாத்தல், பராமரித்தல் ஊக்குவித்தல் முக்கிய விடயமாகும். நாட்டு விதையில் இருக்கக் கூடிய நல்ல விடயம் என்னவென்றால் மண் செத்துக் கொண்டிருக்கின்ற நிலையிலும் கூட அந்த விதையின் வீரியம் ஏதோ ஒரு வகையில் போராடி அது எழுந்து நிற்கும். ஆகவே நாட்டு விதைகளைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும் அவர்களை ஊக்குவிப்பதற்கான முக்கிய காரணம் பசளை இல்லாத பட்சத்திலும் இந்த தாவரங்கள் வளர்ந்து வரக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. இது பற்றிய விழிப்புணர்வுகளைச் செய்து வருகிறோம். இன்னும் ஆழமாகச் செய்யப்பட வேண்டி இருக்கிறது எனக் கருதுகின்றேன்.

### ? சமூகத்தில் உணவுப் பண்பாட்டை நிலை நிறுத்துதல், சமூகத்தில் அது எப்படி பின்பற்றப்படுகிறது?

கடிமான பணி. ஏனென்றால் நாங்கள் விரும்பி எங்களுடைய உணவுப் பண்பாட்டில் இருந்து வெளியே வந்தவர்கள் அல்லர். ஏதோ ஒரு வகையில் சர்வதேச வியாபாரம், உலகளாவிய உற்பத்திப் பொருட்களை எமது பிரதேசத்திற்கு கொண்டு வந்து வியாபாரம் செய்தல் ஆகும். அவர்கள் முதலாவது எங்களுடைய மன நிலையிலே மாற்றத்தை ஏற்படுத்தலாம். இதற்கு முக்கியமானது விளம்பரங்கள் ஆகும். நாம் விளம்பரங்களைப் பார்க்கும் போது விளம்பரங்களிலே காட்சிப்படுத்தக்கப்படுகிற உணவுகளால் முதலாவது பாதிக்கப்படுவது எமது பிள்ளைகளே. சிறு சிறு குழந்தைகள் அவர்களது மனதிலே அதில் காட்சிப்படுத்தப்படுகின்ற விடயங்கள் அவர்களது அடி மனதிலே பதிந்து விடுகிறது.

அவர்களுக்கு எந்த உணவைக் கொடுத்தாலும் அவர்களுக்கு அந்த உணவு தான் வேண்டும் என்று சொல்வார்கள்.பின்பு அவற்றை சுவைக்கிற போது அவர்களுடைய மனதிலே காட்சிப்படுத்தப்பட்ட விடயங்கள் பதிவாகின்றன.



உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்த சாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தில் வருடாந்தமஹோற்சவத்தில் தீமிதிப்பாகிய பூமிதிப்பு புதன்கிழமை (10) இடம்பெற்றது. ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பூசகர் குழந்தைவேல் சுரேந்திரன் அக்கினிக் கரகத்துடன் முதற் பாதத்தை வைத்து தீமிதிக்க அதனைத் தொடர்ந்து சுமார் 2500 மேற்பட்ட பக்த அடியார்கள் தீமிதிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டார்கள். உடப்பு குறூப் நிருபர்

## வெல்லவாய பகுதியில்... (03ஆம் பக்கத் தொடர்)

(10) பகல் இரண்டு மணியளவில் வீட்டுக்கு வந்துள்ள இந்த நபர், சிறுமிக்கு யோகட் வாங்கிக்கொடுப்பதாக கூறி அழைத்துச் சென்றுள்ளார்.

எனினும், மாலை 06 மணியாகியும் சிறுமி வீட்டுக்கு வரவில்லையென தெரிவித்து, சிறுமியின் தாய் வெல்லவாய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து சிறுமியை தேடும் நடவடிக்கையில் வெல்லவாய பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

## பேராயர் ரஞ்சித்துக்கு...

பாதிக்கப்பட்டுள்ளதையடுத்து அவர் தற்போது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பேராயர் இல்ல அதிகாரியொருவர் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அவரின் உடல்நிலை வழமைக்குத் திரும்புவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கொரோனா காரணமாக சிகிச்சைபெற்று வருவதால் அவர் சம்பந்தப்பட்ட விசேட நிகழ்வுகள் மற்றும் சந்திப்புக்கள் அனைத்தும் பிற்போடப்பட்டுள்ளதாக பேராயர் இல்ல அதிகாரி தெரிவித்தார்.

அதேவேளை, அவரது உடல் நிலை தேறிவருவதால் இரண்டொருதினங்களில்அவர்வைத்தியசாலையிலிருந்து பேராயரில்லத்துக்கு திரும்புவாரென்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு...

சமர்ப்பித்த பின்னர் அவருக்கு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கான பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக நீதிய மைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நீண்டகாலமாக சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றமை வினைத்திறனுடன் செயற்படுகின்றமை மற்றும் சமூகத்துக்கு சேவை செய்யக்கூடியவரென்ற காரணங்களை முன்வைத்து அவருக்கு ஜனாதிபதியின் பொது மன்னிப்பு வழங்கப்படுவது நீதியானதாகுமென அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

செயற்பாட்டு விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக சட்ட மாஅதிபரின் ஆலோசனை மற்றும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தின் அறிக்கை ஆகியனவற்றை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அனைத்து விடயங்களையும் கவனத்திற்கொண்டு நிபந்தனையுடன் அவருக்கு பொதுமன்னிப்பு வழங்குவது பொருத்தமானதென பரிந்துரை செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## மின் கட்டண அதிகரிப்பு...

29 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் பி.ப 4.30 மணி வரை நடைபெறுவுள்ளதாகவும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அதற்கான ஒத்திவைப்புவேளை பிரேரணையை சபையில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

மின் கட்டணத்தை அதிகரிக்கும் தீர்மானம் தொடர்பில் கருத்துக்களை தெரிவிப்பதற்காக தனியான விவாதமொன்றை பெற்றுத்தருமாறு எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல பாராளுமன்றத்தில் வைத்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் விடுத்துள்ள வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் 29 ஆம் திகதி விவாதம் நடைபெறவுள்ளது.

## புலிகளின் புலனாய்வு பிரிவு...

பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் தலைமையிலான பொலிஸ் குழு வொன்று அபுதாபிக்குச் சென்று விடுதலைப்புலி உறுப்பினரை அபுதாபியிலிருந்து சிறப்புப் பாதுகாப்புடன் விமானத்தில் இலங்கைக்கு (11) அழைத்து வந்தனர்.

அபுதாபியில் தங்கியிருந்த புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டு இலங்கையிடம் ஒப்படைக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

இராசநாயகம் தவநேசம் என்ற இந்த பிரபல புலி உறுப்பினர் வெடிகுண்டு தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்றவரென பயங்கரவாத தடுப்பு புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தின் போது, கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளில் இடம்பெற்ற பல குண்டுவெடிப்புச் சம்பவங்களில் பிரதான சந்தேக நபராக இவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

48 வயதான இவர், யுத்தம் முடிவடைந் தவுடன் நாட்டை விட்டு வெளி யேறிய பயங்கரவாதிகளில் ஒருவராவார்.

புலிகள் இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவின் பிரபல நபரிடம் தற்போது பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், அவரை நீதிமன்றத்தில் விரைவில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## சகல கட்சிகளுக்கும்...

குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீனின் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்(ACMC), பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்சன யாப்பா உள்ளிட்ட குழு இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத்தன.

பாராளுமன்ற துறைசார் கண்காணிப்புக் குழுக்களை நியமிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாக தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மேலும் பல இடைக்கால குழுக்களை நிறுவ வேண்டியதன் அவசியத்தை தாம் உணர்ந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தேசிய சபையை ஸ்தாபிப்பதே பிரதான இலக்கென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கு அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதித்துவமும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் மற்றும் குழுக்களின் முழுமையான பிரதிநிதித்துவமும் அவசியமானதெனவும் தெரிவித்தார்.

குழுத் தலைவர்களுக்கு, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கு சமமான அதிகாரம் மற்றும் பிரதிநிதித்துவம் வழங்குவதற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களை அமைச்சரவைக் கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளச் செய்வதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன்போது விளக்கினார்.

குழு முறைமையை பிரதிநிதித்துவம் செய்வதா, அல்லது அரசாங்கத்துடன் இணைந்துகொள்வதா என்பதை அந்தந்தக் கட்சிகள் கலந்துரையாடி தமக்கு அறிவிக்குமாறும் இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த கலந்துரையாடலில் பிரதமர் தினேஷ் குணவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## மாவட்ட அபிவிருத்தி குழு...

தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் "தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஏனைய கட்சிகள் குறிப்பாக விக்னேஸ்வரன் ஐயா மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை வடக்கு கிழக்கில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்களின் தலைவர்களாக நியமனம் செய்ய முடிவெடுக்கப்பட்டமை தொடர்பான செய்திகள் வெளி வந்திருக்கின்றன அது தொடர்பிலே பல்வேறுப்பட்ட கருத்துக்கள் நியாயங்கள் எங்களிடம் கேட்கப்படுகின்றது.

குறிப்பாக தமிழ் மக்கள் தங்களுடைய அன்றாட பிரச்சினைகளாக பல விடயங்களை சந்தித்து கொண்டிருக்கின்றார்கள்.

அது தொடர்பில் நாங்கள் டலஸ் அழக பெருமவுக்கு எழுதிக் கொடுத்த விடயங்களையே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியை சந்தித்தபோதும் கூறி இருக்கின்றோம். தமிழ் மக்கள் அன்றாடம் சந்தித்து வருகிற முக்கியமான பிரச்சனைகளான அரசியல் கைதிகளுடைய விடுதலை முதற்கட்டமாக ஒரு சிறு தொகையினரை யாவது விடுதலை செய்ய வேண்டும். அத்தோடு அந்த காணி விடயங்களில் அதிக அக்கறையை இந்த அரசாங்க செலுத்த வேண்டும். மக்களுடைய அன்றாட பிரச்சனைகளில் அதிக கவனம் செலுத்தப்படுமாக இருந்தால் நாங்கள் அபிவிருத்தி குழு தலைவர் பதவியை ஏற்பது தொடர்பில் பரிசீலிக்கலாம்.

இலங்கையினுடைய பொருளாதாரம் என்பது அதல பாதாளத்துக்கு சென்றுள்ளது. பொருளாதாரத்தை மீட்பது அல்லது பொருளாதார நடவடிக்கைகளை கட்டியெழுப்புவதிலே எங்களுடைய பங்கு இருக்கும். பொருளாதார பிரச்சனை வடக்கு கிழக்கு, மலையகத்தில் வாழ்கின்ற மக்களை மிகவும் பாதித்திருக்கின்றது. எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பினர் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பினை வழங்குவோம்.

ஆனால் அபிவிருத்தி குழு தலைவர் பதவிகளை நாங்கள் ஏற்பதை நாங்கள் தவிர்த்துக் கொள்ள விரும்புகின்றோம்.இந்த விடயங்கள் தொடர்பில் விரைவில் அனைவருடனும் பேசி ஒரு தீர்வினை எடுப்போம்." என தெரிவித்தார்.

## பத்து ரயில் பெட்டிகள்...

பல கோடி ரூபா பெறுமதியான 10 ரயில் பெட்டிகள் புத்தளம் புகையிரத நிலையத்துக்கருகில் கவனிப்பாரற்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன. இது தொடர்பாகவே அமைச்சர் பந்துல இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த 2009 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் சீனாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரயில் பெட்டிகளே இவ்வாறு புத்தளத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் புத்தளம் ரயில் நிலையத்துக்கு இந்த பெட்டிகள் கொண்டுவரப்பட்டு போடப்பட்டுள்ளதை இன்றும் காணக்கூடியதாகவுள்ளது. அப்போதைய போக்குவரத்து அமைச்சராக இருந்த டலஸ் அழகப்பெருமவின் பணிப்புக்கமைய 2009,2010 ஆம் ஆண்டுகளில் இந்த சீன ரயில் பெட்டிகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன.

இந்த ரயில் பெட்டிகள் தொடர்பான செய்தி தொடர்பில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பான அறிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அமைச்சரிடம் கையளிக்க வேண்டுமென்றும் அமைச்சர் கோரியுள்ளார். அடுத்த சில நாட்களில் உரிய அதிகாரிகளுடன் புத்தளம் சென்று இந்த ரயில் பெட்டிகளை நேரில் கண்காணிக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த ரயில் பெட்டிகளை அவதானித்து சேவையில் இணைக்க முடியுமா என்பதை கண்டறிந்து அதற்கேற்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொழிற்சங்கங்கள் மேலும் தெரிவிக்கையில்,

அந்தக் காலப்பகுதியில் ரயில்வே திணைக்களம் 100 சீன ரயில் பெட்டிகளை இலங்கைக்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவித்துள்ளன.

இந்த ரயில் பெட்டிகள் இலங்கைக்கு கொண்டு வரப்படுவதற்கு முன்னரே, சீன ரயில் பெட்டிகளின் பிரேக்கிங் சிஸ்டம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து, அப்போதைய போக்குவரத்து அமைச்சராக இருந்த டலஸ் அழகப்பெருமவிடம், ரயில்வே தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்ததாக ரயில்வே தொழிற்சங்கங்கள் குற்றம்சாட்டியுள்ளன.

ஆனால், இவ்வாறு கொண்டு வரப்பட்ட 100 சீன ரயில் பெட்டிகளில் குறைந்த எண்ணிக்கையிலான ரயில் பெட்டிகள் இயக்கப்பட்டு வந்ததுடன், அதிக எண்ணிக்கையிலான ரயில் பெட்டிகள் இயக்கப்படாமல், நாட்டுக்கு பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு வருவதாக தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டுகின்றன.

ரயில் பெட்டிகள் இவ்வாறு அகற்றப்பட்டதன் மூலம் பயணிகளுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதுடன், நாட்டுக்கு பெருமளவு நஷ்டம் ஏற்படுவதற்கு அனைத்து துறையினரும் காரணம் எனவும் தெரிவிக்கின்றனர்.

புத்தளத்தில் கவனிப்பாரற்ற போடப்பட்டிருக்கும் ரயில் பெட்டிகளுள் பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ள சீன ரயில் பெட்டிகளில் முன்பதிவு செய்யப்பட்ட ஆசனங்களுடன் கூடிய இரண்டாம் தரப் பெட்டிகள் இரண்டு இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்த இரண்டு பெட்டிகள் உட்பட ஏனைய அனைத்து பெட்டிகளும் தற்போது மிக உயர்ந்த நிலையில் காணப்படுவதாகவும், இவற்றை அகற்றுவது நாட்டின் பணத்தை வீணடிக்கும் செயலாகுமெனவும் அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

## நான்காவது பூஸ்டர் தடுப்பூசி...

தொற்று ஒழிப்புக்காக மூன்றாவது தடுப்பூசியை 80,59,996 பேர் பெற்றுக் கொண்டுள்ளதுடன் தற்போது வழங்கப்பட்டுவரும் நான்காவது தடுப்பூசியை 71,388 பேரே பெற்றுக் கொண்டுள்ளதாக அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நான்காவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் அசமந்தப் போக்கையே கடைப்பிடிப்பதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

அதே வேளை, தற்போதைய கொரோனா வைரஸ் பரவல் அதிகரிப்பை நோக்கும்போது எதிர்காலத்தில் கொரோனா கொத்தணி உருவாகும் நிலை ஏற்படலாம் என்று தெரிவித்துள்ள அந்த பிரிவு, நான்காவது தடுப்பூசியை பெற்றுக் கொள்வதில் முனைப்புடன் செயற்பட வேண்டும் என்றும் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

## நாட்டில் 20 வீத...

சரியான ஊட்டச்சத்தை வழங்க வேண்டும், இல்லையெனில் வருங்கால சந்ததியினர் பேரழிவைச் சந்திக்க நேரிடும் என அவர் எச்சரித்துள்ளார். இந்நிலை தொடருமானால் அவர்களின் வயதுக்கேற்ற எடை குறைவாகவுள்ள குழந்தைகளாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வயதுக்கேற்ப குழந்தையின் எடை அதிகரிக்காவிட்டால், அறிவு வளர்ச்சி குன்றிய குழந்தையாக மாறுவது மட்டுமல்லாமல், உள் உறுப்புகள் சரியாக வளர்ச்சியடையாத நோயுற்ற குழந்தையாகவும் மாறும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

## இலங்கையின் பங்காளியாக...

பதிவிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் இலங்கையின் பங்காளியாக தமது ஒன்றியம் தன்னை முன்னிறுத்துமெனவும் இலங்கையில் சிவில் மற்றும் மனித உரிமைகளின் பாதுகாப்பு, கருத்துச் சுதந்திரம் மற்றும் எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை மிகவும் அவசியமாகுமெனவும் ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது

இலங்கையினை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு கூட்டு நடவடிக்கை அவசியம் என்பதை ஒப்புக்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், வெளிவிவகாரங்கள் தொடர்பான விடயங்களில் விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதியை ஐரோப்பிய ஒன்றியம் ஊக்குவித்ததாகவும் தெரிவித்துள்ளது.

இதன்படி, GSP+, சர்வதேச நாணய நிதியம் மற்றும் மனித உரிமைகள் பேரவையின் செயல்முறைகளை வெற்றியடையச் செய்வதற்கு அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் மேலும் தமது பதிவில் தெரிவித்துள்ளது.

## மாகாண நிர்வாக...

முகாமைத்துவம் செய்து, பொது மக்களுக்கான சேவைகளை சிறப்பான முறையில் முன்னெடுப்பது மிகவும் முக்கியமானது.

மாகாண சபை நிர்வாகம், அபிவிருத்தி மற்றும் மாகாண சபை செலவினங்களை முகாமைத்துவம் செய்யும்போது, தேசிய கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு இணங்க செயற்படுவதைப் போன்று மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதும் மிகவும் முக்கியமானதாகும்.

தமது மாகாணத்தின் அபிவிருத்தியின் முன்னுரிமைகளைக் கண்டறிவதிலும் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் ஆளுநர்கள், அனைத்து மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் ஜனாதிபதி அலுவலகத்துடனும் சிறந்த ஒருங்கிணைப்பை பேண வேண்டுமென கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையாவது தமது மாகாண, பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி, மாகாண சபையின் ஊடாக அமுல்படுத்தப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை முன்னெடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த இக்கட்டான காலப்பகுதியில் தேசிய இலக்குகளை அடைவதற்கு ஆளுநர்களின் பங்களிப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள், அவதானம் செலுத்தி வருவதாக ஜனாதிபதியின் செயலாளரின் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## டெங்கு நோயாளர்...

டெங்கு நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்வதில் மக்கள் மிகுந்த கவனம் செலுத்தவேண்டுமென சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அதேவேளை, டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள 25 சிறுவர்கள் கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாகவும் அவர்களில் 07 பேரின் நிலை மோசமாக காணப்படுவதாகவும் சிறுவர் நோய் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு முடிந்தளவு நீராகாரம் வழங்குமாறும் அவர்களுக்கு போதுமான ஓய்வைப் பெற்றுக்கொடுக்குமாறும் அத்துடன் பரசிட்டமோல் மாத்திரைகளை அவர்களுக்கு வழங்குவது அவசியமென்றும் அவர் பெற்றோர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதேவேளை லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள 11 சிறுவர்கள் சிகிச்சைபெற்று வருவதாகவும் அவர்களில் 9 பேர் சாதாரண வார்ட்டுகளிலும் மேலும் 2 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

## பிரித்தானிய பெண்ணுக்கு...

திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையை விட்டு வெளியேறுமாறு குடிவரவு குடியகல்வு திணைக்களம் அவருக்கு அறிவித்துள்ளது. அவர் வீசா நிபந்தனைகளை மீறி மருத்துவ காரணங்களுக்காக பெறப்பட்ட விசாவில் இலங்கையில் தங்கியிருப்பதாக குடிவரவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில், கடந்த 02 ஆம் திகதி அவரது கடவுச்சீட்டை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பொறுப்பில் எடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம் திணைக்களம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கடந்த 02ஆம் திகதி பத்தரமுல்ல, அக்குரேகொடபகுதியில் வைத்து கடவுச்சீட்டை திணைக்களம் கைப்பற்றியதுடன், அன்றைய தினம் ஏழு நாட்களுக்குள் திணைக்களத்திற்கு வந்து அது தொடர்பான உண்மைகளை முன்வைக்குமாறும் அவருக்கு அறிவிக்கப்பட்டது.

அவர் மருத்துவ வதிவிட வீசா வகையின் கீழ் இலங்கைக்கு வந்துள்ளதாகவும், மூன்றாம் தரப்பினராக 2019 ஆகஸ்ட் 14 முதல் வீசாவை நீடித்து நீர்கொழும்பு மற்றும் மாலபே பகுதிகளில் தங்கியிருப்பதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வீசா நிபந்தனைகளை மீறும் வகையில் பிரிட்டன் யுவதி நடந்து கொண்டாரா? என்ற கோணத்தில் இந்த விசாரணை நடத்தப்பட்டது.

## கொழும்பு பதுளை சொகுசு...

நாளை சனிக்கிழமை முதல் இந்த ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதுடன் தொடர்ந்து பிரதி சனிக்கிழமைகளிலும் அதிகாலை 5.30 மணிக்கு கொழும்பிலிருந்து பதுளை நோக்கி ரயில் சேவை இடம்பெறுமென்றும்.

பி.ப 3.55 மணிக்கு அது பதுளை ரயில் நிலையத்தை சென்றடையுமென்றும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அதிசொகுசு ரயில் கம்பஹா, வெயாங்கொடை, பொல்கஹவலை, ரம்புக்கணை, பேராதனை, கண்டி, நாவலப்பிட்டி, நானுஓயா, ஹப்புத்தளை, தியத்தலாவை, பண்டாரவளை, எல்ல மற்றும் பதுளை ரயில் நிலையங்களில் நிறுத்தப்படுமென்றும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இந்த ரயில் மு.ப 9.50 மணிக்கு கொழும்பை நோக்கி புறப்படுவதுடன் இரவு 7.20 மணிக்கு அது கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை வந்தடையுமென்றும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ரயில் பயணத்தின் போது இடைநடுவில் காணக்கிடைக்கும் இரசனை மிக்கதும் இயற்கை எழில் மிக்கதுமான பிரதேசங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கு அவற்றைப் பார்வையிடுவதற்காக நிறுத்தப்படுமென்றும் ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்தது.

# அடுத்த சம்பள உயர்வுக்கான பணி ஆரம்பம் : செந்தில் தொண்டமான் அறிவிப்பு



இ.தொ.கா எப்போதும் மக்களின் நலனை அடிப்படையாக கொண்டே செயல்படும். தோட்டத் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்த தொடர்ந்து கம்பனிகளுக்கு இ.தொ.கா அழுத்தம் கொடுக்கும் அதேவேளை, நீதிமன்றம் வழக்கை தள்ளுப்படி செய்துள்ளதாக அறிவிப்பு வெளியாக மறுநிமிடம் முதல் அடுத்த சம்பளக் உயர்வுக்கான நடவடிக்கைளை இ.தொ.கா ஆரம்பித்துள்ளது என இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இ.தொ.கா முன்வத்த 1000ரூபாய் சம்பள அதிகரிப்பை இடை நிறுத்துமாறு வலியுறுத்தி கம்பனிகள் தாக்கல் செய்த வழக்கை நீதிமன்றம் நிராகரித்தன் மூலம் கம்பனிகளின் அடாவடித்தனத்துக்கு தக்க பாடத்தை இ.தொ.கா புகட்டியுள்ளதுடன், குறித்த அறிவிப்பு வெளியான மறுநிமிடம் முதல் அடுத்த சம்பள உயர்வுக்கான வேலைதிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், தொழிலாளர்களின் நலனை மேம்படுத்த தொடர்ச்சியாக கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்றார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மறைந்த தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களால் அந்த காலத்திற்கு ஏற்ற வகையில் தோட்ட தொழிலாளர்கள் வாழ்வாதரத்தை முன்னெடுக்கும் வகையில் நியாயமான சம்பளமாக 1000 ரூபாய் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய சம்பளத்தை பெற்றுக் கொடுப்பதில் எப்போதும்முன்னின்றேசெயல்பட்டுள்ளார். பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சம்பளத் தொகையாகவும் அக்காலத்தில் 1000 ரூபாய் இருந்தது.

ஆயிரம் ரூபா சம்பளத்தை பெற்றுக் கொடுக்கஅமரர்ஆறுமுகன்தொண்டமான் பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் பாரிய முயற்சிகளை முன்னெடுத்தார். அவரது மறைவின் பின்னரும் இ.தொ.கா அவர் முன்மொழிந்த தொகையை அவரின் வழிகாட்டலால் வெற்றிகரமாக செயற்படுத்தியது. ஆயிரம் ரூபா வழக்கு தள்ளுப்படியானது இ.தொ.காவின் வெற்றி மாத்திரமல்ல. இது ஒட்டுமொத்த தோட்டத் தொழிலாளர்களினதும் வெற்றியாகும். தற்போதைய சூழ்நிலையில் அந்த 1000 ரூபாய் சம்பள தொகை போதுமானதாக இல்லை. எனவே சம்பள தொகை உயர்த்தற்கான நடவடிக்கைகளை இ.தொ.கா முன்னெடுத்துள்ளது என்றார்.

# 4ஆவது கொவிட் 19 தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முன்வரவேண்டும்

## வைத்திய அத்தியட்சகர் டயாழினி மகேந்திரன்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

கொரோனா தடுப்பூசியை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை மீண்டும் ஏற்பட்டிருப்பதாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டயாழினி மகேந்திரன் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

மீண்டும் கொரோனா வைரஸ் பல திரிபுகளாக மாற்றமடைந்து வருகிறது. எனவே அதிலிருந்து தப்பிக்கும் முகமாக 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் மற்றும் 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் நான்காவது தடுப்பூசியான பூஸ்டர் டோஸினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கடந்த வருடம் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தவர்கள்,தடுப்பூசி பெறாதவர்களே கொரோனா தாக்கத்தால் உயிரிழந்திருந்தனர். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சை விடுதியில் 15 பேர் மரணித்திருந்தனர். அவர்கள் தடுப்பூசி பெறாதவர்களாகவும்,வேறு சில நோய்களால் பாதிக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர்.எனவே எதிர்காலத்தில் மீண்டும் கொரோனா பரவல் ஏற்படும் பட்சத்தில் உயிரிழப்புக்கள் ஏற்படும் சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. அதிலிருந்து தப்பிக்கும் முகமாக தடுப்பூசிகளைப் பெற அனைவரும் முன்வர வேண்டும். இதுவரை எந்தவிதமான கொரோனா தடுப்பூசிகளையும் பெறாதவர்கள்,2ஆவது,3ஆவது,4ஆவது டோஸினை பெறாதவர்கள் என அனைவரும் தடுப்பூசி பெற வேண்டியது கட்டாயம்.

அத்துடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கிளினிக்,வேறு சிகிச்சைகளுக்காக வருபவர்கள் கொரோனா தடுப்பூசி அட்டையுடன் வருகை தர வேண்டும்.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# மாவட்ட செயலக செய்தி மடல் இலத்திரனியல் சஞ்சிகை வெளியீடு

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்ட செயலக செய்தி மடல் இலத்திரனியல் சஞ்சிகை நேற்று முன்தினம் காலை 11.30 மணிக்கு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட செயலக பிரதம உள்ளக்கணக்காய்வாளரும், உற்பத்தித் திறன் பிரிவின் பிரதம இணைப்பாளரும், சஞ்சிகை ஒருங்கிணைப்பாளருமான கே.லிங்கேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு குறித்த இதழை வெளியிட்டு வைத்தார்.

2020ம் ஆண்டின் இறுதி அரையாண்டுக்கான ஆறாவது இதழே இவ்வாறு இலத்திரனியல் சஞ்சிகையாக வடிவமைக்கப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட செயலக அரியாத்தை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பதவிநிலை மற்றும் கிளைத்தலைவர்களுக்கான வாராந்த கலந்துரையாடலின் போதே குறித்த சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.


திகதி 10.08.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4843 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,883,450.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 32,992,164.60 — ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 9 8 8 4 8 8

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 873 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,157,100.00 — வெற்றி இலக்கினம் A — வெற்றி இலக்கங்கள் 22 25 27 35 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 120,848,376.40

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3085 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,023,920.00 — ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 09 41 49 51 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,540,327.60

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 152 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,709,320.00 — இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 06 16 24 48 — விசேட இலக்கினம் சிம்மம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,666,877.60

கோடி 26+ Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1191 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,040,000.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 265,070,238.00 — ஆங்கில எழுத்து A — சுப்பர் நம்பர் 07 — வெற்றி எண்கள் 10 11 66 68 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk — இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச் திருத்தப்பட்டவாரான காணி எடுத்தல் சட்டத்தின் (அத் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு: KMB/LND/ACQVI/02/59
காணி அமைச்சின் இலக்கம்: LD/05/2006/PC/239

கீழ் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசிக்கிறது மேலதிக விபரங்களுக்கு 2022.07.12ஆம் திகதி பிரிசுரிக்கப்பட்ட 2288/11ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகைகளின்படி

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாகாணம் | : | தெற்கு |
| மாவட்டம் | : | மாத்தறை |
| பிரதேச செயலகப் பிரிவு | : | கபுறுபிட்டிய |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : | 320A கதார கிழக்கு |
| காணியின் பெயர் | : | இஹலஹிரிதெனிய அல்லது கந்துருகஹதெனிய |
| பட இலக்கம் | : | இ.கி.வ. 182 இல் பிற்சேர்க்கை இல. 10, தாள் இல. 10 |
| துண்டு இலக்கம் | : | 1, 2, 3 |

**பிரதேச செயலாளர்**
**கபுறுபிட்டிய**

**2022. 08 மாதம் 08 திகதி**
**பஸ்கொட பிரதேச செயலகத்தில்**

## நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத்தவறணைகள் வெளிநாட்டு குடிவகைத்தவறணைகள் குத்தகை விற்பனை – 2022 – 2023

மேற்படி குறிப்பிட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகள் குத்தகை விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள் கோரல் எதிர்வரும் 2022.09.16 திகதி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். இவ் அறிவித்தல் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு 2291 வது வர்த்தமானியில் 2022.07.29 ம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

**அட்டவணை**

| தவறணையின் பெயர் | தவறணை அமைக்க வேண்டிய இடம் | கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி | கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரம் | கேள்விகள் வைப்புப்பணம் |
|---|---|---|---|---|
| இல.01 நுவரெலியா | மாநகரசபை நுவரெலியா இல.06 பிரிவிற்குள் | 2022.09.16 | மு.ப.10.30 | 5000.00 |

மேலதிக விபரங்களை நுவரெலியா பிரதேச செயலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

**ஏ.ஏ.விதுர சம்பத்**
**பிரதேச செயலாளர்,**
**நுவரெலியா.**

**பிரதேச செயலகம்**
**நுவரெலியா**
**2022.08.12**

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்தல்

2021/2022 கல்வியாண்டு முதல் கா.பொ.த. (உயர் தரப்) பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது **விண்ணப்பதாரர்களுக்கு தேசிய அடையாள அட்டை கட்டாயத் தேவையாகும்.**

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
இல 20, வாட் இடம் ,
கொழும்பு 07.
2022.08.10

## பெறுகை அறிவித்தல்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**கமத்தொழில் அமைச்சு**

| | | |
|---|---|---|
| **பெறுகை நிறுவனத்தின் பெயர்** | : | வ/ப இலங்கை உர நிறுவனம் |
| **பெறுகையின் பெயர்** | : | ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பயிற்சியளித்தல் |
| **ஒப்பந்த இலக்கம்** | : | ஆய்வுகூட உபகரணங்கள் பெறுகைக்கான கேள்வி இல. **2022/CFC/LE/01.** |

வ/ப இலங்கை உர நிறுவனத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் உறைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | உருப்படி | எண்ணிக்கை | வழங்க வேண்டிய கால எல்லை | கேள்விப் பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|---|
| **2022/CFC/LE/01** | 01. PH & Conductivity Meter | 01 | கூரைய விரைவில் அல்லது கொள்வனவுக் கட்டளை ஒப்படைக்கப்பட்டு 3 மாதங்களுக்குள் | 7,500.00 |
| | 02. Hot Plate | 02 | | 15,000.00 |
| | 03. Muffle Furness | 01 | | 45,000.00 |
| | 04. Kjeldhal unit with accessories | 01 | | 112,500.00 |
| | 05. Flame photometer (with software) | 01 | | 60,000.00 |
| | 06. Fume Hood | 01 | | 60,000.00 |

02. இந்தக் கேள்வி கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் ஊடாக இடம்பெறும்.

03. ஆய்வுகூட உபகரணங்களை வழங்குவதற்கு வழங்குநர்களுக்குத் தேவையான மூலப்பிரமாணங்களாவன, அங்கீகரிக்கப்பட்ட வழங்குநராகவிருத்தல், உற்பத்தியாளராகவிருத்தல். மேலதிக விபரங்கள் கேள்விப் படிவத்தில் தரப்பட்டுள்ளன.

04. இதில் ஆர்வம் காட்டும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களுக்கு மேலதிக விபரங்கள் தேவைப்படின் வ/ப இலங்கை உர நிறுவனத்தின் பதில் முகாமையாளர் (பெறுகை மற்றும் நிறுவனங்கள்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல.: +94-11-2947765/ கைப்பேசி: 077-2069981, தொலைநகல்: +94-11-2930423) மற்றும் பின்வரும் முகவரியில் கேள்விப் படிவங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**பதில் முகாமையாளர் (பெறுகை மற்றும் நிறுவனம்),**
**பெறுகைப் பிரிவு,**
**வ.்.ப இலங்கை உர நிறுவனம்,**
**லக்பொஹொர ஜயந்தி மாவத்தை,**
**ஹுணுப்பிட்டிய, வத்தளை,**
**இலங்கை.**

05. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்விப் படிவங்களை பின்வரும் முகவரியில் பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையிலும் 2022-08-12ஆம் திகதி 2022-09-01ஆம் திகதி வரை பி.ப. 3.30 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம். இதன் பொருட்டு மீளளிக்கப்படாத மூவாயிரத்து ஐந்நூறு (3,500.00 ரூபா) ரூபா தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

06. கேள்விப் படிவங்களை 2022-09-02ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும் அல்லது பெறுகைப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடல் வேண்டும். 2022-09-02ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு கேள்விகள் முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன்பின் உடன் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். சமர்ப்பிக்கப்படும் சகல கேள்விப் படிவங்களுடனும் ஒவ்வொரு உபகரணத்திற்கும் இயைபான பெறுமதியிலான கேள்விப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வ/ப இலங்கை உர நிறுவனம்,**
**லக்பொஹொர சுவர்ணஜயந்தி மாவத்தை,**
**ஹுணுப்பிட்டிய,**
**வத்தளை.**

**2022-08-12ஆம் திகதி.**

## கடற்தொழில் அமைச்சு

### இலங்கை தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை

NAQDA

**விலைமனுக்கோரல் அழைப்பு**

**வழங்கல் அறிவித்தல்**

01. இலங்கை தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது (NAQDA) 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க தேசிய நீர்வாழ் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நீரியல் வளங்கள் மற்றும் மீன் வளர்ப்பு தொழிற்துறையின் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்திற்காக நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

இலங்கை தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் திணைக்கள வழங்கல் குழுவின் (பிரதான) தலைவரால் மீன்வளர்ப்பு மேம்பாட்டு மைய அலுவலகங்களில் களப்பணிக்காக ஒரு வருட காலத்திற்கு தொழிலாளர் சேவைகள் (107 தொழிலாளர்கள்) பெறுவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்தத்தின் இலக்கம் மற்றும் பெயர் | மனுக்காப்புறுதி (இல.ரூபா.) | மீளச்செலுத்தப்படாத மனு ஆவணத்தின் பெறுமதி (இல.ரூபா) | மனுக்களை அனுப்பக்கூடிய இறுதித்திகதி மற்றும் நேரம் | மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| **NQ/DPC/2022/NCB/S/03** மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (AQDC) களப்பணிக்காக தொழிலாளர்களின் வழங்கல் | **750,000** 121 நாட்கள் (2023.01.05 ஆம் திகதி வரை) | **13,000.00** | 2022.09.05 ஆம் திகதி பி.ப 03.00 மணி வரை | 2022.09.06 ஆம் திகதி பி.ப 02.00 மணி வரை |

02. தகைமைகளைக் கொண்ட மனுதாரர்கள் மேலதிக விபரங்களை வழங்கல் அதிகாரி மூலம் (தொ.இல : 071-772 4430, 011-278 6544 / 6495, பெக்ஸ் : 011-278 6493 / 6575, மின்னஞ்சல் முகவரி - po@naqda.gov.lk) பெற்றுக்கொள்ளமுடிவதுடன் இணையத்தள முகவரியான www.naqda.gov.lk மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்
திணைக்கள வழங்கல் குழு- (பிரதான)
**இலங்கை தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை**
41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை.
2022.08.12

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# நேர்வழிகாட்டலின் தேவை

அருள் மறையாம் அல் குர்ஆனின் ஆரம்ப அத்தியாயமாகவும் அதன் முகவுரையாகவும் சூரா பாத்திஹா விளங்குகிறது. இச்சூரா உள்ளடக்கியுள்ள பிரதான பகுதிகளில் நேர்வழிகாட்டல் கோரிக்கையும் ஒன்றாகும்.


அல்லாஹ்தஆலா மனிதனின் மூலமாக விளங்கும் ஆதம் (அலை) அவர்களைப் படைத்து அவரையும் அவரது சந்ததியினரையும் கண்ணியப்படுத்தியுள்ளான். இவ்வுலகில் வரையறுக்கப்பட்ட வாழ்வுக் காலம் வழங்கப்பட்டவனாக மனிதனைப் படைத்துள்ள அல்லாஹ், அவனுக்கு 'பூமிக்கான தனது பிரதிநிதி' என்ற உயரிய அந்தஸ்தையும் பொறுப்பையும் வழங்கி கௌரவப்படுத்தியுள்ளான். அவன் இப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கு தேவையான எல்லா வசதி வாய்ப்புக்களையும் நேர்வழிகாட்டல்களையும் அல்லாஹ் வழங்கியே இருக்கின்றான்.

அல்லாஹ்வை சதா வணங்கி புகழ்ந்து துதித்து கொண்டிருக்கும் வானவர்களின் கண்ணியம் பெற்ற படைப்பாகவும் மனிதன் இருக்கின்றான். ஆனாலும் இப்லீஸ் மனிதனின் மூல தந்தையான ஆதம் (அலை) அவர்களுக்கு அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப சிரம் தாழ்த்த மறுத்தான். அதனால் அல்லாஹ்வின் சாபத்திற்கும் வெறுப்புக்கும் உள்ளாகி இழிவடைந்தவனானான்.

ஆனாலும் ஆதம் (அலை) அவர்களால் தான் தனக்கு இந்த இழிநிலை ஏற்பட்டிருக்கின்றது. அதன் காரணத்தினால் ஆதமையும் அவரது சந்ததியினரையும் வழிகெடுக்கவும் கைசேதத்திற்கும் நஷ்டத்திற்கும் உள்ளாக்குவதற்கும் அவன் சபதம் எடுத்துக் கொண்டுள்ளான். அதற்காக அவன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றான். இதன் ஊடாக மனிதனின் முதல்தர நேரடி எதிரியாக ஷைத்தான் இருந்து கொண்டிருக்கின்றான்.

என்றாலும் ஷைத்தானின் சபதத்தையும் சதி சூழ்ச்சிகளையும் முறியடிப்பதற்கும் தான் வழங்கியுள்ள பொறுப்பை நிறைவேற்றுவதற்கும் தேவையான இறை வழிகாட்டல்களை அல்லாஹ் மனிதனுக்கு தெளிவாக வழங்கி இருக்கின்றான். இம்மையிலும் மறுமையிலும் மனிதன் சுபீட்சமும் விமோசனமும் அடைய வேண்டும். அவன் கைசேதத்திற்கோ நஷ்டத்திற்கோ உள்ளாகி விடக் கூடாது என்பது தான் அல்லாஹ்வின் எதிர்பார்ப்பாகும்.

அந்த வகையில் மனிதனின் ஈருலக விமோசனத்திற்குமுரிய நேர்வழிகாட்டலாக அவன் அல் குர்ஆனை அருளியுள்ளான். அதனால் அந்த நேர்வழிகாட்டலை உரிய முறையில் பயன்படுத்தி தன் பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் மனிதனுக்கு உரியதாகும்.



அதேநேரம் அல்லாஹ்வின் நேர்வழிகாட்டல் மனிதனுக்கு மிகவும் இன்றியமையாதது என்பதையும் மறந்துவிட முடியாது. அது எவ்வளவு தூரம் அவசியமானது, முக்கியமானது என்பது, அல்லாஹ்வுடன் தினமும் உரையாடும் ஐவேளை தொழுகையில் சூரா பாத்திஹாவை 17 தடவைகள் ஓதுவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டு இருப்பதன் ஊடாகத் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

அதனால் அந்த நேர்வழிகாட்டலை அடைந்து கொள்வதற்காக அல்லாஹ்விடம் தினமும் பிரார்த்தனை செய்ய வேண்டும். அதனை கோருவதற்கான ஒழுங்கையும் அவனே சொல்லித் தந்திருக்கின்றான்.

அல் குர்ஆனின் ஆரம்ப அத்தியாயமாக விளங்கும் சூரா பாத்திஹாவின் 5 ஆம், 6 ஆம், 7ஆம் வசனங்கள் இதனைத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

'(அல்லாஹ்வே) நாங்கள் உன்னையே வணங்குகிறோம். உன்னிடமே உதவி தேடுகிறோம். நீ எங்களை நேரான வழியில் நடாத்துவாயாக. (அது) எவர்களுக்கு நீ அருள் புரிந்தாயோ அவர்கள் (சென்ற) வழி. (உன்) கோபத்திற்கு உள்ளானவர்களோ வழிதவறியவர்களோ சென்ற வழியல்ல.'

இந்த வசனங்களின் ஊடாக மனிதனுக்கு நேர்வழிகாட்டலின் தேவையும், அவசியமும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. அந்த வழிகாட்டல் எவ்வாறானது என்பதும் எவ்வாறானவர்கள் சென்ற வழி என்பதும் இங்கு எடுத்தியம்பப்பட்டுள்ளன. அது அல்லாஹ் அருள்புரிந்து நேர்வழி சென்றவர்களது வழிகாட்டலே அன்றி அல்லாஹ்வின் கோபத்திற்கு உள்ளானவர்களும் வழி தவறியவர்களும் சென்ற வழி அல்ல. இதன் படி அல்லாஹ் அருள் புரிந்து நேர்வழி பெற்றவர்கள் சென்ற வழியை அடைந்து கொள்வதை இலக்காகவும் நோக்காகவும் கொண்டு செயற்பட வேண்டும்.

மனிதன் பலவீனமானவனாகவும் மறதியுடையவனாகவும் இருக்கின்றான். அதனால் கடமையாக்கப்பட்டிருக்கும் ஐவேளைத் தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்திலும் இந்த அத்தியாயத்தை ஓத வேண்டும். 'இந்த அத்தியாயத்தை ஓதாவிட்டால் தொழுகை நிறைவேறாது' என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதன்படி கடமையான ஐவேளைத் தொழுகையிலும் 17 தடவைகள் இவ்வத்தியாயம் ஓதப்படும் ஒழுங்கமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக ஸுன்னத்தான தொழுகைகளின் போதும் இந்த அத்தியாயம் ஓதப்படும். ஆக நாளொன்றுக்கு 17 தடவைகளுக்கு மேல் இந்த அத்தியாயம் ஓதப்படுவதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் செய்து வைத்திருக்கின்றான்.

இதன் ஊடாக இவ்வத்தியாயத்தை மனனம் செய்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதேநேரம் இந்த அத்தியாயத்தை பொருளுணர்ந்து ஓதும் போது அது வழங்கும் செய்தியையும் தூதையும் புரிந்து கொண்டு செயற்படவும் அடித்தளமாக அமையும். அது ஓதுகின்றவரின் தனிப்பட்ட வாழ்வையும் குடும்ப மற்றும் சமூக வாழ்வையும் புடம்போட்டு பக்குவப்படுத்த வழிவகுக்கும்.

மேலும் தினமும் 17 தடவைக்கு மேல் இந்த சூராவை தொழுகையில் ஓதி அல்லாஹ்வின் நேர்வழிகாட்டலைத் தொடராகவும் சீராகவும் கோரி வரும்போது அவனது நேர்வழிகாட்டல் கிடைக்கப்பெறவே செய்யும்.

அவ்வழிகாட்டல் மாபெரும் அருளாகவும் பாக்கியமாகவும் இருக்கும். அவ்வாறான பாக்கியத்தில் தொடர்ந்தும் நீடித்து நிலைத்திருப்பதற்கும் இப்பிரார்த்தனை இன்றியமையாததாகும்.

அல்லாஹ்வின் நேர்வழிகாட்டலை அடைந்து கொள்ளும் போது வாழ்வில் அமைதியும் நிம்மதியும் உதயமாகும்.

ஈருலக வாழ்வின் விமோசனத்திற்கும் சுபீட்சத்திற்கும் இவ்வழிகாட்டல் இட்டுச்செல்லும்.

ஷைத்தானின் சதி, சூழ்ச்சிகள் எடுபடாது. உலகின் ஆசாபாசங்களும் வீண் விளையாட்டுகளும் மனிதனில் செல்வாக்கு செலுத்த முடியாது. அவை மனிதனை கைசேதத்திற்கும் நஷ்டத்திற்கும் உள்ளாக்கவும் கிடைக்காது.

ஆகவே அல்லாஹ்வின் வழிகாட்டலின் அடிப்படையில் அவனது நேர்வழிகாட்டலை பெற்றுக்கொள்வதற்காக முயற்சிப்போம்.

அதற்காக அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் நபி(ஸல்) அவர்களின் போதனைகளுக்கும் அமைய தொடர்ந்து உழைப்போம்.

மர்லின் மரிக்கார் ...

# நாவைப் பேணுவதன் சிறப்பு

இங்கிதம் தெரியாமல் பேசுதல் கூடாது. சந்தர்ப்ப சூழ்நிலைகளை அறிந்து அற்கேற்ப பேசுதல் வேண்டும். வில்லில் இருந்து புறப்பட்ட அம்பும் வாயில் இருந்து வெளிப்பட்ட வார்த்தைகளும் திரும்பப் பெற முடியாதவை. வார்த்தைகள் உணர்வுகளின் பிரதி விம்பம். உறவுகள் நிலைத்து நீடிப்பதற்கும் உடைந்து போவதற்கும் கூட எமது வார்த்தைகள் காரணமாக அமைந்துவிடுகின்றன. நாம் பேசும் வார்த்தைகள் நம்முடைய அறிவாற்றலை மாத்திரமல்லாமல் எமது கலாசார பின்னணியையும் வெளிப்படுத்தி நிற்கும்.

இங்கிதமாகப் பேசி அடுத்தவரைக் கவர்ந்து விடுவது பொதுவான நடைமுறையாகும். ஆனால் சமார்த்தியமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வதை இஸ்லாம் ஏற்கவில்லை. இனிமையாகப் பேசும் சமார்த்திய சாலிகளின் பேச்சின் ஊடே இழையோடும் அந்தரங்கத்தை புத்திசாலிகளால் அறிந்து கொள்ளலாம். அவர்கள் அத்தகையோரை நெருங்கவே அனுமதிப்பதில்லை. திறமைமிக்க விற்பனையாளர்கள் பலர் தோற்றுப் போனதற்கு அளவுக்கு அதிகமாகப் பேசி வாடிக்கையாளர்களின் வெறுப்பினை சம்பாதித்துக் கொள்வது தான் காரணம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நாயகத் தோழர் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள், 'எந்த இறைவனைத் தவிர இன்னொரு இறைவன் இல்லையோ அவனுடைய திருப்பெயரால் குறிப்பிடுகிறேன். இப்பூமியில் அதிகமான கால அளவு சிறை வைத்திட வேண்டியது நாவைத் தவிர வேறொன்று இல்லை' என்று அறிவித்துள்ளார்கள். **(ஆதாரம்: தபரானி)**

அதேநேரம் ஸெய்யித் பின் முஸைப் (ரலி) அவர்கள், 'நபி (ஸல்) அவர்கள் தங்களுடைய தோழர்களுடன் அமர்ந்திருக்கும் போது, ஒருவர் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு எதிராக அவமானம் தரும் வார்த்தைப் பிரயோகித்தார். அது அபூபக்கர் (ரலி) அவர்களைப் பெரிதும் புண்படுத்தியது.

ஆனாலும் அபூபக்கர் (ரலி) அவர்கள் பொறுமை காத்தார்கள். மூன்றாவது முறையும் அம்மனிதர் தம் நாவால் அபூபக்கர் (ரலி) அவர்களைப் புண்படுத்திய போது அபூக்கர் (ரலி) அவர்கள் எழுந்து பதிலளிக்க முற்பட்டார்கள்.

உடனே நபி (ஸல்) அவர்கள் எழுந்தார்கள். அச்சமயம் அபூபக்கர் (ரலி) அவர்கள், நபி (ஸல்) அவர்களிடம், 'யாரசூலுல்லாஹ் நீங்கள் என் மீது அதிருப்தி கொள்கிறீர்களா? எனக் கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'இல்லை. ஆனால் வானத்திலிருந்து ஒரு வானவர் வந்தார். அவர் அந்த மனிதரின் வார்த்தையை மறுத்துரைக்க முயன்றார்.

நீங்கள் அந்த வார்த்தைகளுக்கு பதிலளிக்க முற்பட, அவ்வானவர் திரும்பிச் சென்று விட்டார். அவ்விடத்தில் ஷைத்தான் அமர்ந்து கொண்டான்.

ஷைத்தான் இருக்கும் இடத்தில் நான் இருக்க முடியாது. ஆகவே தான் நான் எழுந்தேன்' என்றார்கள். **(ஆதாரம்: அபூதாவூத்)**

'நாவை தங்கள் கட்டப்பாட்டில் வைத்திருக்க முடியாமல் தங்களை நாவின் கட்டுப்பாட்டில் ஒப்படைப்பவர்கள் வாழ்க்கையில் பின்னடைவுக்கு உள்ளாவார்கள். அவமானமும் அமைதி இன்மையுமே அவர்களை வந்தடையும்' என்று என்று ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

எனவே அவசியமானதைத் தெளிவாகவும் திருத்தமாகவும் கனிவாகவும் பேசுவோம். தேவையற்ற முறையில் பேசுவதைத் தவிர்த்திடுவதில் அதிக கவனம் செலுத்துவோம். சமயம் அறிந்து தேவை அறிந்து பேசுவோம், வெற்றி பெறுவோம்.

தொகுப்பு:
ஜத்து ஹன்ழலா...

# நபிகளாரை கண்ணீர் சிந்த வைத்த சம்பவம்

ஒரு தடவை இளைஞரொருவர் மிகுந்த கோபத்துடன் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார். 'இறைத் தூதர் (ஸல்) அவர்களே, அந்தக் 'கிழவனின்' தொல்லை தாங்க முடியவில்லை. ரொம்பவும் தொந்தரவு படுத்துகிறார்' என்று உதடுகள் துடிதுடிக்க முறையிட்டார் அந்த இளைஞர்.

நபி (ஸல்) அவர்கள் அமைதியாக, 'நீ யாரைப் பற்றிச் சொல்கிறாய்?' என்று வினவினார்கள். அப்போது அந்த இளைஞர், 'வேறு யார்? என் தந்தைதான். நான் சம்பாதித்து வரும் பொருளை எல்லாவற்றையும் அவர் எடுத்துக் கொள்கிறார். அடிக்கடிப் பணம் கேட்கிறார். என் சட்டைப் பையில் பணம் இருந்தால் ஒரு வார்த்தைக் கூட என்னிடம் சொல்லாமல் எடுத்துக்கொள்கிறார்' என்றார்.

அதனைத் தொடர்ந்து நபி(ஸல்) அவர்கள் இளைஞரின் தந்தையை அழைத்துவர ஆளொருவரை அனுப்பினார். சொற்ப நேரத்தில் வயதான மனிதர் ஒருவர் தள்ளாடித் தள்ளாடி வந்தார். அவரால் சரியாக நடக்கக்கூட முடியவில்லை. முகத்தில் வரிவரியாய் தோல் சுருங்கி முதுமையின் முத்திரைகள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தார்.

நபி (ஸல்) அவர்கள் அந்த முதியவரை அமரச் சொன்னார். பிறகு, 'பெரியவரே, உங்களைப் பற்றி உங்கள் மகன் சொன்னதெல்லாம் உண்மைதானா?' என நபி (ஸல்) அவர்கள் வினவினார்கள். இறைத்தூதரை ஏறிட்டுப் பார்த்த அந்தப் பெரியவர் அமைதியான குரலில் உறுதியாகப் பேசத் தொடங்கினார். 'இறைத்தூதர் (ஸல்) அவர்களே, இவன் என் மகன். இவனை வளர்த்து ஆளாக்க நான் பட்ட சிரமங்கள் ஒன்றா இரண்டா..! இவன் நிம்மதியாகத் தூங்க வேண்டும் என்பதற்காக நான் தூங்காமல் விழித்த இரவுகள் எத்தனை..! எத்தனை..!

இவனை என் மார்பிலும் தோளிலும் போட்டு எப்படியெல்லாம் செல்லமாக வளர்த்தேன். இவன் பலவீனமாக இருந்தபோது நான் பலசாலியாக இருந்தேன்.

இவன் ஒன்றுமில்லாதவனாய் இருந்தபோது நான் பணக்காரனாய் இருந்தேன். அப்பொழுதெல்லாம் என் பொருள்களை இவன் எடுத்துப் பயன்படுத்துவதை நான் தடுக்கவில்லை. இவன் கேட்காமலேயே இவனுக்கு எவ்வளவோ செய்தேன்.

இன்று நான் பலவீனன் ஆகிவிட்டேன். இவன் பலசாலியாக இருக்கிறான். நான் ஒன்றுமில்லாதவனாய் ஆகிவிட்டேன். இவன் பணக்காரன் ஆகிவிட்டான். ஆனாலும் இவன் எனக்கு எதையும் தருவதில்லை. நானாக எடுத்துக் கொண்டாலும் தடுக்கிறான். இது நியாயமா இறைத்தூதர் அவர்களே?' என்று கேட்டார் முதியவர்.

இங்கு முதியவர் பேசப் பேச அண்ணலாரின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அந்த இளைஞனை அழைத்து, 'நீயும் உன்னுடைய சம்பாத்தியம், பொருள்கள் அனைத்தும் உன் தந்தைக்குரியவையே' என்று அவனை எச்சரித்து அனுப்பினார்கள்.

**(ஆதாரம்: தப்ரானி, பைஹகி)**

இந்த நபிமொழி எடுத்தியம்பும் சம்பவத்தை போன்று எத்தனையோ பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் ஒதுக்குதல்களுக்கும் அவமதிப்புகளுக்கும் உள்ளானவர்களாக இன்றைய நவீன அறிவியல் யுகத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அவை நபிகளாரின் போதனைகளுக்கும் வழிகாட்டுதல்களுக்கும் முற்றிலும் முரணானவை என்பதை மறந்து விடலாகாது.

ஆகவே நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப பெற்றோருடன் நடந்து கொள்வோம். அதன் ஊடாக அன்னாரின் போதனையையும் உயிர்ப்பிப்போம்.

அபூ அம்மார்...

# திட்டுதலும் சபித்தலும் ஆகுமானதா?

ஒரு முஸ்லிம் கோபப்படுவது அல்லாஹ்வுக்காகத்தான் என்றான போது, அக்கோப வேளையில் வெறுப்பான சொற்களைக் கொட்டுதல், அசிங்கமாகத் திட்டுதல் போன்ற செயல்கள் வெளிப்படாமல் தவிர்த்துக்கொள்ள வேண்டும். பொதுவாக ஒரு முஸ்லிம் இயல்பாகவே அருவருப்பாக பேசுதல், ஆபாசமாகத் திட்டுதல், சபித்தல் போன்ற வெறுப்பை ஏற்படுத்தக்கூடிய பண்புகளைத் தவிர்த்து இஸ்லாமிய வழிமுறையைப் பின்பற்றுவார்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'முஸ்லிமைத் திட்டுவது பாவமாகும். அவருடன் போர் செய்வது குஃப்ராகும்' என்றார்கள் **(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)**

மற்றொரு சந்தர்ப்பத்தில், 'அசிங்கமான செயல்களைச் செய்பவரையும், அசிங்கமான சொற்களைப் பேசுபவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: முஃஜமுத் தப்ரானி, முஸ்னத் அஹ்மத்). அத்தோடு, 'மடத்தனமான செயல்களை செய்பவரையும், ஆபாசமான செயல்களை செய்பவர்களையும் அல்லாஹ் கோபிக்கிறான்' என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: முஃஜமுத் தப்ரானி)

'முஃமின் (அல்லாஹ்வை விசுவாசித்தவர்) குத்திக் காட்டுபவராகவோ, சபிப்பவராகவோ, மூடத்தனமான செயலை செய்பவராகவோ, ஆபாசமாகப் பேசுபவராகவோ இருக்கமாட்டார்' என்றுள்ளார் நபி (ஸல்) அவர்கள்.

**(ஆதாரம்: அல் அதபுல் முஃப்ரத்).**

உண்மையான இறைவிசுவாசியிடம் சக மனிதர்களின் உணர்வுகளைக் காயப்படுத்தும் வார்த்தைகள் வெளிப்படாது. நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரிச் செயல்களும் வார்த்தைகளும் அவரில் வெளிப்படும்.

இதற்கு நபி (ஸல்) அவர்களிடம் பணியாற்றிய அனஸ் (ரழி) அவர்களின் அறிவிப்பு நல்ல எடுத்தக்காட்டாகும். 'நபி (ஸல்) அவர்கள் அருவருப்பான செயலை செய்பவராகவோ, சபிப்பவராகவோ, ஏசுபவராகவோ இருக்கவில்லை. மிகவும் கோபமான சந்தர்ப்பங்களில், 'அவருக்கென்ன நேர்ந்தது. அவரது நெற்றி மண்ணாகட்டும்' என்று சொல்பவர்களாக இருந்தார்கள். **(ஆதாரம்: புஹாரி)**

மேலும் ஏகத்துவ அழைப்பை ஏற்க மறுத்த இறை நிராகரிப்பாளர்களைச் சபிப்பதிலிருந்தும் நபி (ஸல்) அவர்கள் தவிர்ந்து கொண்டார்கள். அவர்களைக் காயப்படுத்தும் வார்த்தைகளைக் கூட அன்னார் கூறியதில்லை.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்களிடம், 'அல்லாஹ்வின் தூதரே! இறைநிராகரிப்பாளர்களுக்கு எதிராக அல்லாஹ்விடம் துஆச் செய்யுங்கள்' என்று கூறப்பட்டதற்கு நபி (ஸல்) அவர்கள், 'நான் சபிப்பவராக அனுப்பப்படவில்லை. அருட்கொடையாகவே அனுப்பப்பட்டுள்ளேன்' என்றுள்ளார்கள். **(ஆதாரம்: முஸ்லிம்)**

மற்றொரு தடவை மது அருந்திய மனிதரொருவர் நபி (ஸல்) அவர்களிடம் கொண்டுவரப்பட்டார். நபி (ஸல்) அவர்கள் மக்களிடம் 'அவரை அடியுங்கள்' என்று கூறினார்கள். எங்களில் சிலர் கைகளைக் கொண்டும், சிலர் செருப்புகளைக் கொண்டும், சிலர் துணியைக் கொண்டும் அவரை அடித்தனர். அடித்து முடித்தபோது கூட்டத்திலிருந்த ஒருவர் 'அல்லாஹ் உன்னை இழிவுபடுத்தட்டும்' என்று கூறினார். உடனே நபி (ஸல்) அவர்கள் 'அவ்வாறு சொல்லாதீர்! அவருக்கு எதிராக ஷைத்தானுக்கு உதவி செய்யாதீர்' என்று கூறினார்கள். **(ஆதாரம்: புஹாரி)**

இதன் ஊடாக பாவமும், வழிகேடும், வரம்பு மீறுதலுமே வழமையாகக் கொண்டவரிடமும் கருணை காட்டுவதற்கு இஸ்லாம் வழிகாட்டியுள்ளது என்பது தெளிவாகிறது. நபி (ஸல்) அவர்கள் மக்களின் உள்ளங்களிலிருந்து குரோதம், விரோதம் ஆகியவற்றைக் களைந்தார்கள். மக்களின் கண்ணியத்தை தகர்க்கும் விதமாக தனது நாவை பயன்படுத்தியவரின் முடிவு எவ்வாறு இருக்கும் என்பதையும் எடுத்துக்கூறினார்கள். நியாயமற்ற அவதூறுகளையும் வரம்பு மீறிய குற்றச்சாட்டுகளையும் அருவருப்பான வார்த்தைகளையும் பிறர்மீது வீசி எறிபவன் மறுமை நாளில் எண்ணற்ற நன்மைகளைச் சுமந்து வந்தும், அவனது தீய செயல்கள் அனைத்து நன்மைகளையும் சூறையாடிவிடும். தன்னை நரகிலிருந்து காக்கும் எவ்வித சாதனமுமின்றி சபிக்கப்பட்டவனாக நரகில் வீசப்படுவான் என்பதை நபி (ஸல்) அவர்கள் தெளிவுபடுத்தினார்கள்.

மேலும் நபி (ஸல்) அவர்கள், 'பரம ஏழை யாரென்பதை நீங்கள் அறிவீர்களா?' என நபித்தோழர்களிடம் வினவிய போது, 'எவரிடம் ஒரு திர்ஹம் கூட இல்லையோ, இன்னும் எந்தப் பொருளும் இல்லையோ அவரையே நாங்கள் பரம ஏழையாகக் கருதுவோம்' என்றனர். அப்போது நபி (ஸல்) அவர்கள், 'எனது உம்மத்தில் பரம ஏழை யாரெனில், அவர் மறுமை நாளில் தொழுகை, நோன்பு, ஸகாத்தைக் கொண்டு வருவார். ஆனால் அவர் ஒருவரை திட்டியிருப்பார், மற்றொருவரை அவதூறு பேசியிருப்பார், ஒருவருடைய பொருளை அபகரித்திருப்பார், ஒருவரை கொலை செய்திருப்பார், ஒருவரை அடித்திருப்பார். அவருடைய நன்மைகள் அவர்களில் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும். அவர் மீதுள்ள குற்றங்கள் முடிவதற்கு முன்னால் அவரது நன்மைகள் தீர்ந்துவிடும்போது பாதிக்கப்பட்டவர்களின் பாவங்களை எடுத்து அவர்மீது சுமத்தப்பட்டு அவர் நரகில் வீசி எறியப்படுவார் என்று குறிப்பிட்டார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

உண்மையான இஸ்லாமிய சமூகத்தில் வாழும் ஒவ்வொரு முஸ்லிமும் தனது வாயிலிருந்து வெளிப்படும் ஒவ்வொரு வார்த்தையும் இறைசமூகத்தில் விசாரிக்கப்படும் என்பதை ஆழமாக உணர்ந்திருப்பர். வீண் விவாதம், சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதிலிருந்து தன்னை தற்காத்து கொள்வர்.

அதனால் 'ஒருவரையொருவர் திட்டிக் கொண்டால் மற்றவர் வரம்பு மீறாதிருக்கும் வரை அதன் பாவங்கள் அனைத்தும் அதை ஆரம்பித்தவருக்கே உரியதாகும்' என (ஆதாரம்: முஸ்லிம்) நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டிருப்பதை இங்கு நினைவில் கொள்வது அவசியம். இதன் ஊடாகப் பிறரைத் திட்டுவதிலிருந்து நாவைப்பேணி, கொழுந்து விட்டெரியும் கோப ஜுவாலையிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் வழிவகுக்கும்.

அதேநேரம் தனது வாழ்வில் இறந்தவர்கள் உட்பட பிறரை நாவால் காயப்படுத்துவதிலிருந்து உணமையான முஸ்லிம் தவிர்ந்து கொள்வார். இருப்பினும் சிலர் தம் நாவுகளால் உயிருள்ளவர்களை மட்டுமின்றி மரணித்தவர்களையும் கூட தவறாக பேசிக்கூடியவர்களாக இருக்கின்றனர். ஆனால் நபி (ஸல்) அவர்கள், 'மரணித்தவர்களைத் திட்டாதீர்கள்! நிச்சயமாக அவர்கள் தாங்கள் முற்படுத்தியதை அடைந்து கொண்டார்கள்' என்றார்கள். (ஆதாரம்: புஹாரி)

ஆகவே ஏசுதல், திட்டுதல், அருவருப்பாக பேசுதல் போன்ற இழி செயல்களிலிருந்து தமது நாவை காத்துக்கொள்வது போன்று மக்களைப் பெரும்பாவி என்றும், இறை மறுப்பாளர் என்றும் கூறுவதிலிருந்தும் விலகிக்கொள்ள வேண்டும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள், 'ஒரு மனிதர் மற்றவரை இறைநிராகரிப்பாளர் அல்லது பெரும்பாவி என்று கூறிய போதிலும், அம்மனிதர் அதற்குரியவராக இல்லாவிடில் அத்தன்மை கூறியவரிடமே திரும்பிவிடும் என்றுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி) அதனால் அவ்வாறான நிலைமைகளைத் தவிர்ந்து கொள்வதில் உச்சபட்ச கவனம் எடுத்துக்கொள்வோம்.

மின்ஸார் இப்றாஹீம்...



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**எல்லா வினாக்களுக்கும் விடைதருக.**

**I. பந்தியை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்குக.**

சிறுவர்கள் கடற்கரையில் பட்டாம் பூச்சிகளைப் போல் அங்கும் இங்கும் ஓடியாடி விளையாடுகின்றனர். இக்காட்சியை பெற்றோர்களும் உறவினர்களும் கண்டுகளித்துக் கொண்டிருந்தனர். பறவைகள் கூட்டம் கூட்டமாக பறந்து திரிந்து கொண்டிருந்தன. நீலக்கடலில் அலைகள் பொங்கி கரையை நோக்கி பாய்ந்து வந்து கொண்டிருந்தன.

1. இப்பந்தியிலுள்ள இணைமொழிகள் இரண்டினை எழுதுக.

…………………………………………………………………………………………

2. இங்கு சிறுவர்களுக்கு உவமையாக சொல்லப்பட்டது எது?

………………………………………………………………………………………........

3. அஃறினை பலவின்பால் பெயர்ச்சொல் ஒன்றினை தெரிக.

…………………………………………………………………………………………

4. இதிலுள்ள அடுக்குத்தொடர் ஒன்றினை எழுதுக.

…………………………………………………………………………………………

5. பிரித்தெழுதுக
i. கடற்கரையில் - ……………………..…  ii. நீலக்கடல் - ……………………........

6. இப்பந்தியிலுள்ள பெயர் அடைமொழியொன்றினை எழுதுக.

…………………………………………………………………………………………

**II. பொருத்தமான பயனிலை சொல்லை தெரிந்து கோடிடுக.**

7. யானைக் கூட்டம் பயிர்களை ……………………… (அழித்தது / அழித்தன)

8. அதிகாலையில் பறவைகள் ……………………….. (சத்தமிட்டது / சத்தமிட்டன)

9. நாங்கள் நாளை ………………………… (புறப்படுவேன் / புறப்படுவோம்)

10. நான் விளையாட ………………………….. (போகின்றேன் / போவோம்)

**III. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.**

11. i. ஆசிரியர் அனைவரையும் வேகமாக வாருங்கள் என்றார்

…………………………………………………………………………………………

ii. அவரிடம் காணப்பட்ட சிறந்த குணம் யாது

……………………………………………………………………………………....

**IV. தனிச்சொல்லை எழுதுக.**

12. i. தன்னைப்பற்றி தானே கூறுவது ………………………………………………….....

ii. நடக்கப் போவதை முன்பே அறிபவர் ……………………………………………….…

**V. பின்வரும் வாக்கியங்களை ஒருமை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

13. நாங்கள் பானம் அருந்த வந்தோம்.

…………………………………………………………………………………………

14. பிள்ளைகள் பாடம் படிக்கின்றார்கள்.

…………………………………………………………………………………………

15. பறவைகள் இரைதேடி பறக்கும்.

…………………………………………………………………………………………

**VI. தரப்பட்டுள்ள வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

16. கண்ணையும் / அழகு / கவரும் / கருத்தையும் / சிற்பங்கள் / வாய்ந்தவை

…………………………………………………………………………………………

17. அரசன் / அறைகூவி / அயல்நாட்டு / அழைத்தான் / மன்னனை

…………………………………………………………………………………………

**VII. சேர்த்தெழுதுக**

18 i. தென்னை + காய் - ……………………………………………………………...

ii. பல் + பசை - …………………………………………………………………...

**VIII. பின்வரும் படங்களில் உள்ளவற்றின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.**

19.





i. …………………………..  ii. …………………………

20. பின்வரும் தமிழ் சொற்களின் கருத்தின் சிங்கள சொல்லை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
i. ஞாயிற்றுக்கிழமை - ……………………………………………………………

ii. ஒன்பது - ………………………………………………………………………

**IX. பின்வரும் நியம நேரங்களை சாதாரண நேரத்தில் எழுதுக.**


21. i. 13 : 15 மணித்தியாலம் - ……………………………………………………

ii. 02 : 10 மணித்தியாலம் - ……………………………………………………

22. பின்வரும் மீற்றர், சென்ரிமீற்றர் அளவுகளை சென்ரிமீற்றரில் எழுதுக.

i. 5m 35 cm - ………………………  ii. 23m 05 cm - …………………………

23.



i. இத்திண்ம உருவிலுள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது?


……………………………………………………………..

ii. இதன் முகங்களின் வடிவம் என்ன? ………………………

24. எண்பதாயிரத்து எண்பது இதனை இலக்கங்களில் எழுதுக.

…………………………………………………………………………………………

25.




உருவிலுள்ள ஒவ்வொரு கட்டத்தினதும் நீளமும் அகலமும் சமம் உருவிலுள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

…………………………………………………

26. ரூபாய் 37.50 பெறுமதியான 3 புத்தகங்களை வாங்கிய வர்சான் கடைக்காரரிடம் ரூபாய் 500.00 கொடுத்தான். அவனுக்கு கிடைக்கும் மிகுதிப்பணம் எவ்வளவு?

…………………………………………………………………………………………

27.




பென்சிலின் நீளம் என்ன? ………………………………………………………….

28. IX + V+ V – IV = ? ……………………………………………………………….

29. பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்தி நடுவிலுள்ள எண்ணை எழுதுக.
23415, 24315, 25431, 21345, 21453

……………………………………………………………………………………....

**X. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. இலங்கையில் விலைமதிப்புமிக்க இயற்கை வளம் கிடைக்கப்பெறும் மாவட்டம் எது?
i. கண்டி  ii. இரத்தினபுரி  iii. கேகாலை

31. வீட்டுத்தோட்டச் செய்கையின் போது வேலிக்கம்புக்குப் பொருத்தமானது
i. கிளிசறிடியா  ii. பலா  iii. இலவம்

32. நீர்மின் உற்பத்திக்கு பயன்படும் சக்தி
i. மின்சக்தி  ii. நீரின் அமுத்த சக்தி  iii. காற்று சக்தி

33. இந்துக்கள் பௌத்தர்களின் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பொருள்
i. வாழையிலை  ii. மாவிலை  iii. வெற்றிலை

34. இலங்கையில் பிரசித்திபெற்ற மிருகக்காட்சிசாலை அமைந்துள்ள இடம்
i. பின்னவல  ii. யால  iii. தெகிவளை

35. SLS
இவ்விலட்சினை குறிப்பது
i. இலங்கையின் தர நிர்ணய இலட்சினை
ii. சர்வதேச தர நிர்ணய இலட்சினை
iii. உலக தர நிர்ணய இலட்சினை

36. தாவரங்கள் பசுமையாக வளர தேவையான முக்கிய காரணி
i. காற்று  ii. சூரிய ஒளி  iii. வெப்பம்

37. திசையறி கருவியை கட்டாயமாக பயன்படுத்த வேண்டியவர்?
i. மாலுமி  ii. விவசாயி  iii. வைத்தியர்

38. சீமெந்து தரையில் விழுந்தவுடன் மிக விரைவாக ஆவியாகும் திரவம்
i. நீர்  ii. மண்ணெண்ணெய்  iii. பெற்றோல்

39. சட்டகாந்தமொன்றினை அதன் நடுப்பகுதியில் கட்டி தொங்கவிடுகின்ற போது அதன் வடமுனை எத்திசையை நோக்கி இருக்கும்?
i. வடக்கு திசையை  ii. தெற்கு திசையை
iii. கிழக்கு திசையை

40. எமது நாட்டின் தேசியகொடியில் தேசிய ஒற்றுமையைக் குறிக்கும் நிறம்
i. சிவப்பு  ii. பச்சை  iii. மஞ்சள்

41. நீரில் முழுமையாக கரையாத பொருள்
i. சீனி  ii. உப்பு  iii. மஞ்சள் தூள்

42. நீல நிற சாயத்தையும் சிவப்பு நிறச் சாயத்தையும் கலக்கும் போது கிடைப்பது
i. ஊதா  ii. பச்சை  iii. கபிலம்

43. எமது நாட்டில் பரப்பளவில் பெரிய மாகாணம் எது?
i. மேல்மாகாணம்  ii. வட மத்திய மாகாணம்  iii. வடமாகாணம்

44. தேசிய கீதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
i. C.W.W. கன்னங்கரா  ii. ஆனந்த சமரகோன்
iii. மு.நல்லதம்பி

45. களுகங்கை கடலுடன் சேரும் இடம்
i. களுத்துறை  ii. கொழும்பு  iii. திருகோணமலை

(10ஆம் பக்கம் பார்க்க)

09 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

46. இறப்பர் தாவரம் பூக்கும் மாதம் எது?
i. மாசி ii. பங்குனி iii. தை

47. இறக்கை இல்லாத உடல் முழுவதும் உரோமத்தினால் மூடப்பட்ட பறவையினம்
i. கிவி ii. பெங்குயின் iii. வௌவால்

48. இரவு நேரத்தில் பயிர்களை காக்க பயன்படுத்தப்படும் முறைகளில் ஒன்று
i. வெருளி ii. நீர்ப்பிசாசு iii. வேலி

49. சிவப்பு நிறமில்லாத இரத்தத்தை கொண்டிருக்கும் பிராணி
i. புறா ii. எலி iii. கரப்பான் பூச்சி

50. வாகனமொன்றின் தடுப்பினை பிரயோகிக்கும் போது ஒளிரும் விளக்கின் ஒளி யாது?
i. சிவப்பு ii. மஞ்சள் iii. செம்மஞ்சள்

51. பாம்பு தீண்டிய ஒருவருக்கு செய்யக்கூடாத முதலுதவி
i. கடிவாய்க்கு மேல் இறுக்கமாக கட்டுதல்
ii. கடிவாயில் வாயை வைத்து உறிஞ்சுதல்
iii. வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதல்

52. தேசிய மரபுரிமை என்பது
i. எமது நாட்டில் உருவாகிய தனித்துவமானது ii. விலைமதிப்புமிக்கது
iii. அயல்நாடுகளிலிருந்து கொண்டு வருவது

53. விற்றமின் B உடலில் குறைவடைகின்ற போது ஏற்படும் மாற்றமானது
i. கண் பார்வை குறைவடைதல் ii. இரத்த உற்பத்தி குறைதல்
iii. பசியின்மை, தூக்கமின்மை

54. பின்வருவனவற்றுள் சிறுவர்களுக்கு எதிரான செயலாக அமைவது
i. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் ii. கல்வி கற்க உதவி செய்தல்
iii. உணவுகளை வழங்குதல்

55. பெருந்தெருக்களில் பயணம் செய்யக்கூடிய அதிக சில்லுகளையுடைய வாகனம்
i. புகைவண்டி ii. பேருந்து iii. வேன்

56. தாவர இலைகளில் கூடு அமைக்கும் பிராணி அல்லாதது
i. செவ்வெறும்பு ii. தையல்குருவி iii. கம்பளிப்பூச்சி

57. பின்வருவனவற்றுள் விரைவில் பழுதடையும் உணவானது
i. பால் ii. பயறு iii. கிழங்கு

58. அந்தமில் பட்டியின் பயனானது?
i. பொருட்களை இறுக்கமாக கட்டுவதற்கு
ii. பொருட்களைத் தூக்குவதற்கு
iii. சக்தியை கடத்த

59. வெளிநாட்டவர்களுடன் தொலைபேசி தொடர்பாடலை ஏற்படுத்த குறிப்பிடும் சுருக்கப் பெயர்
i. STD ii. IDD iii. SDD

60. "ஆபத்தில் அறியலாம் அருமை நண்பனை" எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் அமைந்திருப்பதோடு எழுவாய் பயனிலை தொடர்பு பொருந்தமானதாகவும் காணப்பட வேண்டும்.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

**கடந்த வார (05.08.2022) வினாத்தாள் 1 இற்கான விடைகள்**

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 2 | 05 | 1 | 09 | 2 | 13 | 2 | 17 | 3 | 21 | 2 | 25 | 2 | 29 | 2 | 33 | 1 | 37 | 1 |
| 02 | 1 | 06 | 3 | 10 | 1 | 14 | 1 | 18 | 1 | 22 | 2 | 26 | 1 | 30 | 1 | 34 | 3 | 38 | 2 |
| 03 | 2 | 07 | 3 | 11 | 3 | 15 | 2 | 19 | 2 | 23 | 2 | 27 | 2 | 31 | 2 | 35 | 2 | 39 | 2 |
| 04 | 1 | 08 | 1 | 12 | 1 | 16 | 3 | 20 | 2 | 24 | 3 | 28 | 3 | 32 | 1 | 36 | 3 | 10 | 1 |

# நல்லைக் கந்தன் உற்சவ காலத்தை முன்னிட்டு தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தால், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலே, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாடு மற்றும் அனுசரணையோடும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இணை அனுசரணையோடும் முன்னெடுக்கப்பட்டு வரும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு, நல்லைக் கந்தன் உற்சவப் பெருவிழாக் காலத்தினை முன்னிட்ட சிறப்பு நிகழ்வாக இடம்பெற்று வருகிறது.

அந்த வகையிலே, நல்லூர் உற்சவ காலத்தினை முன்னிட்ட தெய்வீகத் திருக்கூட்டச் சிறப்புத் தொடர் நிகழ்வின் ஒன்பதாம் நாள் வைபவம் 10.08.2022 புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலே, நல்லை ஆதீன அமெரிக்கா, ஹாவாய் சைவ ஆதீனக் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் வணக்கத்திற்குரிய ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க, யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தம் அவர்களின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா.பாலகணேசன் தலைமையில் இடம்பெற்றது.

கருணாகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலையின் ஆசிரியர் திருமதி சந்திரலதா கனேந்திரனின் வரவேற்புரை மற்றும் வணக்கத்திற்குரிய ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அவர்களின் ஆசியுரையினைத் தொடர்ந்து, உடுவில் பிரதேச செயலர் பிரிவின் கருணாகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலையின் நிகழ்வு ஏற்பாட்டில், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறின. சிறப்பு நிகழ்வுகள் வரிசையில், 'நம் சமூகம் வாழச் சேவகம் செய்த நாவலர் பெருமான்' என்னும் தலைப்பில் இளம் சைவப்புலவர் க.கைலைவாசனின் சிறப்புச் சொற்பொழிவும், கீதவாஹினி இசைக்கல்லூரி மாணவர்கள் வழங்கிய 'பல்லியம் – வாத்யபிருந்தா'இசை நிகழ்வும் சிறப்புற இடம்பெற்றன. நிறைவாகக் கலை நிகழ்வுகளை வழங்கிய மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட, கருணாகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலையின் ஆசிரியர் ஆ.சுந்தரமூர்த்தியின் நன்றியுரையோடு நிகழ்வு நிறைவடைந்தது.

**அ.கனகசூரியர்**







# ஹம்பாந்தோட்டை மக்களுக்கு இந்திய உதவிப் பொருட்கள்

இந்திய அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள வறிய குடும்பங்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் அரசி மற்றும் பால்மா என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி உதவி பெறுவோர் மற்றும் குறைந்த வருமானம் பெரும் 75000 குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கு பத்து கிலோ கிராம் அரிசி வழங்கப்பட்டதோடு குறைந்த வருமானம் பெரும் குடும்பங்களிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பால்மாவும் வழங்கி வைக்கப்பட்டது.



ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் நிகழ்வு மாவட்ட செயலாளர் எச். பீ. சுமணசேகர மற்றும் ஹம்பாந்தோட்டை இந்திய துணைத் தூதுவர் பீ. ஆர். தீபின் தலைமையில் ஹம்பாந்தோட்டை உணவுக் களஞ்சியசாலை தொகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் கௌசல்யா கலப்பத்தி மற்றும் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் சாந்தி அளுத்கே உட்பட மேலும் பல அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினை கருத்திற்கொண்டு இந்திய அரசாங்கத்தினால் பல்வேறு சந்தர்பங்களில் எமது நாட்டிற்கு வழங்கி வைக்கப்பட்ட உதவிகள் பல்வேறு கட்டங்களில் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் மற்றும் ஹம்பாந்தோட்டை இந்திய துணைத் தூதரகம் ஆகியவற்றினால் ஹம்பாந்தோட்டை மாவட்ட மக்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டமைக்காக ஹம்பாந்தோட்டை மாவட்ட மக்கள் இந்திய அரசாங்கத்திற்கும் ஹம்பாந்தோட்டை இந்திய துணைத் தூதரகத்திற்கும் தங்களது நன்றிகளை தெரிவித்தனர்,

**எம். இர்பான் ஸகரியா..**
(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

# சீரான முறையில் மக்களுக்கு எரிபொருள் வழங்கும் அக்கரைப்பற்று MPCS நிலையம்

மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு நாட்டு மக்களுக்கு எரிபொருள் விநியோகத்தினை சீரான முறையில் வழங்குவதற்காக அறிமுகப்படுத்திய QR முறைமை மிகவும் சீரான முறையில் நாட்டின் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் அக்கரைப்பற்று மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக சீரான முறையிலும், நேர்மையான முறையிலும் எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் பொதுமக்கள் கஷ்டமின்றி இலகுவாக எரிபொருளை பெறுவதற்காக, பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்ஸார் வழங்கிய ஆலோசனை மற்றும் வழிநடத்தலில், அக்கரைப்பற்று மத்திய பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் எம்.பீ.ஏ.ஹமீட் தலைமையில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் கழகங்களின் உறுப்பினர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் இச்செயற்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



எரிபொருள் பெறுவதற்கு வருகை தரும் பொதுமக்களினால் பொதுப்போக்குவரத்து மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வகையில் எரிபொருள் வழங்கலை மிகவும் நேர்த்தியான முறையில் மேற்கொண்டமையும் மக்களால் பாராட்டப்பட்டது. எரிபொருளானது வீண்விரயமற்ற முறையில் அத்தியாவசியமாக தேவையுடையவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலும் டோக்கன் வழங்கி QR Code மூலம் பரீட்சித்து வழங்கப்பட்டது.

எரிபொருள் பெற வருகின்ற மோட்டார் சைக்கிள்கள் உரிமையாளர்கள் தலைக்கவசம், முகக்கவசம் போன்றவை அணிந்துள்ளார்களா என்று சோதனை செய்த பின்பே எரிபொருள் வழங்கல் இடம்பெற்றது. அத்தோடு அக்கரைப்பற்று பொலிஸில் பதியப்பட்ட முற்சக்கர வண்டிகள் கூப்பனுடன் வருகை தருமிடத்து மாத்திரமே எரிபொருள் வழங்கப்பட்டது.

QR முறைமை ஊடாக நேர்மையான முறையில் எரிபொருளை வழங்கிய எரிசக்தி அமைச்சர் மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் மற்றும் அக்கரைப்பற்று மத்திய பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு இப்பிரதேச மக்கள் நன்றி தெரிவித்தனர்.

**எம்.எஸ்.எம்.றிஸ்வான்...**
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

புத்தளம் பிரதேசத்தில்

# புதுவித சருமநோயினால் மரணமடையும் நாய்கள்!



புத்தளம், கல்பிட்டி, நவகத்தேகம, ஆனமடுவ, வண்ணாத்திவில்லு ஆகிய பகுதிகளில் பல நாய்கள் முடி உதிர்தல் நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த நாய்கள் திடீரென விழுந்து உயிரிழப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த முடி உதிர்தல் நோயினால் பாதிக்கப்பட்ட நாய்கள் புத்தளம் மாவட்டத்தின் பல பகுதிகளில் காணப்படுகின்றன.

இந்நோய்க்கு பல நாய்கள் பலியாவதாகவும், நோய் தாக்கிய பின்னர் நாயின் முடிகள் அனைத்தும் உதிர்ந்து தோல் மட்டும் தெரிவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீட்டு நாய்கள் மற்றும் தெருநாய்கள் இந்த நோயினால் அடிக்கடி பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

நாயின் அனைத்து முடிகளும் உதிர்ந்தவுடன், நாய் மிகவும் நிறமாற்றமடைவதுடன் அவலட்சணமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. மேலும் நாயின் உடல் எங்கும் காயங்கள் ஏற்படுவதாகவும் காங்களில் சீழ் வடியும் நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பொது சுகாதார பரிசோதகரோ அல்லது கால்நடை அலுவலகங்களோ உரிய கவனம் செலுத்தவில்லையென மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

ஆனால் இந்த நோய் பூஞ்சை மற்றும் பக்றீரியா தொற்றுகளால் ஏற்படுவதாக கால்நடை மருத்துவர்கள் மற்றும் பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும் இந்நோய் பொது மக்களை எவ்வகையிலும் பாதிக்காதெனவும், நோய்வாய்ப்பட்ட நாய்களை கால்நடை அலுவலகங்களுக்கு கொண்டு சென்று முறையான தடுப்பூசிகள் போடுவதன் மூலம் நோயைக் கட்டுப்படுத்த முடியும் எனவும், தெருநாய்களால் இந்நோய் பெருமளவில் பரவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்நோய்த் தடுப்புக்காக வைத்திய முகாம்களை மாவட்டம் தோறும் நடத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**பிரியங்கர களுபாஹன..**
(புத்தளம் மாவட்ட குறூப் நிருபர்)

# உணவுப் பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு

உணவுப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 'தொலஸ் மகே பஹன வேலைத்திட்டம் 2022' செயற்திட்டத்தின் கீழ் வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கையினை ஊக்குவிக்கும் செயற்திட்டம் தற்பொழுது அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



மக்கள் தங்களது பொருளாதாரத்தினை தாமாகவே முன்னேற்றுவதற்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை இத்திட்டத்தின் மூலம் வழங்குவதுடன், வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையினை ஊக்குவிப்பதோடு ஒவ்வொரு வீட்டிலும் இத்திட்டத்தினை செயபடுத்துவதே நோக்கமாகும். இத்திட்டத்திற்கு அமைவாக அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கலைஞர்கள், கலைமன்றங்களின் உறுப்பினர்களுக்கு வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையினை ஊக்குவிக்கும் செயலமர்வு நடத்தப்பட்டதுடன் பயிர்ச் செய்கைக்கான விதை நாற்றுக்கள் அடங்கிய பொதிகள், மற்றும் பயிர்க் கன்றுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்ட பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்டம் செய்தல் மற்றும் பராமரிப்பு தங்களது பொருளாதாரத்தை விருத்தி செய்தல் தொடர்பாக துறைசார்ந்த உத்தியோகத்தர்களினால் விளக்கமளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் சாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்சான், அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஐ.ஏ.ஹமீட், விவசாய போதனாசிரியர்களான எம்.எச்.எம்.அப்துள்ளா, ஏ.எச்.ஏ.முபாறக், அட்டாளைச்சேனை பிரதேச கலாசார உத்தியோகத்தர் எம்.பற்பராசா, கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.சித்தி றஜாயி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**ஐ.ஏ.ஸிறாஜ் ...**
(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

# பயங்கரவாதிகள் தற்கொலைத் தாக்குதல்; ஜம்மு - காஷ்மீரில் 3 இராணுவத்தினர் பலி!

ஜம்மு காஷ்மீரின் ரஜோரி மாவட்டத்தின் தர்ஹால் பகுதியில் பார்கல் என்ற இடத்தில் உள்ள இராணுவ முகாம் மீது நேற்று பயங்கரவாதிகளின் தற்கொலைப்படை தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்த தற்கொலைப்படை தாக்குதலில், இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 3 வீரர்கள் உயிரிழந்தனர். தாக்குதலில் ஈடுபட்ட 2 பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலில் ஏராளமான இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து சம்பவம் நடைபெற்ற இடத்தில் கூடுதல் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதிகளின் தற்கொலைப் படை தாக்குதலில், இந்திய இராணுவத்தைச் சேர்ந்த ராஜேந்திர பிரசாத், மனோஜ் குமார் மற்றும் லக்ஷ்மணன் ஆகியோர் மரணமடைந்தனர். இதில் லக்ஷ்மணன் மதுரை மாவட்டம் டி.புதுப்பட்டியைச் சேர்ந்தவர்.

இராணுவ முகாம் எல்லையைக் கடந்து உள்ளே ஊடுருவ சிலர் முயன்றுள்ளனர். அவர்களை நிற்கும்படி கூறி பாதுகாப்பு படையினர் தடுத்து உள்ளனர். அவ்வேளையில் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்



# பாரம்பரிய நெல் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உற்பத்திச்செலவில் 50வீதம் மானியமாக வழங்கப்படும்

## கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எல்.கே.ஜி. முத்துபண்டா

(புளியந்தீவு குறூப் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் எதிர்வரும் மகாபோகத்தில் பாரம்பரிய நெல் உற்பத்தியில் ஈடுபட்டால், உற்பத்திச் செலவில் 50 வீதம் மானியமாக வழங்கப்படும் என்றும்,இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எல்.கே.ஜி. முத்துபண்டா பணிப்புரை விடுவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயச் சேவைப் பிரிவில் பணிபுரியும் அனைத்து உத்தியோகஸ்தர்களுக்குமே இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெற்செய்கை. பயிர்ச்செய்கை ஆகியனவற்றை மேம்படுத்துவது தொடர்பாக



மட்டக்களப்பு மாவட்ட விவசாய விரிவாக்கல் பணியில் ஈடுபடும் உத்தியோகஸ்தர்களுடன் கடந்த (10) கலந்துரையாடல் இடம்பெற்றது. பிரதிப்பணிப்பாளர் வி.பேரின்பராஸா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், விவசாய அமைச்சின் செயலாளர் எல்.கே.ஜி. முத்துபண்டா மற்றும் பணிப்பாளர் எஸ்.எம்.குசைன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு உத்தியோகஸ்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

முத்துபண்டா தொடர்ந்து பேசுகையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் நெல் உற்பத்தியை இன்னுமின்னும் உயர்வடையச் செய்ய உத்தியோகஸ்தர்கள் பணியாற்ற வேண்டும். விவசாயிகளை, களத்தில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்பதோடு அவற்றை நிவர்த்தி செய்து கொடுக்கவும் வேண்டும்.

நமது நாட்டின் பாரம்பரிய நெல்லினங்கள் அருகி வருகின்றன.அதில், பச்சைப்பெருமாள் நெல்லினமும் ஒன்று. இச்செய்கைக்கு அதிக உரப்பாவனை தேவையில்லை.

இது, இவ்வினத்தின் விசேட தன்மையாகும். இச்செய்கையில் ஈடுபடுவொருக்கு உற்பத்திச் செலவில் 50 வீதத்தை அமைச்சு மானியமாக வழங்க முடிவு செய்துள்ளது.

ஆதலால் இதனை எதிர்வரும் மகாபோகத்திலிருந்து நடைமுறைப்படுத்த நமது அதிகாரிகள் விரைந்து செயற்பட வேண்டும.

ஒவ்வொரு வெளிக்கள உத்தியோகஸ்தரும் வாரத்தில் 2 நாட்கள் விவசாயிகளது விவசாயச் செய்கைகளை பார்வையிட்டு, ஆலோசனை வழங்குவதுடன், அவர்கள் தெரிவிக்கும் குறைகளை தீர்த்துவைப்பதும் அவசியம்.

இவைகளில் தவறுகள் இடம்பெறக் கூடாது. எதிர்வரும் பெரும்போகச் செய்கையில் நெல் உற்பத்தியும், மரக்கறி வகைகளின் உற்பத்தியும் உச்சத்தை தொடவேண்டுமென எதிர்பார்ப்பதாகவும் முத்துபண்டா தெரிவித்தார்.

# திருகோணமலையில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு, பொலிஸார் தேடுதல்

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

நாட்டில் தற்போது போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருகின்ற நிலையில், திருகோணமலை மாவட்டத்திலும் விற்பனையாளர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் ஹெரோயின் போதைப் பொருள், கேரளா கஞ்சா மற்றும் போதை மாத்திரைகள் பாவிப்பவர்களின் வீதம் அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் பொலிஸ் போதை பொருள் தடுப்பு பிரிவின் திருகோணமலை பிராந்திய அதிகாரிகள், தொடர்ச்சியாக சுற்றி வளைப்புக்களை மேற்கொண்டு குறித்த சந்தேக நபர்களை கைது செய்து வருகின்றனர்.

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டி. சந்தியில் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில், சந்தேகநபரொருவரை கைது செய்துள்ளதாக பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவின் திருகோணமலை பிரிவினர் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் தொடர்பில் கிடைத்த தகவலையடுத்து, இவர் மீது சோதனை நடாத்தப்பட்டது. இவரிடமிருந்து 5 கிராம் 600 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளை மீட்டதாகவும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரை, திருகோணமலை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

# கல்முனை வலய கல்விப்பணிப்பாளராக எம்.எஸ் சஹுதுல் நஜீம் நியமனம்

(நற்பிட்டிமுனை விசேட நிருபர்)

கல்முனை வலயக்கல்வி பணிப்பாளராக எம்.எஸ் சஹுதுல் நஜீம் நியமிக்கப்பட்டுள்ளார்.இதற்கு முன்னர் இவர்,சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிவந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணகல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் ஆகியோரிடமிருந்து நியமன கடிதங்கள் கிடைக்க பெற்றிருந்த மருதமுனையை சேர்ந்த எம்.எஸ் சஹுதுல் நஜீம், இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரியாவார்.

இவர்,கடமையை பொறுப்பேற்கும் நிகழ்வில்,கல்முனை மற்றும் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகங்களின் பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர், கணக்காளர், வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள், கல்முனை கல்வி வலய அதிபர்கள், வலயக்கல்வி பணிப்பாளர் சஹுதுல் நஜீமின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். விஞ்ஞான பட்டதாரியான நஜீம், விஞ்ஞான முதுமாணி கல்வி முதுமாணிப் பட்டங்களை பெற்றுள்ளார்.

15 வருட கல்வி நிர்வாக சேவையிலுள்ள நஜீம், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளருக்கான நேர்முகப் பரீட்சையில் தேர்வாகி இந்த நியமனத்தை பெற்றுள்ளார்.

இவரது நியமனத்தை முன்னிட்டு வலயக்கல்வி அலுவலக வளாகத்தில் மரக்கன்றுகளும் நடப்பட்டன.

2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் தேதி இலங்கை கல்வி கல்வி நிர்வாக சேவையில் இணைந்து கொண்ட இவர் , கடந்த 2019 மூன்றாம் மாதம் 12ஆம் தேதி தரம் 1 க்கு பதவி உயர்த்தப்பட்டார் . சம்மாந்துறை வலயக் கல்விப்பணிமனைக்கு 2014 மார்ச் மாதம் மூன்றாம் தேதி நியமிக்கப்பட்டார் .

எட்டு வருடங்களுக்கும் மேலாக சம்மாந்துறை வலயத்தில் சேவையாற்றி, தற்போது,கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளராக பதவி ஏற்றுள்ளார்.

# சுபீட்சத்தின் நோக்கு செயற்திட்டத்தில் வீடுகளைப் புனரமைக்கும் பணிகள்

(வாச்சிக்குடா விஷேட நிருபர்)

சுபீட்சத்தின் நோக்கு எனும் கருப்பொருளுக்கமைய 2022ஆம் ஆண்டின் சமுர்த்தி சௌபாக்கியா தேசிய வேலைத்திட்டம், சமுர்த்தி திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.இதனடிப்படையில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில், வீடுகளை நிர்மாணித்தல்,புனரமைத்தல் மற்றும் பகுதியளவில் புனரமைத்தல் ஆகிய பணிகள் இடம்பெற்று வருகின்றன.

தலா - 6, 50,000ரூபா நிதி ஒதுக்கீட்டில் 03 முழுமையான வீடுகளும் தலா 2,25,000 ரூபா நிதி ஒதுக்கீட்டில் 03 புனரமைப்பு வீடுகளும் தலா 1,25,000 ரூபா நிதி ஒதுக்கீட்டில் 03 புனரமைப்பு வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும். பிரதேச செயலாளர் வி.பபாகரனின் தலைமையின் கீழ் சில வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி வீடமைப்பு வேலைத்திட்டத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 125000 ஆயிரம் ரூபாவினை வழங்கி அவர்களது பங்களிப்போடு குறை வீடுகளைபூர்த்தி செய்யும் பணிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாக சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர்; எஸ்.சிவப்பிரியா தலைமையில் ஆலையடிவேம்பு தெற்கு சமுர்த்தி வலயத்திற்குட்பட்ட பகுதியில் இரண்டு வீடுகளின் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

நிகழ்வில் ஆலையடிவேம்பு தெற்கு வலய முகாமையாளர் ரி.கவிதா. கருத்திட்டஉதவியாளர் வி.சந்திரகுமார், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கே.பி.ராஜஸ்ரீ மற்றும் எஸ். மதனிகா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளராக அமீர் நியமனம்

( காரைதீவு குறூப் நிருபர் )



சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளராக, இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் அதிகாரியான எஸ். எம்.எம். அமீர் நியமிக்கப்பட்டுள்ளார்.இவர் கடந்த புதன்கிழமை (10) தனது பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார். முன்னாள் சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீம் மற்றும் கல்வி அதிகாரிகள், இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். சம்மாந்துறை வலய கல்வி பணிமனையில் பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்த அமீர் மருதமுனையைச் சேர்ந்தவராவார்.

இதேவேளை, சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளராகவிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள எம். எஸ் சஹுதுல் நஜீம், கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளராக பதவி ஏற்றமை குறிப்பிடத்தக்கது.




மூதூர், கட்டைப்பறிச்சானில் இரண்டு வீதிகளுக்கு பெயர் சூட்டி பெயர்ப் பலகை திறக்கப்பட்டன.இந்நிகழ்வு கடந்த (06) இடம் பெற்றது. இவ்வீதிகளில் ஒன்றுக்கு சங்கிலியன் தெரு என்றும், மற்றொரு வீதிக்கு பெரியார் தெரு என்றும் பெயர் சூட்டி பெயர்ப்பலகைகள் திறந்து வைக்கபட்டன. இந்நிகழ்வில் பேராசிரியர்களான அ.சண்முகதாஸ், சி.மௌனகுரு, சு.பாலசுகுமாரன் மற்றும் கனடா தமிழ் பாடசாலைகளின் தலைவர் ச.குகதாசன், மூதூர் பிரதேச சபை தவிசாளர் அரூஸ், சம்பூர் பொலிஸ் நிலைய பெறுப்பதிகாரி, கட்டைப்பறிச்சான் வட்டார பிரதேச சபை உறுப்பினர் ஜெயமாலா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படம்: அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

# இன்று கதிர்காம தீர்த்தம்! காட்டுப் பாதை மூடப்பட்டது



( காரைதீவு குறூப் நிருபர் )

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவத்திற்கான தீர்த்தம், இன்று (12) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.இதையொட்டிய இறுதி மகா பெரகரா நேற்று வியாழக்கிழமை இரவு கோலாகலமாக நடைபெற்றது.கடந்த மாதம் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, கடந்த 15 நாட்களாக இத்திருவிழா பெரஹர ஊர்வலம் நடைபெற்று வந்தது. இதேவேளை, கதிர்காம காட்டுப்பாதை மூடப்பட்டுள்ளது. கடந்த ஜூலை மாதம் 22 ஆம் திகதி திறக்கப்பட்ட இப்பாதை, ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி மூடப்பட்டது. இம்முறை 29 ஆயிரத்து 694 பேர், இக்காட்டுப் பாதையால் பயணித்திருந்தனர்.

பெரும்பாலும் பல சோதனைகள், துன்பங்களை இவர்கள் சந்தித்திருந்தனர்.

என்றுமில்லாதவாறு இம்முறை இவர்களது யாத்திரை பலத்த சோதனைகளுக்கு உள்ளாகி இருந்தது.

# சாராயம் விற்றவருக்கு அபராதம்

(பாலமுனை தினகரன் நிருபர்)

திருக்கோவில் பொலிஸ் பிரதேசத்திற்குட்பட்ட தாண்டியடி பகுதியில், அனுமதிபத்திரமின்றி சட்டவிரோத சாராய விற்பனையில் ஈடுபட்ட நபருக்கு 10,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

180 மில்லி லீட்டர் சாராயத்தையும், 625 மில்லி லீட்டர் பியர் ஆகியவற்றையும் அனுமதிப்பத்திரமின்றி இந்நபர் விற்பனை செய்துள்ளார்.

திருக்கோவில் பொலிஸார் இந்நபரை கைது செய்து அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிபதி எம்.எச். எம்.ஹம்ஸா முன்னிலையில் கடந்த செவ்வாய் கிழமை ஆஜர் செய்தார்.

இதன்போது மேற்படி குற்றங்களுக்காக 10,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அண்மைக் காலமாக திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அனுமதிபத்திரமின்றி போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுவோர் எண்ணிக்கை அதிகரிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# நிந்தவூர் பிரதேசத்தில் தொடர் கடல் அரிப்பு ; மின் கம்பங்கள் இழுத்துச் செல்லப்படலாமென அச்சம்



(நிந்தவூர் குறூப் நிருபர்)

நிந்தவூர் ஒன்பதாம் பிரிவு கிராம சேவகர் பகுதியில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் தொடர் கடலரிப்பு காரணமாக, மீனவர்களின் கட்டிடங்கள், வாடிகள் மற்றும் தென்னை மரங்கள் சேதமடைந்துள்ள நிலையில், தற்போது மின் கம்பங்களும் சேதமாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இக்கிராம சேவைப்பிரில் பல வருடங்களாக இடம்பெறும் தொடர் கடலரிப்பு பற்றி பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டபோதும், இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.இதனால், கடலரிப்பால் ஏற்படும் அபாயங்கள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில், இப்பகுதி வீதிகளிலுள்ள மின்கம்பங்கள் கடல் அலையால் இழுத்துச் செல்லப்படும் நிலைக்கு வந்துள்ளன. இவ்வாறு நிகழின், மின்சாரம் துண்டிக்கப்பட்டு பல அபாயகரமான நிலை ஏற்படுமென மக்கள் அஞ்சுகின்றனர். எனவே, இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இப்பிரதேச அரசியல்வாதிகளோ, இலங்கை மின்சார சபையோ, பிரதேச செயலகமோ, பிரதேச சபையோ அல்லது கரையோர பாதுகாப்புத் திணைக்களமோ உடன் செயல்பட்டு, மின்கம்பங்களையாவது பாதுகாப்பதற்கான அவசர நடவடிக்கைகளை எடுக்குமாறு இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# ஏறாவூர் காட்டுமாஞ்சோலை ஸ்ரீ வடபத்திரகாளி ஆலய வருடாந்த திருச்சடங்கு தீமிதிப்பு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

ஏறாவூர் 04 காட்டுமாஞ்சோலை ஸ்ரீ வடபத்திரகாளி ஆலய வருடாந்த திருச்சடங்கு, கடந்த 31.07.2022 அன்று திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி வியாழக்கிழமை (11) தீமிதிப்பு வைபவத்துடன் பெரு விழா நிறைவடைந்தது.

11 நாட்கள் கொண்ட இந்த திருச்சடங்கு விழாவுக்கு, பல பிரதேசங்களிலுமிருந்தும் ஏராளமானோர் கலந்துகொண்டு, நிகழ்வுகளைச் சிறப்பித்திருந்தனர். ஈழத்து வரலாற்றில் தீமிதிப்பு என்னும் நிகழ்வு, இந்த வடபத்திரகாளி அம்மன் ஆலயத்தில்தான் முதன் முதல் ஆரம்பமாகியதாக கூறப்படுகின்றது.

# அனாமிகா பண்பாட்டு மையம் திறந்துவைப்பு இலக்கிய மைல்கல்லாக திகழுமென நம்பிக்கை

(கிண்ணியா தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேச சேனையூரில் அனாமிகா களரி பண்பாட்டு மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.இதில், நூலகம், கலை கூடம், களரி, ஆவணக் காப்பகம், கணனி கூடம் என எதிர்கால சந்ததியினருக்கு பயன்பெறும் வகையில் பல விடயங்கள் உள்ளன. இந்த களரி பண்பாட்டு மையம்,அண்மையில்

திருவாளர் கலாநிதி பாலசிங்கம் சுகுமார் தலைமையில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தென்னிந்திய நடிகர் நாசர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். கலை கலாசார பண்பாட்டு அலுவல்கள் சார்ந்த முக்கிய பிரமுகர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். கூத்துக்கள், நாட்டார் இலக்கியங்கள் மற்றும் பண்பாட்டு பாரம்பரிய நிகழ்வுகள் என்று பல நிகழ்ச்சிகள் அரங்கற்றப்பட்டமை விஷேட அம்சமாகும்.

பேராசிரியர் பால சுகுமார் மற்றும் எழுத்தாளரும் சமூக ஆர்வாளருமான ரட்ணசிங்கம் ஆகியோரின் சிந்தனையில் உருவாகியுள்ள அனாமிகா பண்பாட்டு மையம், மூதூர் மண்ணில் ஒரு இலக்கியத்தின் மைல்கல்லாகவே கருதப்படுகிறது.

# தேசிய கல்வி நிறுவகம்

## விசேட கல்வி தொடர்பான டிப்ளோமா கற்கைநெறி – 2022

## விண்ணப்பம் கோரல்

தேசிய கல்வி நிறுவக உட்படுத்தற் கல்வித்துறையினால் நடாத்தப்படும் மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கற்கைநெறியின் இயல்பு :**

பார்வைக் குறைபாடு, கேட்டல் குறைபாடு, உடலியற் குறைபாடு, மந்தநிலை, ஒட்டிசம் நிலை, வேறு கற்றல் குறைபாடுகளால் ஏற்படுகின்ற கற்றல் பிரச்சினைகள் மற்றும் விசேட கல்வித் தேவைகளை எதிர்நோக்கும் மாணவர்களை இனங்கண்டு, அவர்களை விருத்தி செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வழங்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தும் பகுதி நேரக் கற்கைநெறியாகும். விரிவுரைகள் தேசிய கல்வி நிறுவகத்திலும், நிகழ்நிலை (Zoom) ஊடாகவும், தெரிவு செய்யப்பட்ட விசேட பாடசாலைகளில் செய்முறை அமர்வுகளும் நடைபெறும். உயர் கல்வி அமைச்சினால் பாடநெறி தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தராதர நியமங்களின் அடிப்படையில்(Sri Lanka Qualifications Framework) இக் கற்கைநெறி தயாரிக்கப்பட்டுள்ளது.

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்**

2022.09.10 அன்று 55 வயதிற்கு குறைந்தவராக இருத்தல்.

**க.பொ.த (உ/த)** சித்தியடைந்து இருத்தல்.

**அத்துடன்**

அரசாங்க அல்லது அரசாங்க அனுமதி பெற்ற பாடசாலையொன்றில் அல்லது பிரிவெனா ஒன்றில் ஆசிரியராக இருத்தல்.

**அல்லது**

தேசிய கல்வியியற் கல்லூரியொன்றில் அல்லது ஆசிரியர் கலாசாலையொன்றில் கல்வியியலாளராக இருத்தல்.

**அல்லது**

இலங்கை அதிபர் சேவையில் அல்லது இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ளவராக இருத்தல்.

**அல்லது**

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வியியல் அதிகாரி அல்லது விசேட கல்வித் தேவையுடைய பிள்ளைகளுக்கான ஒரு அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் அல்லது நிறுவனத்தில் கடமையாற்றுபவராக இருத்தல்.

**கற்கைநெறிக்குப் பயிலுனர்கள் தெரிவு செய்யப்படும் விதம் :**

நேர்முகப் பரீட்சையினூடாகப் கற்கைநெறிக்கான பயிலுனர்கள் தெரிவு செய்யப்படுவர்.

**கற்கைநெறிக் கட்டணம் விபரம்:**

| | |
|---|---|
| விண்ணப்பப்படிவக் கட்டணம் | ரூபா 200.00 |
| பதிவுக் கட்டணம் | ரூபா 1000.00 |
| கற்கைநெறிக்கட்டணம் | ரூபா 30000.00 |

**விண்ணப்பிக்கும் முறை :**

மேற்படி தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து தயாரித்த படிவத்துடன் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 607628 ஆம் இலக்க மகரகம இலங்கை வங்கிக் கணக்கிற்கு அல்லது ஏதாவது ஒரு இலங்கை வங்கிக் கிளையில் ரூபா 200/- செலுத்திய பற்றுச்சீட்டுடன் **பணிப்பாளர், உட்படுத்தற் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம** என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். காசுக் கட்டளையுடன் அனுப்பும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "**விசேட கல்வி டிப்ளோமா கற்கைநெறி –2022** எனக் குறிப்பிடுக.)

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி : 2022-09-10

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம.**
**2022-07-29**

# தேசிய கல்வி நிறுவகம்

**மகரகம**

## விசேட கல்வி டிப்ளோமா கற்கைநெறி விண்ணப்பப்படிவம் - 2022

1. முழுப் பெயர் :........................................................
2. தனிப்பட்ட முகவரி :........................................................
3. முகவரி (தொழில் புரியும் இடம் / நிறுவனம்) :........................................................
4. மொழி மூலம் :........................................................
5. அடையாள அட்டை இலக்கம் :........................................................
6. பிறந்த திகதி :........................................................
7. 2022.09.10 ஆந் திகதியில் வயது :........................................................
8. தொழில் :........................................................
9. தொலைபேசி இலக்கம் (கையடக்கத் தொலைபேசி) :........................................................
10. கல்வித் தகைமை

| க.பொ.த(உ.த) வருடம் | | க.பொ.த (சா.த) வருடம் | |
|---|---|---|---|
| பாடம் | தரம் | பாடம் | தரம் |
| | | | |

11. தொழில் தகைமை : ..............................................................................
..............................................................................

மேலே தரப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதியளிக்கிறேன்.

.......................................
**விண்ணப்பதாரியின் கையொப்பம்**

**திகதி:** .......................................

**For classified advertisements and for replies**

**received in response to advertisements published under Lake House box numbers**

Manager front office
**+94 112429341**
**Hotline 1949**

நிதி அமைச்சு

அபிவிருத்தி லொத்தர் சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தற்போதுள்ள லொத்தர் கூடங்களின் மீள் - வியாபாரக் குறியிடல் மற்றும் மீள் ஒட்டு வேலைகள்.

**விலை இல. :- DLB/PRO/2022/15**

நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள தற்போதுள்ள லொத்தர் கூடங்களின் மீள் - வியாபாரக் குறியிடல் மற்றும் மீள் ஒட்டு வேலைகளுக்காக ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பாக சிறிய பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

02. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனுக்கோரல் (NCB) முறைமையின் பிரகாரம் நடத்தப்படும்.

03. ஓர் மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணம் ரூ. 2,240.00 (வெட் 12% உடன்) செலுத்துவதன் பேரில் 2022.08.12 முதல் 2022.08.26 வரை (வேலை நாட்களில்) மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-02, யூனியன் பிளேஸ், கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்த இல. 356 அபிவிருத்தி லொத்தர் சபை, பெறுகைக் பிரிவின் வழங்குநரால் ஓர் எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம் மற்றும் இலவசமாகப் பரிசீலிக்கலாம். கட்டணம் செலுத்தும் முறை காசாக இருக்கும்.

04. விலைமனு ஆவணத்தின் பிரகாரம் ஓர் விலைமனுப் பிணையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. விலைமனு ஆவணங்களில் தேவைப்படுமாறு எல்லா விபரமான தகவல்களையும் விலைமனுதாரர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

06. விலை நிபந்தனைகளின் பிரகாரம், 2022.08.29 பி.ப. 2.30 மணிக்குப் பிந்தாமல், இலங்கை கொழும்பு 2, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்த, அபிவிருத்தி லொத்தர் சபை, சிறிய பெறுகைக் குழு, தலைவரை அடையுமாறு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தற்போதுள்ள லொத்தர் கூடங்களின் மீள் வியாபாரக் குறியிடல் மற்றும் மீள் ஒட்டு வேலைகள்" என்று குறிப்பிட்டு நகல்களுடனான விலை மனுக்கள் விநியோகிக்கப்படல் வேண்டும். அத்துடன் அதன் பிறகு கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்பட மாட்டாது.

07. விலைமனுக்கள் 2022.08.29 பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கொழும்பு-02, கலாநிதி கொள்வின் ஆர் டி சில்வா மாவத்த, இல. 356, அபிவிருத்தி லொத்தர் சபை, சிறிய பெறுகைக் குழு, தலைவர், அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் உள்ள பெட்டியில் வைப்புச் செய்யலாம் அல்லது விலைமனுக்கள் பதிவுத் தபாலில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2022.08.29 பி.ப. 2.30 இற்கு மூடப்படும். அத்துடன் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்படும் நேரத்தின் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

06. விலைமனு ஆவணங்களை அ.லொ.ச இணையதளம் **www.dlb.lk** இல் பார்வையிடலாம்.

**தலைவர்,**
**சிறிய பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா மாவத்த,**
**கொழும்பு-02.**
**தொ.பே- 011-4824824**
www.dlb.lk
12-08-2022

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**பரீட்சைகள் திணைக்களம்**

## 2022/2023 ஆம் ஆண்டிற்கு சுகாதார துப்புரவேற்பாட்டுச் சேவையை வழங்குவதற்கான விலைமனுக்களின் அழைப்பு

**Bid No.: (4/6/2/2022)**

1. பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஒரு வருட காலத்திற்கு சுகாதார துப்புரவேற்பாட்டு சேவையை வழங்குவதற்காக நிகரான சேவைகளை வழங்குவதில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவமுள்ள தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பரீட்சைகள் திணைக்கள பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் இப்போது அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 06 ஆம் பிரிவிற்கமைவாக பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழொன்றை விலைமனுதாரர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்கள, 3 ஆம் மாடியிலுள்ள வழங்கல் கிளையின் வழங்கல்களுக்கான உதவி ஆணையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொடர்பு தொலைபேசி : 011-2784393)
5. 2022.08.12 ஆம் திகதியிலிருந்து 2022.08.31 ஆம் திகதி வரையும் (இரண்டு நாட்களும் அடங்கலானது) வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 5,200 ரூபாவை இத்திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திய பின்னர் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்கள 3 ஆம் மாடியின் வழங்கல்களுக்கான உதவி ஆணையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2022.08.25 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பரீட்சைகள் திணைக்களத்தில் விலைமனு முன்னோடிக்கூட்டம் நடந்தேறும்.
7. விலைமனுக்கள் 90 நாட்களுக்கு (2022.11.30 ஆம் திகதி வரையும்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் 175,000 ரூபா பெறுமதியுள்ளதும் இலங்கையில் செயற்படும் புகழ்பெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரியில் தயாரிக்கப்பட்டதுமானதும் விலைமனுக்களைத் சமர்ப்பிக்கும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (2022.12.30 வரையும்) செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணைமுறியொன்றுடன் இணைக்கப்படல் வேண்டும்.
9. விலைமனுக்கள் 2022.09.01 ஆம் திகதியன்று பிப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் வழங்கல் பிரிவு, 3 ஆம் மாடி, பரீட்சைகள் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அவைகளை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''சுகாதார துப்புரவேற்பாட்டுச் சேவைக்கான ஏற்பாடு - 2022/2023 - ஒப்பந்த இல.: 4/6/2/2022'' என குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
11. திணைக்கள பெறுகைக் குழுவானது எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு மற்றும் விலைமனுக்கோரல் செயற்பாட்டை இல்லாதொழித்து அனைத்து விலைமனுக்களையும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எந்தவொரு வேளையிலும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதனால் அதன் மூலம் பாதிக்கப்பட்ட விலைமனுதாரருக்கு அல்லது விலைமனுதாரர்களுக்கு திணைக்கள பெறுகைக் குழுவின் செயற்பாட்டிற்கான காரணத்தை தெரிவிப்பதற்கு எவ்வித பொறுப்பையும் கடப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
**12.08.2022**

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல: 11/9/2/கனத்தலை/C7
காணி அமைச்சின் குறிப்பு இல: 4-3/16/2020/UD/241

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளை எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது மேலதிக விபரங்களுக்கு இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசின் 2284/43ஆம் இலக்க 2022.06.16ம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் பகுதி 111 ஐப் பார்க்க

**அட்டவணை**

| | |
|---|---|
| 1. மாகாணம் | : வடமத்திய மாகாணம் |
| 2. மாவட்டம் | : அநுராதபுரம் |
| 3. பிரதேச செயலாளர் பிரிவு | : கிழக்கு நுவரகம் பலாத்த |
| 4. கிராம உத்தியோகத்தர் பிரிவு | : இல. 251, 2ம் கட்டம் 1ம் பகுதி |
| 5. கிராமம் | : அநுராதபுரம் நகரம். |
| 6. வரைபட இல. | : இறுதி நகர வரைபட இல அ 3 இன் பிற்சேர்க்கை இல. 308 இன் தாள் இல 308 |
| 7. துண்டு இல. | : துண்டு இல. 4302, 4303, 4305, 4306, 4307, 4308, 4309, 4310, 4311, 4312, 4313, 4314, 4316, 4317 (14 காணித் துண்டுகள்) |
| 8. முழு விஸ்தீரணம் | : 0.1808 ஹெக்டயார் |

**ஈ.எம்.ஆர்.பீ.பி. ஏக்கநாயக்க**
**பிரதேச செயலாளர்**
**கிழக்கு நுவரகம் பலாத்த பிரதேச செயலாளர் பிரிவு**
**அநுராதபுரம்**

**கிழக்கு நுவரகம் பலாத்த பிரதேச செயலகம்**
**அநுராதபுரம்**
**2022.08.09**

**வலு சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு**

# இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## நீடிப்பு அறிவித்தல்

## யாழ்ப்பாண விமான நிலையத்திற்கு 15,000 லீற்றர் கொள்ளளவுடைய 02 எண்ணிக்கையான எரிபொருள் நிரப்பிகளை வடிவமைத்தல் மற்றும் வழங்குதல்

**B/25/2022**

மேற்படி தலைப்பின் கீழ் இந்தப் பத்திரிகையில் பிரசுரமான விளம்பரத்தின் பிரகாரம் ஏற்கனவே குறித்த விலைமனுக்களை பெற்றுக்கொண்ட வளமுள்ள மற்றும் இந்த விலைக்கோரல் செயற்பாடுகளில் பங்குபற்ற ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கவனத்திற் கொள்ளுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது. இந்த விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த இறுதி முடிவுறுத்தல் நேரமான 2022-08-15ஆம் திகதி பி.ப. 2.00 மணியானது தற்போது 2022-08-31ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும் (2022-11-30ஆம் திகதி வரை) மற்றும் விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். (2022-12-28ஆம் திகதி வரை)

முன்னைய விளம்பரத்தில் உள்ள ஏனைய அனைத்து நிபந்தனைகளும் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர்**
**(பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆம் மாடி, இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09,**
**தொலைபேசி : 011-5455331**
**தொலைநகல் : 011-5455424**

**சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு**

# இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**(சுத்திகரிப்புப் பிரிவு)**

**பகிரங்கக் கேள்வி – 4414T**

## உருக்குத் தகடுகளை (CARBON STEEL PLATES) வழங்குதல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, இலங்கை, களனிய, சப்புகஸ்கந்த சுத்திகரிப்புப் பிரிவு, திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வெளிநாடுகளிலுள்ள அவர்களது அதிகாரம்பெற்ற ஏற்றுமதியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) விலைகோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முழுமையாக அமையும் வகையில் மேற்குறிப்பிட்ட பொருளை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு கேள்விதாரரும் கேள்வியைச் சமர்ப்பிக்கும்போது வேண்டுகோள் கடிதத்துடன் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 1,000.00 ரூபாவை 2022 செப்டெம்பர் 05ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் கொழும்பு - 09, இல. 609, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தின் 05ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் செலுத்துதல் வேண்டும் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பணியகத்தின் காசாளிடம் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். மேலும் சகல கொடுப்பனவுகளையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்தின் ஊடாக கேள்வி இலக்கம் மற்றும் கேள்விதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணத்தை செலுத்தலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com எனும் இணையதளங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளன.

மாற்றுவழியாக கேள்வி ஆவணங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் 2022 செப்டெம்பர் 07ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, அன்றைய தினமே உடனடியாக அவைகள் சுத்திகரிப்பு நிலைய மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருள்வளம்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சப்புகஸ்கந்த, களனி, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

**சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு**

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**(சுத்திகரிப்புப் பிரிவு)**

**பகிரங்கக் கேள்வி – 4430T**

### வெப்ப பரிமாற்றிகளை (HEAT EXCHANGER) வழங்குதல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, இலங்கை, களனிய, சப்புகஸ்கந்த சுத்திகரிப்புப் பிரிவு, திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வெளிநாடுகளிலுள்ள அவர்களது அதிகாரம்பெற்ற ஏற்றுமதியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) விலைகோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முழுமையாக அமையும் வகையில் மேற்குறிப்பிட்ட பொருளை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு கேள்விதாரரும் கேள்வியைச் சமர்ப்பிக்கும்போது வேண்டுகோள் கடிதத்துடன் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 12,500.00 ரூபாவை 2022 செப்டெம்பர் 05ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் கொழும்பு - 09, இல. 609, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தின் 05ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் செலுத்துதல் வேண்டும் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பணியகத்தின் காசாளிடம் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். மேலும் சகல கொடுப்பனவுகளையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்தின் ஊடாக கேள்வி இலக்கம் மற்றும் கேள்விதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணத்தை செலுத்தலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com எனும் இணையதளங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளன.

மாற்றுவழியாக கேள்வி ஆவணங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் 2022 செப்டெம்பர் 07ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, அன்றைய தினமே உடனடியாக அவைகள் சுத்திகரிப்பு நிலைய மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருள்வளம்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சப்புகஸ்கந்த, களனி, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

---

**சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு**

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**(சுத்திகரிப்புப் பிரிவு)**

**பகிரங்கக் கேள்வி – 4437T**

### வெப்ப பரிமாற்றிகளுக்கான உதிரிப்பாகங்களை (SPARES FOR HEAT EXCHANGER) வழங்குதல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, இலங்கை, களனிய, சப்புகஸ்கந்த சுத்திகரிப்புப் பிரிவு, திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வெளிநாடுகளிலுள்ள அவர்களது அதிகாரம்பெற்ற ஏற்றுமதி யாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) விலைகோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முழுமையாக அமையும் வகையில் மேற்குறிப்பிட்ட பொருளை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு கேள்விதாரரும் கேள்வியைச் சமர்ப்பிக்கும்போது வேண்டுகோள் கடிதத்துடன் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 3,500.00 ரூபாவை 2022 செப்டெம்பர் 05ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் கொழும்பு - 09, இல. 609, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தின் 05ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் செலுத்துதல் வேண்டும் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பணிகத்தின் காசாளிடம் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். மேலும் சகல கொடுப்பனவுகளையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்தின் ஊடாக கேள்வி இலக்கம் மற்றும் கேள்விதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணத்தை செலுத்தலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com எனும் இணையதளங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளன.

மாற்றுவழியாக கேள்வி ஆவணங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் 2022 செப்டெம்பர் 07ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, அன்றைய தினமே உடனடியாக அவைகள் சுத்திகரிப்பு நிலைய மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருள்வளம்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சப்புகஸ்கந்த, களனி, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

---

**சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு**

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**(சுத்திகரிப்புப் பிரிவு)**

**பகிரங்கக் கேள்வி – 4438T**

### வெப்ப பரிமாற்றி “U” டியூப்களை (HEAT EXCHANGER “U” TUBES) வழங்குதல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, இலங்கை, களனிய, சப்புகஸ்கந்த சுத்திகரிப்புப் பிரிவு, திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வெளிநாடுகளிலுள்ள அவர்களது அதிகாரம்பெற்ற ஏற்றுமதியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) விலைகோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முழுமையாக அமையும் வகையில் மேற்குறிப்பிட்ட பொருளை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு கேள்விதாரரும் கேள்வியைச் சமர்ப்பிக்கும்போது வேண்டுகோள் கடிதத்துடன் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 3,500.00 ரூபாவை 2022 செப்டெம்பர் 05ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் கொழும்பு - 09, இல. 609, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தின் 05ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் செலுத்துதல் வேண்டும் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பணியகத்தின் காசாளிடம் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். மேலும் சகல கொடுப்பனவுகளையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்தின் ஊடாக கேள்வி இலக்கம் மற்றும் கேள்விதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணத்தை செலுத்தலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com எனும் இணையதளங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளன.

மாற்றுவழியாக கேள்வி ஆவணங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் 2022 செப்டெம்பர் 07ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, அன்றைய தினமே உடனடியாக அவைகள் சுத்திகரிப்பு நிலைய மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருள்வளம்)**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சப்புகஸ்கந்த, களனி, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

---

**மத்திய மாகாணம்**

**வலயப் பொருளாதார அபிவிருத்தி நிறுவகம்**

## கேள்வி கோரல்

### மத்திய மாகாணத்தில் நிலைபேறான பயண முடிவுகளின் அபிவிருத்திக்கான செயற்றிட்டம்

2022ஆம் ஆண்டில் மத்திய மாகாண வலயப் பொருளாதார அபிவிருத்தி நிறுவகத்தின் பெறுகைக்குழுத் தலைவரினால் மத்திய மாகாணத்தில் நிலைபேறான பயண முடிவுகளின் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ், மூன்று காட்சிப் பலகைகளைத் தயாரித்துப் பொருத்துவதற்காக கீழ்க்காணப்படும் விபரங்களின் பிரகாரம் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

காட்சிப்பலகைகள் நிறுவப்பட வேண்டிய இடங்கள்:-

- கண்டி புகையிரத நிலையத்திற்கு அருகில்
- மாத்தளை நகரம்
- சீகிரிய

- ஒப்பந்தக்காலம் - 2022 செப்டம்பர் 02 முதல் 12 வரை
- முழுமையான காட்சிப்பலகையின் அளவு - உயரம் 10அடி அகலம் 20 அடி
- பெனல்களின் எண்ணிக்கை - 5
- பெனலொன்னறின் அளவு - உயரம் 7 அடி, அகலம் 4 அடி (படம் மற்றும் விபரங்கள் உட்பட)
- ஒவ்வொரு பெனலினதும் தயாரிப்பு மொத்த உயரம் - 13 அடி (ஆதாரம் நில மட்டத்திலிருந்து 3 அடி ஆழம் உட்பட)
- அமைவான நிலத்திலிருந்து பலகை வரையான உயரம் - 3 அடி
- ஆதாரம் நில மட்டத்திலிருந்து ஆழம் 3 அடி (நிறுவப்பட வேண்டிய முறை G20 கொங்கிறீட் பாதம் அடி 1x1x11/2 ஆகுதல் வேண்டும்)
- உயர்தரத்திலான அலுமினியம் (ISO சான்றுள்ள பொக்ஸ்பார் (ஆதாரத்திற்காக 2” x 2”) மற்றும் பவுடர் கோட்டட் கறுப்பு நிறம் பூசப்பட்ட Matt முடிவுடன் கூடிய உயர்தரத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், (High Quality box bar (ISO Certified) with Powder coated black paint (Matt Finishing) 10 வருட பொறுப்புக் கூறுங்காலம்.
- அச்சு எழுத்துக்கள் மற்றும் படங்கள் மங்கலாகாமல் இருப்பதுடன், பெனலானது தெளிவாகப் பார்க்கக் கூடிய 2 மி.மி. கனமான பிளாஸ்டிக் மூடியுடன் இருத்தல்.
- பெனலுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய படங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய இடங்கள் மற்றும் உள்வாங்கப்பட வேண்டிய விபரங்கள் எமது நிறுவனத்தினால் வழங்கப்படுவதுடன், படங்கள் உயர் தரத்தில் இருத்தல் வேண்டும்.

காட்சிப்பலகைகளைத் தயாரித்தல் தொடர்பான அனுபவமும் தகைமைகளும் உள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பணிப்பாளர், வலயப் பொருளாதார அபிவிருத்தி நிறுவகம், இரண்டாம் மாடி, புதிய மாகாண சபைக் கட்டிடம், 109, யட்டிநுவர வீதி, கண்டி என்ற முகவரியில் அல்லது 081-2232447/ 2232465 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் வார வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.15 வரை அழைத்து இதற்கான விபரப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்து விலைமனுக்களும், செப்டம்பர் 02 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது நேரில் ஒப்படைக்கப்படலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**வலயப் பொருளாதார அபிவிருத்தி - நிறுவகம்,**
**இரண்டாம் மாடி, புதிய மாகாண சபைக் கட்டிடம்,**
**109, யட்டிநுவர வீதி,**
**கண்டி.**

---

### தெஹிவளை - கல்கிஸ்ஸ மாநகர சபையின் பெறுகை அறிவித்தல்

## மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களுக்காக கொள்வனவாளர்களிடமிருந்து விலைமனுக்கள் கோருதல்

தெஹிவளை - கல்கிஸ்ஸ மாநகர சபையின் படோவிட மீள்சுழற்சி நிலையத்தில் சேரும் பின்வரும் மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களுக்காக கொள்வனவாளர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| • பெட் போத்தல், | • சிரட்டைகள் |
| • கண்ணாடி போத்தல் துண்டுகள் (நிறமற்ற) | • பிளாஸ்டிக் |
| • கண்ணாடி போத்தல் துண்டுகள் (நிறமுள்ள) | • பொலித்தீன் |
